கல்கி

புத்தாண்டு சிறப்பிதழ்

KALKI
12.4.87
ரூ. 1.50





10000 கண்ட காவஸ்கர் பேட்டி


ஹோம் கலெக்ஷன்
பாம்பே டையிங்
"டிராபிகல் பாம்ஸ்"
இல்லத்தினுள்ளே இயற்கையின் இன்னுலகம்.
ஷீட்ஸ் • டவல்ஸ் • ஃபர்னிஷிங்ஸ்
டுக்கை விரிப்புகள்—சொகுசான படுக்கை விரிப்புகளின் புதிய அலை. பாலிகாட் சுருக்கமற்ற படுக்கை விரிப்புகள்
பாகேல், ஸூப்பர்கேல் பருத்தியிழை விரிப்புகள்—பிளெய்ன் மற்றும் பிரின்ட்டெட். ஃபர்னிஷிங்ஸ்—ஐரோப்பிய
யிலழகின் சாயல். வியப்பூட்டும் ஹோம் கலெக்ஷன். உமது வீட்டின் ஒவ்வொரு பகுதிக்கும், வாழ்வின்
ம்பட்ட நிலைக்கும்.

கே.ஏ.கே. உதிர்த்த தத்துவம்



கே.ஏ.கே.





பெண்ணின் கல்யாணக் காட்சிகளை வீடியோவில் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார் கே.ஏ.கே. புன்சிரிப்பு மாறாமல் வரவேற்றார்.

"வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டேதான் இருக்கும். ஏற்றங்களைக் கண்டு ரொம்ப மகிழவும் கூடாது; தாழ்வுகளைப் பார்த்துத் தடுமாறவும் கூடாது. இப்போது உணர்ச்சி வசப்பட்டால், நாம் பட்ட கஷ்டங்கள், செய்த தொண்டுகள், மறக்கப்பட்டுவிடும்" என்று கூறினார்.

"என்ன இப்படி ஒரே தத்துவார்த்தமாகப் பேசுகிறீர்களே" என்று வினவ, "துயரங்களும் சந்தோஷங்களும் மாறி மாறி வந்து, என்னைப் பக்குவப்படுத்தியிருக்கின்றன" என்றார். "அதற்கு நான் படித்த, திரும்பத் திரும்பப், படிக்கிற நூல்களும் உதவியுள்ளன."

"அவை என்ன நூல்கள்?"

"இதோ இப்போது வி.வி. கிரியின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து வருகிறேன்" என்று கூறி எடுத்துக் காட்டினார். "இதில் ஓரிடத்தில் மாபெரும் மனிதரான ராஜாஜி, தாம் ஒரு தவறு செய்துவிட்டதாகக் கருதி அதற்காக வருந்தி கிரிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இவர்களிடமிருந்தெல்லாம் நாம் அடக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஷேக் அப்துல்லாவைப் பல ஆண்டுகள் கொடைக்கானலில் சிறை வைத்திருந்தார்கள். அப்போது அவர் மன அமைதி பெறத் திரும்பத் திரும்பப் படித்த நூல் எது தெரியுமா? ராஜாஜி எழுதிய மகாபாரதத்தின் (வியாசர் விருந்து) மொழி பெயர்ப்புத்தான்! சென்றமுறை பதவி பறிக்கப்பட்டபோது கூட நான் ராஜாஜியின் ராமாயணத்தைத்தான் படித்தேன்" என்றார் கே.ஏ.கே.!



புள்ளிகள்



நாகத்திடமிருந்து தப்பிய நாயனார்!

ஒரு விவசாயக் கூலிகள் போராட்டத்தின் போது ஒரு போலீஸ்காரர் ஒரு கால்வாயில் தவறி விழுந்து இறந்து போக, கிளர்ச்சியாளர்கள்தான் அவரைக் கொன்றுவிட்டனர் என்று பழி சுமத்தி, கையூர் கிராமத்தையே சுற்றி வளைத்தது போலீஸ் பட்டாளம். 21 வயது நாயனாரும் அவர் நண்பர்களும் காட்டில் புகுந்து பதினேழு நாட்கள் சோறு தண்ணீர் இன்றி மறைந்து வாழ்ந்தார்கள். அப்போது ஒரு மரத்தடியில் இவர் சோர்ந்து சாய்ந்தபோது, ஒரு பெரிய ராஜ நாகம் இவர் கவனியாத சமயம் இவர் காலடிக்கு வந்துவிட்டது. மூச்சு விடவும் அஞ்சி, பிணம் போல் கிடந்தார். பாம்பு அவர் கால் மீதாக ஊர்ந்து போய்விட்டது! கொத்தப்படாமல் தப்பினார் நாயனார்.

நாயனார் முதலில் காங்கிரஸில்தான் இருந்தார். காந்தி குல்லாயுடன் பள்ளிக்குப் போய்ப் பரிகாசத்துக்குக் கூட உள்ளானார். ஆனால் ராஜேந்திர பிரசாத் ஒருசமயம் அவரைத் தூக்கிக் கொஞ்சியபோது, பரிகசிக்கப்பட்டதால் ஏற்பட்ட வருத்தம் மறைந்தே போனது.

காங்கிரஸின் சில போக்குகளால் வெறுப்புற்ற நாயனார் ஈ.எம்.எஸ், ஏ.கே.கோபாலன் தலைமையில் சோஷலிஸ்ட்டாகவும் பிறகு கம்யூனிஸ்ட்டாகவும் மாறினார். சிறு வயதிலேயே அரசியலில் குதித்துவிட்டதால் படித்தது பள்ளிப் படிப்பு வரைதான்!

பேராயர் பதவியில் காசிமீர்

"மனிதனுக்கு நன்மை செய்யத்தான் மதங்கள் இருக்கின்றன; ஆனால் தற்போது இது பின்னணிக்குத் தள்ளப்பட்டு மத அமைப்புக்கள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இந்நிலை மாற வேண்டும்" என்று கூறுகிறவர் சென்னை—மயிலை பேராயராகப் போப்பாண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் ஞா. காசிமீர். ராமநாதபுரம் மாவட்டம் ஞாராணம் கிராமத்தில் பிறந்த இவருக்கு வயது 62. "சில மத அமைப்புக்கள் அரசியலிலும் செல்வாக்கை உபயோகிக்க நினைக்கின்றன. இது கண்டிக்கத் தக்கது" என்கிறார்.

"மத மாற்றங்கள் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?"

"மதிக்கப்படாவிட்டால் மதம் மாறுவோம்" என்று கல்கியில் ஒரு கட்டுரை எழுதியிருந்தீர்கள். 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எழுதியதை அந்தக் கட்டுரைக்கு முன்னுரையாகவும் தந்திருந்தீர்கள். அதைத்தான் நானும் கூறுகிறேன். மனிதன் மதிக்கப்பட வேண்டும். எல்லா மதங்களும் நல்லதையே போதிக்கின்றன. அந்தந்த மத அமைப்புக்கள் சமூகத்தைச் சரியாகக் கவனித்தால் மத மாற்றங்களே நிகழாது."

புதிய பேராயருக்குத் தெரிந்த மொழிகள் தமிழ் தவிர ஏழு! பத்து வருடங்கள் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் பேராசிரியர், பிரின்ஸிபால் பதவிகளை வகித்தவர். பத்தொன்பது ஆண்டுகள் ரோம் நகரில் இயேசு சபையில் பணியாற்றியிருக்கிறார்.

குருமூர்த்தி வணங்கும் குருமூர்த்தி

இன்று இந்தியப் பத்திரிகைகள் மட்டுமின்றி உலகப் பத்திரிகைகளின் கவனத்தையும் கவர்ந்திருப்பவர் குருமூர்த்தி. ஆனால், "முதன்முதலில் என் படத்தையும் பேட்டியையும் வெளியிட்டது கல்கிதான்" என்று மகிழ்ச்சியோடு கூறுகிறார் குருமூர்த்தி. 'நேற்றும் நாளையும்' என்ற தலைப்பில் பல மாணவர்களைப் பேட்டி கண்ட கல்கி, அப்போது விவேகானந்தா கல்லூரியில் படித்து வந்த குருமூர்த்தியின் கருத்துக்களையும் கேட்டிருந்தது.

தொழில் ரீதியாக ஆடிட்டரானபோதிலும் குருமூர்த்தி பல சட்டங்களைக் கரைத்துக் குடித்திருக்கிறார். ரிலையன்ஸ் பற்றி இவர்தான் எழுதுகிறார் என்பது இவரது நெருங்கிய நண்பர்களுக்குக் கூடத் தெரியாது! 'யாரோ குருமூர்த்தியாம்' என்று அந்த குருமூர்த்தியை இந்தக் குருமூர்த்தியிடமே பாராட்டிப் பேசியவர்கள் உண்டு!

குருமூர்த்திக்கு நேரம் கிடைத்தால் பரமாச்சார்யாளைத் தரிசிக்கக் காஞ்சிக்குப் போய் விடுவார். அப்படி தரிசித்து, ஆத்ம பலம் பெற்றுத் திரும்பிய ஒரு நாள் நள்ளிரவில் தான் போலீஸ் கதவைத் தட்டியது! ஜாமீனில் விடுதலையாகிச் சென்னை வந்ததும் நேரே காஞ்சிபுரம் பயணம். "உனக்கு ஒண்ணும் ஆகலையே? எப்படி நடத்தினார்கள்?" என்று அந்த அன்புள்ளம் விசாரித்ததைக் கூறி நெகிழ்ந்து போகும் குருமூர்த்தியும் அவரது மூன்று சகோதரர்களும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். "எங்கள் வீட்டில் தினம் இருபது பேருக்குச் சமையல் நடக்கும்" என்று பெருமையுடன் குறிப்பிடும் இவருக்குச் சொந்த ஊர் விழுப்புரம் அருகே பாணாம்பட்டு.

—கௌசல்யா

புகைப்படங்கள்: சுபா

எம்.எல்.ஏ. 1: நான் எம்.எல்.ஏ. ஆன பிறகு என் தொகுதியில் ஒன்றுமே நடக்கலே!

எம்.எல்.ஏ. 2: என் தொகுதியில அப்படி இல்லே: ரெண்டு தடவை துப்பாக்கிச் சூடு நடந்திருக்கு!

— கடுவை கோபால்சாமி



— கண்ணன்




இ·காங்கிரஸ்
மக்கள்
மற்ற எதிர்க்கட்சிகள்
அகாலி தளம்
மார்க்சிஸ்ட்
ஜனதா
உங்களுக்காகப் புது வீடு கட்டிக்கிட்டு இருக்கோம்!
அயல் நாடுகளில் கள்ளப் பணம் வைத்திருக்கும் இந்தியர்
அவர் கிட்ட ஒண்ணுமில்லே!
போஃபர்ஸ் நிறுவனம்
வி·பி·சிங்
என்னாலே தண்ணி கொடுக்க முடியல்லே! பக்கெட் வெச்சுக்குங்கோ!
இலவச பக்கெட்



கல்கி

1987 ஏப்ரல் 12
மலர் 45 இதழ் 37
அக்ஷய பங்குனி 29



பொன்மொழி உதிர்த்தால் போதுமா?

"அரசின் பொருளாதாரக் கொள்கை என்பது தொழிலகங்களுக்கு முதலுதவி தருவதல்ல; தொழில் துறையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி வகுப்பதே!" என்ற ராஜீவின் கருத்தை ஒரு பொன்மொழி என்றே வர்ணிக்கலாம். "தொழில்—பொருளாதாரத் துறைகளில் கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள கொள்கை மாற்றங்களுக்கு ஏற்ப, எதிர்பார்த்த அளவில் தொழில் வளம் பெருகாததற்கு ஒரு காரணம், மாநில அரசுகளும் மத்திய அரசைப் பின்பற்றிக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாததுதான்" என்று சுட்டிக்காட்டிய பிரதமர், "மத்திய அரசைப் பொறுத்தமட்டில் தொழில் வளப் பெருக்கத்துக்கு உகந்த கொள்கைகளையே தொடர்ந்து பின்பற்றும்" என்று உறுதி அளித்தார்.

தென்னிந்திய வர்த்தக சங்கத்தில் மேற்சொன்ன விதமாகப் பேசிய பிரதமர், நெய்வேலி இரண்டாவது அனல் மின்நிலையத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், "எல்லா அரசுத் துறை நிறுவனங்களும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் போலவே, லாப நோக்குடனும் திறமையாகவும் சமுதாயப் பார்வையுடனும் செயல்பட வேண்டும்" என்றார். "அரசுத் துறை நிறுவனங்களின் நஷ்டத்தை ஈடு செய்வதே மத்திய அரசுக்குக் காரியமாக இருந்து வந்தால், அபிவிருத்திப் பணிகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும்" என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் பேசும்போது, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். "நமது கல்வி வேலையில்லாப் பட்டதாரிகளை உருவாக்குவது மட்டுமல்ல; வேலைக்கே லாயக்கற்றவர்களை உருவாக்குகிறது!" என்று ஒரு போடு போட்டார். "கல்வி என்பது அறிவு புகட்டுவது மட்டுமல்ல; முழு மனிதனை உருவாக்குகிற பணி அது" என்றார்.

கொள்கை அளவில் பிரதமரின் பேச்சுக்கள் ஒவ்வொன்றும் கேட்பதற்கு மிகவும் நன்றாக ஒலித்தன. ஆனால் பிரதமர் பேசினால் மட்டும் போதாது. செயலில் இறங்க வேண்டும். கல்லூரிப் படிப்பு கிடக்கட்டும். சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்குப் பிறகும் எழுதப் படிக்கவே தெரியாதவர்களின் தொகை நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதேயொழியக் குறையக் காணோம். இந்த அவமானத்தைத் துடைத்து எறிய வேண்டாமா? வழி என்ன? ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டுவிட்டீர்கள். ஒரே ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை நிறுத்தி வையுங்கள். அதற்குப் பதில் கல்விக்கென்றே ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்து, அமுல்படுத்துங்கள். நிதி வசதிகளை ஒட்டு மொத்தமாக அதற்கே செலவிடுங்கள். நாட்டின் நல்லறிஞர்களின் யோசனைகளை ஏற்று ஒரு சிறந்த கல்வித் திட்டத்தை உருவாக்கிக் கொடுங்கள்! மத்திய, மாநில அரசு யந்திரங்கள் முழுவதும் இதற்கே முடுக்கி விடப்படட்டும். ஏட்டுக் கல்வி தவிர, குழந்தைகளுக்கு உழைப்பார்வம், ஜனநாயகப் பற்று, தேச பக்தி, ஜாதி மத பேதங்களைக் கடந்த மனிதாபிமானம், தனி நபர் சுகாதாரம், சுற்றுப்புறச் சூழலின் தூய்மைப் பராமரிப்பு; உடல் ஆரோக்கியம் பேணுதல் போன்றவற்றைக் கற்றுக் கொடுங்கள். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய எதிர்கால இந்தியா உருவாவதைக் கண்ணுக்கு மெய்யாகக் காணலாம். இப்படி யுத்த கால முயற்சி போல் ஒரு தீவிரப் போராட்டம் நடத்தித்தான் அறியாமை அரக்கனை விரட்ட முடியும். இதற்காகும் செலவு வீண் அல்ல. உன்னத நிலைக்கு உயரப் போகும் இந்தியாவுக்குப் பலமான அஸ்திவாரம் போட்டதாக இருக்கும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பைப் பெற, பிரதமர், அவர்களுடன் பத்திரிகைகள், ரேடியோ, டி.வி. ஆகியவை மூலம் தொடர்பு கொள்ள வேண்டும்.

தொழில்—பொருளாதார மேம்பாட்டுக்காகச் சமீபத்தில் ஆரோக்கியமான கொள்கை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது உண்மையே. சமீபத்திய வங்கி வட்டி விகிதக் குறைப்பும் தொழில் துறைக்கு உதவுவதற்காகவேதான். தேசிய சேமிப்புப் பத்திரங்கள், கம்பெனி டெபாஸிட்டுகள் போன்றவற்றில் சேமிப்பு செய்யும் மத்திய தர வகுப்பினருக்கு ஒரு சதம் வட்டி இழப்பு என்பது கூடப் பெரிய தியாகம்தான் என்றாலும் நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதார முன்னேற்றம் கருதி இந்தத் தியாகத்தை அவர்கள் சந்தோஷமாக ஏற்பார்கள். ஆனால் அவர்கள் ஒத்துழைப்புக்கு ஒரு நிபந்தனையும் உண்டு! அது, உள்நாட்டிலும் சரி, அயல் நாட்டிலும் சரி, சட்ட விரோதமாகப் பணம் குவிக்கச் சிலருக்கு மட்டும் சலுகை அளிக்கப்படுகிறது என்ற சந்தேகம் மக்கள் உள்ளங்களில் நீக்கப்பட வேண்டும். ஃபேர்ஃபேக்ஸ் விவகாரம் போன்றவற்றில் ஒளிவு மறைவு ஏதுமில்லை என்பது நிரூபணமாக வேண்டும். சட்டத்தின்முன் அனைவரும் சமமாக நடத்தப்படுகின்றனர் என்று மக்களுக்கு நம்பிக்கை பிறக்க வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

1

விளக்கு வெளிச்சம் வட்டக் கம்பளமாய் அந்த நடு ஹாலில் பரவியிருந்தது.

வெளிச்சத்தின் விளிம்பில் முரளிதரன் நின்று கொண்டிருந்தான். லலிதா சற்றுத் தள்ளி ஹால் இருட்டில் ஒற்றைச் சோபாவில் சுருண்டு உட்கார்ந்திருந்தாள்.

குளிர்க் காற்று திரைச் சீலைகளை ஒரு முறை தோளில் தூக்கிப் போட்டுச் சுகமாய் நழுவ விட்டது. மறுபடியும் காற்று தோளில் தூக்காதா என்பது போல் திரைச்சீலைகள் ஜன்னல் சட்டத்தோடு ஒட்டிக் கொஞ்சம் வெளிப்பக்கமாய் உப்பிக் காற்றுக்குக் காத்திருந்தன. இந்த முறை காற்று திரைச் சீலைகளை நெஞ்சில் கை வைத்துத் தள்ளியதைப் போல் மெல்லப் பின்னுக்குத் தள்ளி விட்டுப் போய் விட்டது.

திரைச் சீலைகள் இன்னும் நகர்ந்து வெளிப் பக்கமாய்க் காற்று எங்கே என்பது போல் எட்டிப் பார்த்தன. காற்று சரக்கென்று சீறிப் புகுந்து உவ்வோய் என்ற கூச்சலோடு உள்ளே வந்தது. திரைச் சீலைகள் பயத்தோடு எகிறின. படபடத்தன. உள்ளே நுழைந்த காற்று அதே வேகத்தில் மறுபடியும் ஜன்னல் பக்கம் போயிற்று. திரைச் சீலைகள் இப்போது வெளியே எகிற காற்றுக்கு வழிவிட்டன.

'சீய்... வெக்கங்கெட்டவனே!' என்பது போல் நொடித்துக் கொண்டன.

இரண்டு துணிப் பெண்களை, இளம் சகோதரிகளை, ஒரு காற்றுப் பையன் சுற்றிச் சுற்றி வந்து வம்படித்துக் கொண்டிருக்கிறான். அந்த இரண்டு திரைச் சீலைப் பெண்களுக்கும் காற்றின் வருகை கொண்டாட்டம். ஆனால் ஒரு வெட்கம். காற்று வரும் போது கலவரம். ஆனாலும் ஒரு சந்தோஷம். இடித்து நகர்த்தும் போது ஒரு பதற்றம். ஆனாலும் ஒரு சுகம்.

நடுஹாலில் மெல்லிய இருட்டில் நின்று இந்த அசைவுகளைப் பார்க்கிற போது இப்படித்தான் தோன்றுகிறது.

காற்று வேகமும், துணியின் அசைவும் கூட இங்கே சந்தோஷமாக இருப்பதாய்ப் படுகிறது. மழையின் வருகையும், புற்களின் சிலும்பலும் குதூகலம் என்று தோன்றுகின்றன. உலகத்தின் எல்லா அசைவுகளும் மகிழ்ச்சியைச் சொல்லுகின்றன.


பார்த்துக் கொண்டிருக்கிற எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு துக்கம் சேர்ந்தது? என்னை மட்டும் ஏன் ஆணி அடித்துச் சிலுவையில் மாட்டி இருக்கிறது? ஒருவேளை நானும் சந்தோஷமாய் இருப்பின், காற்றுப் போல் துள்ளிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தால் உலகத்தின் அசைவு கண்ணில் பட்டிருக்காதோ? துக்கப்பட்ட மனசுதான் சகல அசைவையும் ஊன்றிக் கவனிக்குமோ?

எனக்கு மட்டும் ஏன் இப்படி? என் துக்கம் எது...? லலிதாவா...?

லலிதாவிடம் இதைப் பகிர்ந்து கொள்ள முடியுமா? லலிதாவுக்கு இப்படித் தோன்றுமா? இல்லை 'புல்ஷிட்' என்று இதையும்




நிழல் யுத்தம்
பாலகுமாரன்



"உனக்கு வாழ்க்கையோட தத்துவத்தைச் சொல்லிக் கொடுத்ததே கணக்கு வாத்தியார்தானு? அதெப்படி?"

"அவர்தானே கடன் வாங்கிக் கழிக்கச் சொன்னவர்!"

— இளை அ. கதிர்வேல்

ஒதுக்கி விடுவாளோ?

ஒரு கீற்றுக் கூரை. அதன் விளிம்பில் இரண்டு சணல் கயிறுகள். ஒன்று ஆண்; மற்றது பெண். ஆணின் பெயர் கந்தன். பெண்ணின் பெயர் வள்ளி. பாரதிக்கு வெற்றுச் சணல் கயிறுகள் ஆணும் பெண்ணுமாய்த் தோன்றின. அவன் கண்ணெதிரே சரசம் செய்தன. 'லலிதா! உனக்குப் பாரதியைத் தெரியுமா?'

ஆனல் இரண்டு பக்க ஜன்னலின் திரைச் சீலைகளை ஆணும் பெண்ணுமாய்க் கொள்ள முடியவில்லை. இரண்டும் சகோதரிகள். ஒரே மாதிரி ஜாடை உடைய இரட்டைப் பிறவிகள்.

காற்று ஆண். இது குளிர்காலம். காற்று வாலிபமாய் இருக்கிறது. விடலையாய்த் துள்ளுகிறது. உரசுகிறது. திமிர் காட்டுகிறது. மழைக்காலக் காற்றுக்கு நடுத்தர வயசு. திருமணமாகி இரண்டு பெற்ற ஆண் மாதிரி காற்று நடந்து கொள்ளும். மழைக் கம்பிகளோடே நிதானமாய், கனமாய் நடந்து போகும். வெயிற் காலத்தில் காற்றுக்கு வயதாகி விடும். நெடுமூச்சு விடும். சுருண்டு தூங்கும். காற்றுக்கு எது குழந்தைப் பருவம்? இலையுதிர் காலம். சருகுகளோடே காற்று தளர் நடை போடும். புழுதியை மெல்லக் கிளறிப் பார்க்கும். விடியலில் தரையெல்லாம் ஈரம் பண்ணும்.

காற்று ஆண். காற்று பிராணன். காற்று உயிர். உயிர் எப்படித் தெரியும்? உடல் வேண்டும். காற்று ஆண் எனில் உடல் பெண். உயிரைச் சுமந்து கொண்டிருக்கிற பெண். இங்கு உடலாய்த் துடிப்பது திரைச் சீலைகள். உயிராய் இருப்பது காற்று. காற்று நடவடிக்கை திரைச் சீலையில் தெரிகிறது. காற்று இல்லையெனில் திரைச் சீலைகள் செத்த உடலாய்க் கிடக்கும். ஜீவனற்றுப் போகும்.

ஆண் இயக்கத்தால் பெண். பெண் இருப்பதால் ஆண். ஆணற்றுப் பெண்ணுக்கு இயக்கம் இல்லை. பெண் இல்லாத ஆண் இயக்கம் யாருக்கும் தெரிவதில்லை.

இது பாரதிக்குத் தெரிந்திருக்கிறது. அதனல்தான் வெற்றுச் சணல் கயிறுகள் கூட ஆணும் பெண்ணுமாய்த் தெரிகின்றன.

ஆனல் இது லலிதாவுக்கு ஏன் தெரியவில்லை? இருட்டில் சுருண்டு கிடந்தாலும் வெறுப்போடு தன்னைப் பார்ப்பதை உணர முடிகிறது. லலிதா இடிந்து போய்விடவில்லை. இடிந்து போகவும் மாட்டாள். சற்று முன் சொன்னதை யோசித்துக் கொண்டிருக்கிறுள். ஒவ்வொரு வார்த்தையாய் மறுபடியும் மனசுக்குள் போட்டு அறுத்து விளைவுகள் யோசித்துக் கொண்டிருக்கிறுள்.

உடனே பதில் சொல்கிற ஜாதியில்லை லலிதா. திட்டமிடுவது பற்றி மிகச் சிறிய வயதிலேயே சொல்லிக் கொடுத்து வளர்ந்த பெண். எடை போட்டு இறக்கி, கூட்டிக் கழித்து, கணக்குத் தவறுனுலும் நஷ்டமில்லாதபடி கூடுதலாய் விலை வைத்து, நல்ல லாபம் என்று தெரிந்தால் கொஞ்சம் குறைத்துக் கொள்வது போல் சலுகை காட்டி,வாழ்க்கையை வியாபாரம் என்று நினைத்து விட்ட பெண்.

தனக்கு அந்தக் கெட்டிக்காரத்தனம் இல்லை. கைக்கொள்ள முயன்றபோது கலையாய்ப் பரிணமிக்க முடியவில்லை. கெட்டிக்காரத்தனம் கனமாகப் போயிற்று. கனம் தாங்கி தள்ளாடித் தள்ளாடிப் பத்து வருடங்கள் நடந்து களைத்துப் போய் 'ச்சீ' என்று சுமையை உதறிவிட, சோகமும் களைப்பும் நெஞ்சை அழுத்துகின்றன.

ஏன் இவளை மனைவியாய் ஏற்றேம் என்கிற வேதனை... பத்து வருடங்கள் பாழாய்ப் போயிற்றே என்கிற களைப்பு.

எனக்கும் அப்படித்தான். உங்களை இழுத்துண்டு போக வேண்டியிருக்கே. எல்லா இடத்துலயும்னு... எனக்கும் களைப்புத்தான். உடம்பில் நோய் வந்தால் மருந்து போடலாம். மனசே நோய்ப் பட்டதுன்னு...? புத்திலபோலியோ வந்த ஆம்பளை நீங்க... ஆரோக்கியமா ஓடி ஆட முடியாது... ஆடறவங்களையும் பார்க்க முடியாது. சூம்பின காலுக்கு பூட்ஸ் இருக்கு. புத்திக்கு?"

"சரி. புரிஞ்சு போச்சுல்ல... இப்ப என்ன பண்ணப் போறே?"

"நீங்க சொல்லுங்க..."

"பிரிஞ்சுடுவோம்."

லலிதா மௌனமாய் இருந்தாள்.

இந்த ஆபாசம் போதும் லலிதா. நமக்குள்ளே இடைவெளி அதிகமாயிட்டே வருது! ரொம்பத் தொலைவுக்குப் பிரிஞ்சுறப் போறேம்னு படுது. தொடர்பே இல்லாத நிலை அதிகமாறது. இதுக்குப் பெரு குடித்தனம் இல்லை. நாம் பிரிஞ்சிருவோம். விவாகரத்து செய்துக்குவோம். பசங்களை நெனைச்சா ரொம்பக் கவலையா இருக்கு. நம்ம சண்டை அதுகளுக்குப் புரியற வயசு இல்லை. அதுகளுக்குப் புரியற வரைக்கும் சேர்ந்து வாழற தகுதி நமக்கில்லை."

"ஸோ..."

லலிதா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஒரு ஸைலண்ட் டைவர்ஸ் செய்துக்குவோம். இந்த வீட்டில் இந்த ரூம்ல எந்த கோர்ட்டும் நீதிபதியும், வக்கீலும் இல்லாம நாம விவாகரத்து வாங்கிக்குவோம்.

''இந்த வழக்கு வெளியே போனால் ஊர் சிரிக்கும். குழந்தைகள் நொந்து போகும். புரியாமல் விழிக்கும். ஆயிரம் தாறு கற்பனை பண்ணி அவஸ்தைப்படும். ஊர் பேச்சு அடியாகி உள்ளம் நொந்து போகும். இரண்டு வயசு மூன்று வயசு குழந்தைகளா இருந்தால் கூடத் தப்பிச்சுக்கும். பன்னிரண்டு வயசுப் பொண்ணு. பத்து வயசுப் பையன்... இரண்டும் நிஜம் தாங்காமல் கருகிடும்.

''நம்மையும் சித்திரவதை பண்ணிக்காத நம்ம குழந்தைகளையும் சித்திரவதை செய்யாம இருக்கிற ஒரே வழி இதுதான்...

''ஸைலண்ட் டைவர்ஸ். நமக்குள்ளேயே நாமே தீர்மானிக்கிற விவாகர்த்து. பிரிவுன்னு இடம் மாறுதா? வெவ்வேற வீட்டுக்குப் போய் வாழுறதா...? என்னிக்கு மனசு பிரிஞ்சுதோ, அப்புறம் என்ன விவாகம், என்ன உறவு....?''

''உங்களால் முடியுமா...?'' லலிதா கேட்டாள்.

ஆக லலிதாவுக்கு இது பிடித்துவிட்டது. நல்ல யோசனை என்று பட்டுவிட்டது. செயல் முறை வடிவம் உடனே யோசிக்க ஆரம்பித்து விட்டாள். இந்த விடுதலைக்குக் காத்திருப்பது போல் கேள்வி கேட்கிறாள்.

''முடிஞ்சதும் முடியாததும் நம்ம கிட்டே இருக்கு.

''உங்களால் முடியுமான்னு கேட்கறேன்!''

''நாம பேசினதை யாராவது கேட்டுட்டு இதெல்லாம் வேண்டாம் இன்னும் கொஞ்ச நாட்கள் அவளோட அட்ஜஸ்ட் பண்ணிண்டு இருன்னுதான் கஷ்டம். முடியாதுன்னு சொல்ல வேண்டியிருக்கும்.''

''குட். வெரிகுட்.'' லலிதா கைகொட்டிக் கொண்டு தலையாட்டிப் பேசினாள். க்ரேட் என்று தோள்களைக் குலுக்கினாள்.

''ஒரே இடத்துல இருக்கும்படியா நிர்ப்பந்திக்கப்பட்ட ஆணும் பெண்ணுமாய் நாம் இருப்போம்.''

புருஷன் பெண்டாட்டிக்குள்ள இருக்கிற கரமம், காதல், அன்பு, பாசம், பிரியம் எதுவுமில்லாத... ஒரு ரயில் பெட்டில எதிரும் புதிருமா அவரவர் பிரச்னையோட அவரவர் பிரயாணப்படற மாதிரி...''

''கால் பட்டிருச்சா சாரிங்கற போலி மரியாதையோட....

''யெஸ்... போலி மரியாதையோட.... என்ன ஸ்டேஷன் இதுன்னு கேட்டால் தெரியலேன்னு உதடு பிதுக்கித் தோள் குலுக்கற அசட்டுக் கௌரவத்தோட....''

''ம்ம்ம்... அடுத்த ஸ்டேஷன் வந்தா நாமே கவனிச்சுப் படிக்கணும். எதிர் சீட்டு ஆளைக் கேட்கக் கூடாதுன்னு கோவத்தோட...''

''கோவத்தோட...''

''எதிரே இருந்தாலும் இல்லாத மாதிரி நினைப்போட.''

''ம்ம்... நினைப்போட...''



அருள்வாக்கு

நடைமுறையில்செய்துகாட்டி நல்லதை விளைவிக்கும் ஒழுங்குமுறைதான் தர்மம் என்பது. இந்த நடைமுறைக்கு ஆதார தத்துவமாக ஓர் அடிப்படை இருக்க வேண்டும். ஓர் ஒழுங்கு என்றால் அது அப்படிப்பட்ட ஒழுங்கிலே இருக்கிறது என்பதை உணர்த்துவதாக ஓர் அடிப்படை உண்மை இருக்க வேண்டும். தீபாலங்காரம் செய்யும்போது வட்டமாக, சதுரமாக, கோணமாகப் பல வரிசைகளில் தீபங்களை வைத்தால் அந்த ஒழுங்கிலே மனஸுக்கு ஒரு நிறைவு தெரிகிறது. ஏதோ ஓர் ஒழுங்கிலே வளைத்தும் நீட்டியும் கோலம் போட்டிருந்தால் அதைப் பார்க்கிறபோது ஒரு ஸந்தோஷம், எதுவோ ஒன்று ரொம்ப ஸரியாயிருக்கிறது என்ற ரஸிப்பு உண்டாகிறது. வட்டமோ, சதுரமோ, வளைவோ, கோணமோ கொஞ்சம் கோணலாக இருந்தால் மனஸுக்கு என்னமோ போல் இருக்கிறது. எதனாலென்றால் இந்த வெளி ஒழுங்குகளுக்கு ஆதாரமாக ஏதோ ஓர் உள்ளொழுங்கான தத்துவம் இருக்கிறது. கண்ணுக்கு வெளி ஒழுங்கு தெரிகிறமாதிரி, நம் உள்ளுக்குள்ளே, உள்ளத்துக்குள்ளே அந்தத் தத்துவத்தைப் பற்றி நமக்குத் தெரியாமலே ஒரு ஞானம் இருக்கிறது. எனவே, அதற்கு இது — வெளியிலே ஒழுங்கு செய்திருப்பது — ஒத்துப் போகிறபோது மனஸில் நிறைவு உண்டாகிறது.

இதேமாதிரி சுத்தமான அந்தக்கரணமுள்ள ரிஷிகள் முதலான மஹான்களுக்கு உள்ளுக்குள்ளே ஸ்வச்சமாகத் தெரிந்த ஓர் அடிப்படைக்கு ஒத்துப் போவதாக வெளியிலே பின்பற்ற வேண்டிய அநேக ஒழுங்குகளைத்தான் ஒழுக்கம் என்று வைத்து தர்ம வாழ்க்கையை அமைத்திருக்கிறது. இதற்கு அடிப்படையாய் உள்ளே ஒருதத்துவம் இருக்கிறது என்றேனே, அது என்னவென்றால், அதுதான் 'ஸத்யம்' என்பது. நம்முடைய வெளி அறிவுக்கும் புரிகிற மாதிரி இந்த ஸத்யத்தை எடுத்துச் சொல்பவையே வேத, உபநிஷத, சாஸ்திரங்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருக்கணும்...''

''எதிர் சீட்டுக்கு இடைஞ்சல் பண்ணாம இருக்கணும்... அவங்க அவங்க ஸ்டேஷன் வரும். இறங்கி மறையற நேரம் வரும். பேசாம இறங்கிப் போயிட வேண்டியது தான். போகும்போது சொல்லிக்கணும்னு அவசியமில்லை!''

''முடியுமா?''

''வேறே வழி?''

''உங்களால் முடியுமா?''

''அறுத்து எறிஞ்சுட்டுப் போக முடியும். சங்கிலி பிடிச்சு இழுத்து நிறுத்தி, தப்பான ட்ரெயின் ஏறிட்டேன்னு வேற ட்ரெயின் மாற முடியும். ஊர் சிரிக்கும். கோர்ட், கேஸ்னு நடக்கணும். அபராதம் கட்டணும். எதுக்கு இத்தனை... கூடாது.''

''ஸோ...''

''எதிர் ஸீட் ஆளைப் பிடிக்கலே. முகத்தைத் திருப்பி ஜன்னல் வழியா வேடிக்கை பார்த்துட்டு வரப்போறேன்.''

''குட், தட்ஸ் வெரீ குட்.''

''இந்த க்ஷணம் முதல்...''

''நானும் நீங்களும் பொண்டாட்டி புருஷன் இல்லே. என் குழந்தைகள்...''

''தப்பு.... நம்ம குழந்தைகள்.''

''சரி, நம்ம இரண்டு குழந்தைகள் மேல் உங்களுக்கு என்ன உரிமை,...? எனக்கு என்ன உரிமை?''

''இரண்டு தண்டவாளத்து மேல், ட்ரெயின்ல போறவானுக்கு என்ன உரிமை உண்டோ அந்த உரிமை உண்டு.''

''குழந்தைகள்தான் பிடிப்பா...?''

''ஏன் உனக்கு இல்லையா?''

''உண்டு.''

''அப்புறம்?''

''ஐ அக்ரி. தேங்க்யூ...'' கைநீட்டிக் குலுக்கினாள். நடந்து ஹால் சோபாவுக்குள் புதைந்து கொண்டாள். சுருண்டு உட்கார்ந்தாள். கைகட்டி யோசனை செய்ய ஆரம்பித்தாள்.

முரளீதரன், இடம் விட்டு அசையாமல் காற்றையும் ஜன்னல் திரைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். மெல்ல நடந்து ஜன்னலருகே போய்க் காற்று எங்கே காணோம் என்று வேடிக்கை பார்த்தான்.

காற்று தூங்கி விட்டது.

மரங்கள் அசையாதிருந்தன.

களைத்துப் போயிருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

பளிச்சென்று மின்னல் வெட்டிற்று. காத்திருந்தான். இடி இடித்தது.

மெல்ல ஜன்னல் கதவுகளை மூடினான்.

மழை அடையாய் இறங்கிற்று. மின் விளக்குகள் சட்டென்று அணைந்தன. லலிதா என்று கூவல் நெஞ்சுள் எழுந்தது. அடக்கிக் கொண்டான். லலிதாவுக்குப் பயம் இல்லை. பயம் வரவும் வராது. இருட்டு தனக்கு பயம். இனிமேல் பழகிக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

போதுமடா

போதுமடா
பார்த்தது — போதும் போதும்!

* பட்ஜெட்டில் உனக்கென்று
ஒன்றுமில்லை
பாராளுமன்றத்தின்
திக்கை நோக்கிப் பார்த்தது போதும்!

* மந்திரி வண்டி
வெளியே வருவது.
உன்
உடம்புக்கொரு துணி தர அல்ல....
மூனிக்
கம்பத்திலே
கொடியேற்றப் புறப்படும்
வண்டியின்
குறுக்கே நிற்காதே
போதுமடா பார்த்தது

* எச்சில்
இலைகள் விழுமென்று
கல்யாண மண்டபத்தைக்
கண்களால் விழுங்காதே

நாய்களைக்
காப்பாற்றும் நம்
ஜனநாயகத்தின் பற்களில்
உன்
அப்பா அம்மா ரத்தக் கறை
அப்படியே இன்றும் இருக்கிறது
போதுமடா பார்த்தது!





உருப்படாது..

நல்லாத் தெரியுதடா சாமி! இந்த
நாடு
உருப்படாது!

* எல்லாத்துக்கும்
  விடிவு — இதோ
  விரிஞ்சு கிடக்குதுன்னு
  காட்டருடா பொம்பளை
  கண்ணுவிப்
  படத்திலே...

* கண்ணுப் பிதுங்க உனக்கு
  எக்கச்சக்கமாக்
  கனுக்கள்...
  புண்ணுப் பட்ட மனசுக்குப்
  புதுசு புதுசாக்
  கற்பனைகள்
  போட்டுக்கடா தூக்க மாத்திரை

* சாராயக் கடையை
  மூடினு என்ன? நீ
  கொட்டாய் இல்லாத ஊரிலா
  குடியிருக்கிறாய்?
  போ! போ!
  உன்னைக்
  கட்டித்தழுவ அப்படியே காசைப்பறிக்கப்
  பட்டப் பகல்லேயும் தெருவோரம்
  கைவிரிச்சு மெய்விரிச்சுக்
  காத்துக் கிடக்கிறு....
  சினிமா மோகினி!

கவிதைகள்: தமிழன்பன்

புகைப்படங்கள்: சதீஷ் சர்மா

நமக்கேது நேரம்

இந்திய இளைஞனே!
இவன் ஏன் இப்படிப் பார்க்கிறான்?

சுவரொட்டியை நெருங்கிப் பார்க்க
முயலும்போது
வயிறொட்டிக் கிடப்பவன் ஏன்
வழியில் இருக்கிறான்

தண்ணீரில் கிடப்பவளைத்
தரிசிக்க நினைக்கும்போது
தீமிதித்துக் கொண்டிருப்பவன் ஏன்
திரும்பிப் பார்க்கிறான்

நிழலின் குளிர்ச்சியில்
நிலைமறக்கும் நெஞ்சங்கள்
நிஜத்தின் தகிப்பை ஏன்
நினைக்கவில்லை என்று?.

தொலைக்காட்சியில் செய்திகளை
வாசிப்பவரின் இமைகள்
துல்லியமாய்த் தெரியும்போது
நடைபாதையில் நாளெல்லாம்
வசிப்பவளின் சுமைகள்
நமக்கேன் தெரியவில்லை என்று?
கல்லறைகள்தான் நமக்குக்
கவர்ச்சியாய்த் தெரியும்
கோவில்கள் வௌவாலின்
கூடாரங்கள் ஆகும்

இந்தியா கிரிக்கெட்டில்
ஜெயித்துவிட்டால் போதும்
இவன் கவலை அறிவதற்கு
நமக்கேது நேரம்!





தேசத்து ராசாக்கள்

தேசத்து ராசாக்கள்
தெருவோரம் போருக
தெருவோரம் பாதமெல்லாம்
தேயத்தேயப் போருக

மலைமேலே தோட்டம்வெச்சி
மாடாட்டம் ஒழைப்பாக
மத்தியான கூழுக்கு
மடியேந்தி நிப்பாக

எங்களோட பண்ணைக்கு
இடுப்பொடிய வேலைசெஞ்சி
பொழுதெல்லாம் புலியோடு
போராட்டம் எங்களுக்கு

ஆடுக ஜெவிக்கும்போது
ஆளுவெச்சி கூப்பிடுங்க:
அப்பவந்து பாத்தாதான்!
அடிவயிறு குளிருங்க!

தேசத்து ராணியெலாம்
தெருவோரம் போருக
தெருவோரம் பாதமலர்
தேயத்தேயப் போருக

எங்க ஊரு எம்.எல்.ஏ.க்கு
ஏகப்பட்ட செருப்புங்க
எடுத்தெறிஞ்க பேசுறதா
எல்லாரும் சொல்ருக!

கவிதைகள்:
தெ. அமரசிகாமணி

குடிமகனா? வாக்காளனா?



தலைவனே!
இந்தியாவின்
தளகர்த்தனே!

நீ மேலே
நான்
வறுமைக்கோட்டிற்குக் கீழே

அந்த
எழுத்துக்களைப் போலவே
என்
எதிர்காலமும் புரியவில்லை,

என் தாய்
காலையில் போனவள்
வரவில்லை;
தண்ணீர் பிடிக்கப் போனவள்

என் தந்தை
மாலையில் போனவர்
வரவில்லை;
'தண்ணி' குடிக்கப் போனவர்!

இந்த நாட்டில்
கங்கையிலும்
எங்கள்
கண்களிலும் மட்டுந்தான்
வெள்ளப் பெருக்கு

தலைவா!
'கற்கக் கசடற' என்கிறாயா?

பள்ளிக்கூடம்
என்
வீட்டை விட விலை அதிகம்

ஜனநாயகத்திற்குக்
குடிமகன் தேவையில்லை,
வாக்காளன் போதும்

தலைவனே!
அந்த
எழுத்துக்களைப் போலவே
என்
எதிர்காலமும் புரியவில்லை

ஆறு கால பூஜை
அவர்களுக்கு

ஆறு வேளைத் தொழுகை
உங்களுக்கு

பெரியவரே!
நீர் இந்துக்களுக்குப் பங்காளி!

இந்த மண்ணை அகழும்
கடப்பாரை
இந்த
இரண்டு கலாசாரத்தில்தான் இடிக்கும்

மறந்துவிடக் கூடாது
மதங்கள் சிந்திய ரத்தந்தான்
மண்ணைச்
செம்மண் ஆக்கியது

இன்னொரு யுத்தத்தை
இந்த மண் தாளாது!

இன்னொரு யுத்தம்
எழுமாயின்

பூமியைப் பாராமல்
சூரியன் முகம் திருப்பும்

கடல்நீர்
பெட்ரோலாய் எரியும்!

மீண்டும்
உயிர்கள் கருக்கொள்ள
ஒருகோடி வருஷமாகும்!


வேண்டாம்!
அமைதியின் தொட்டிலில்
உலகம் உறங்கட்டும்!

பெரியவரே!
எமக்காக நீர் கும்பிடும்!

உமக்காக
யாம் தொழுகிறோம்!

கவிதைகள் : வைரமுத்து

விண்ணப்பம்



கால்கள் நிற்பதற்கல்ல

கோடை மனிதன் ;
வாடை வனிதை

ஓவியச் செய்தியில்
மனம் ஒன்றியிருக்கும்
ஒப்பனைப் பெண்ணே!

கொஞ்சம் உன்
முகத்தைத் திருப்பு —
இது என்ன?
கறுப்புக் கண்ணாடியால்
பார்வையை
ஒளிக்கிற பாவனை?

வரலாற்றுக் கட்டங்களிலே
அவனும் நீயும்!

ஒரு பெரிய பள்ளத்தாக்கு
உங்களுக்கிடையே!

இது ஒரு
நாகரிக இடைவெளி!
ஆனால்,
நயமான தனிமை,
சுயதேடல் இனிமை
என்பதெல்லாம்
பொய்ம்மை!

காலத்தின் இரைச்சலைக்
காதில் வாங்கு:
ஓலமிடும் உள்ளங்களோடு
உறவாடு உணர்வோடு.
கால்கள் நிற்பதற்கல்ல
நடப்பதற்கே!





ஒரு தனிப் பாடலின் காகித உறவு

சமுதாயக் கழனியில்
விடுபட்டுப் போன
சின்ன நாற்றே!

காகித உறவு தேடி
உன் கால்களில் சக்கரம்!
உன் வாழ்க்கைப் பயணம்?
வறுமைத் தண்டவாளத்திலா

அன்றையக் கண்ணன்
கைகளில் புல்லாங்குழல்;
இன்றையக் கண்ணன்
முதுகிலோ சணல் பைகள்!

தான் வளரத்
தானே நீரிறைத்து
ஊற்றிக் கொள்ளும்
தளிரே!
நீ, யார் இயற்றிய
தனிப் பாடல்?

கதிரவன் கண் திறந்ததால்
உனக்கொரு
நிழல் துணை கிடைத்ததோ?

பார்க்கலாம்!
உன்னைக் கடந்து செல்லும்
மனித இலக்கியங்களில்
எந்தக் காப்பியம்
உன்னை
இடைச்செருகலாக அல்ல,
வாழ்த்துப் பாவாக
ஏற்றுக் கொள்ளப் போகிறதென்று!

கவிதைகள்: நிர்மலா சுரேஷ்



தன்னுடைய கால்களும்
தரையில் படாமல்
ஒருவன்
வேக வேகமாய்
விரைந்து போகிறான்!

நீயோ —
கால்களால் மட்டும்
மிதித்து நடந்தால்
பூமியின்
கௌரவம் குறையுமென்று
கைகளாலும்
தட்டிக் கொடுத்தபடி
தரை மீது போகிறாய்!

நீதான்
சாலைக்கும் கூடச்
சமத்துவம் கொடுப்பவன்!

குறுக்கே வளர்வது
விலங்கென்று கூறுவார்!
இந்த நாட்டில்
குறுக்கு வழியில்தானே
மனிதர்கள் வளர்கிறார்!

இந்தப் புகைப்படம்
எடுத்துக் காட்டுவது
தரையின் மீதொரு
தத்துவம் அல்லவோ?

"வாகனம் சிலருக்கு
வாய்க்கிறது!
வேறு சிலர்
வாகனம் போலவே
வாழுகின்றனர்...."

தத்துவ தரிசனம்

ஜெயவர்த்தனம்

கைகளில் துப்பாக்கி!
கால்களின் கீழே
சத்தமில்லாமல் மிதிபடுவது
சமாதானப் பூக்கள்!

ஒவ்வொரு இதழாக
உதிர்ந்து கொண்டிருப்பது
உலக அமைதி!

குலுக்கிக் கொள்ளும்
கைகளைக்

குறிபார்த்தே
உதைக்கும் கால்கள்
உலா வருகின்றன!

ஜெயவர்த்தனேக்கள்
சிரிக்கிற வரைக்கும் —
பொய்யில் தொடங்கி
மையில் முடங்கும்
பேச்க வார்த்தைகளால்
பிரயோஜனம் என்ன?

கவிதைகள்: மு. மேத்தா




மிஞ்சமுடியாதது தகர்க்க முடியாதது ஈடு இணையற்றது
இண்ட்டர்நேஷனல் டூரிஸ்ட்டர்
LINTAS VIP IT 5 20 28 TM





சீதை சொன்ன கதை

சீதைக்குக் கல்யாணம். வீட்டில் குதூகலம் பொங்கி வழிந்தது. பார்க்கப் போனால் கல்யாணம் நிச்சயம் செய்வதில் சிரமமிருக்கக் கூடிய பெண்கள் வகையைச் சேர்ந்தவளல்ல சீதை. அழகில் ரம்பை, ஊர்வசி என்று சொல்லலாம். பொருளாதாரப் பாடத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவள். பொதுவாகப் புத்திசாலிப் பெண். இப்படிப்பட்ட சீதைக்கு வரன் நிச்சயிப்பதில் ஒரு கஷ்டமும் இருக்க முடியாதென்றாலும் இந்த வரன் நிச்சயமானதில் வீட்டிலுள்ள அனைவருக்கும் சீதை அதிர்ஷ்டசாலி என்று சொல்லி முடியாத ஆனந்தம். நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை பிரசித்தி பெற்ற எழுத்தாளன் என்பதுதான் இதற்குக் காரணம். இளம் பிராயத்திலேயே ஆந்திர தேச மக்கள் அனைவர் நாவிலும் நடமாடும் எழுத்தாளன் அவன். அவனது உண்மைப்பெயர் ஆஞ்சநேய சாஸ்திரி என்றாலும், 'சந்தன்' என்ற புனை பெயரையே ஒவ்வொருவரும் அறிந்திருந்தனர்.

ஒருநாள் கல்லூரி வகுப்பறையில் ஸரோஜா ஒரு கதையைப் பற்றிப் பேச்செடுத்தாள். அது சம்பந்தமாக அவளுக்கும் மற்ற சக மாணவிகளுக்கும் இடையே பலத்த வாக்குவாதம் எழுந்து, சண்டையாகி பரஸ்பரம் ஒருவரோடு ஒருவர் பேசுவது நின்று போகுமளவுக்குப் போய்விட்டது. அன்று சீதைக்கு அவர்கள் போக்கைக் கண்டு வெறுப்பு ஏற்பட்டது. ஆம் அவளுக்குக் கதைகள் எழுதுவது அதைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பது பற்றி ஒருவித கருத்து உண்டு. அதாவது சிறையில் கைதிகள் செய்த நாற்காலிகள், கூடைகள், எம்பிராய்டரி வேலை செய்த துண்டுகள் ஆகியவை எவ்வாறு வெளியில் விற்பனைக்கு வருகின்றனவோ, அவ்வாறு எழுத்தாளர்கள் பத்திரிகை ஆபீஸ் என்னும் சிறையில் அடைக்கப்பட்டுப் படைக்கும் விஷயங்களே இக்கதைகள் என்பது சீதையின் எண்ணம்.

ஒருநாள் சீதை சோர்வோடு சாய்ந்த படி உட்கார்ந்திருக்கையில், ஸரோஜா, "ஹாய் சீதா" என்று ஒரே உற்சாகமாக ஓடி வந்து விழுந்தாள். அவளைப் பார்த்ததும் சீதை இன்னும் கொஞ்சம் சோர்ந்து போனாள்!

"என்னடி இப்படி இருக்கிறாய், இவ்வளவு டல்லாக? எனக்கோ உன்னை, உன் அதிர்ஷ்டத்தை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை? ஹா! ஹவ் லக்கி யூ ஆர்! 'சந்தன்' என்றால் யார் தெரியுமா? நமக்குள்ள மூன்று நான்கு பிரசித்தி பெற்ற எழுத்தாளர்களில் ஒருவராக்கும்! அவர் கதைகள் என்றால் ஓ! என்னால் சொல்லி முடியாது! அந்த அழகினை, அனுபவங்களை நீ படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமடி!" என்றாள் தன்வசமிழந்த நிலையில்.

சீதை மேலும் கொஞ்சம் சோர்ந்து போனாள். இப்படிப் பேசிய ஸரோஜாவுக்கு என்ன பதில் சொல்வது என்ற யோசனையில் ஆழ்ந்து போனாள். ஆனால் ஸரோஜா அதைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல், "அவருடைய கதைகளில் நீ என்ன படித்திருக்கிறாய், சொல் பார்க்கலாம்!" என்று கேட்டாள்.

அவள் என்ன சொல்வாள்! மொத்தத்தில் சீதை எந்த எழுத்தாளருடைய கதையையும் படித்தவள் அல்ல. இந்நிலையில் 'சந்தனை'ப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது!

"நான் ஒன்றும் படித்ததில்லை, அவரது கதைகள் மட்டுமல்ல, யாருடைய கதையும் நான் படித்ததில்லை" என்றாள் சீதை தைரியமாக. ஸரோஜா ஒரு கொலைகாரியைப் பார்ப்பதுபோல் சீதையைப் பார்த்தாள். கொலையை நேரில் பார்க்கும் ஒருவன் எப்படி வார்த்தை வெளிவராமல், 'திக் பிரமை' அடைந்துவிடுவானோ அந்தநிலையிலிருந்தாள் ஸரோஜா. சீதையின் வார்த்தைகளைக் கேட்டு, ஸரோஜாவுக்கு ஒருபக்கம் சீதையினிடம் பரிதாபம் ஏற்பட்டாலும் அடுத்த கணம் பொறுமையும் கொண்டாள். இந்த ஜடத்தைக் கொண்டு அவர் தலையில் கட்டி ஏனோ இப்படிச் சந்தனுக்கு அநீதி விளைவிக்கிறார்கள் என்று பெரிதும் துக்கப்பட்டாள்.

சீதை ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தாள். இதற்குள் ஓர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்ட ஸரோஜா, இனி தான் 'கீதோபதேசம்' செய்யாமலிருக்க முடியாது என்று பேச ஆரம்பித்தாள்.

"சீதா, உன் கணவர் உன்னை அன்போடு பார்க்க வேண்டும், உன் மேல் காதல் கொள்ள வேண்டும் என்றால் நீ அவர் எழுதிய புத்தகங்களைப் படிக்க வேண்டும். பாராட்ட வேண்டும். உற்சாகப்படுத்த வேண்டும். அவர் புகழில் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் தம் வாழ்க்கையில் உனக்கு ஓர் உன்னதமான இடத்தை வழங்குவார். ஆயினும் இதென்ன துர்ப்பாக்கியமடி நீ இவ்வளவு படித்திருக்கிறாய், ஏன் இலக்கியமென்றால் உனக்கு இவ்வளவு வெறுப்பு?" என்றாள். நல்ல சங்கீதத்தில் அபஸ்வரம் விழுந்தாற்போல் அருவருப்புற்றாள்.

ஸரோஜாவின் வார்த்தைகளைக் கேட்ட சீதாவுக்கு இப்போது பலப் பலச் சிந்தனைகள். கணவர் தன்னை நேசிக்கவில்லை, அன்பாக நடத்தவில்லையென்றால் தன்னால் பொறுமையாக இருக்க முடியுமா? தன்னைத் தவிர வேறொரு பெண்ணிடம் அவருக்கு ஈடுபாடு என்றால் தன்னால் சகித்துக் கொள்ள முடியுமா? என்று யோசித்தாள். ஒருநாளும் முடியாது. பின் இதற்கு வழிதான் என்ன? அவருடைய புத்தகங்கள் ஒன்றிரண்டையாகிலும் எப்படியும் படித்துவிட வேண்டும். ஐயோ! மீண்டும் படிப்பா? படிப்பு என்றாலே அழுகை வருகிறதே! இத்தனை நாட்கள் படித்துப், படித்து பரீக்ஷைகள் பாஸ் பண்ணியாயிற்று. மீண்டும் இதென்ன பரீட்சை! கடவுளே! இப்படி நினைத்த மாத்திரத்தில் நெஞ்சம் தழுதழுத்தது. "பின் என்ன செய்ய வேண்டும் என்கிறாயடி?" என்று அழாத குறையாகக் கேட்டாள்.

ஸரோஜாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. துள்ளிக் குதித்துக் கொண்டு பலத்த குரலில், "இரண்டு புத்தகங்களை வரவழைத்துப் படிப்பதைவிட்டு இதென்னமடி அழுகை?" என்றாள்.

"ஒரு வாரத்தில் முகூர்த்தம். இப்போது அவர் புத்தகங்களைப் படித்தால் எல்லோரும் சிரிப்பார்கள். மேலும் என்னால் வேகமாகவும் படிக்க முடியாது. அப்படிப் படித்தாலும் சுலபமாகக் கதையும் புரியாது" என்றாள் சீதா சோகமாக.

ஸரோஜா கொஞ்ச நேரம் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு ஏதோ தீர்மானித்தவளாய், "அப்படியானால் நான் ஒன்று சொல்கிறேன், அதன்படி செய்வாயா?" என்று கேட்டாள்.

"ஓ! அப்படியே செய்கிறேன்" என்றாள் சீதா.

"இதெல்லாம் உனக்காகத்தான். உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். முதலில் அவரோடு பேசும் வாய்ப்புக் கிடைக்கும் போதே, உன்னை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு விட வேண்டும்!" என்றாள் ஸரோஜா. சீதை பலியாடு போல் தலையை அசைத்தாள்.

"அவருடைய கதைகளில் மிகச் சிறந்த இரண்டொரு கதைகளைச் சொல்கிறேன். அவற்றை நன்றாகப் புரிந்து கொண்டு நான் கைந்து தடவை சொல்லிப் பார்த்துக் கொள். அவரை நீ சந்திக்கும்போது, உங்கள் கதைகள் உங்கள் எழுத்து என்றால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும் என்று அன்பு கொப்பளிக்கச் சொல்லு. இப்படிச் சொல்லிக் கொண்டே இரண்டு கதைகளைச் சொல்லு. இல்லை, ஒரு கதையாகிலும் சொல். போதும்.

அவர் ஆனந்த சாகரத்தில் மூழ்கிப் போய் உன்னை அப்படியே கட்டித் தழுவி....'' என்றாள் ஸரோஜா.

''சரி போதும் நிறுத்து. இனி கதையைச் சொல்லு'' என்றாள் சீதை.

எவ்வளவோ அழகாக மனத்தைக் கவரும் வகையில், பாத்திரங்களும், சம்பவங்களும் கண்முன் நடப்பன போன்றபிரமையுண்டாக்கும் வகையில் கதை சொன்னாள் ஸரோஜா. கேட்கக் கேட்கச் சீதையின் கண்கள் அகல விரிந்தன. வியப்பில் கதையைப் புரிந்து கொள்ள மிகப் பிரயாசைப்பட்டாள். காலேஜில் படித்த எகனமிக்ஸை விடக் கதை கஷ்டம் போலிருக்கிறதே என்று நினைத்தாள். என்னவெல்லாமோ சந்தேகங்கள் மனத்தில் மீண்டும் மீண்டும் உதித்தன. அவற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு கதை முன்பின் முரண்படாமல் சொல்ல நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டாள்.

ஸரோஜாவுக்கு கதை படிப்பதோ, தனக்குப் பிடித்த கதையைப் பிறருக்குச் சொல்வதோ மிகவும் பிடித்தமான செயல்கள். அப்போது அவள் அடையும் ஆனந்தம் சொல்லி முடியாது. சீதைக்கு இரண்டு கதைகள் சொன்னாள். அதில் அவள் சொன்ன முதல் கதை சீதைக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. கதைகள் கூட நன்றாக இருக்கும் போலிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாள். அதனையே மனத்தில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டாள். இரண்டாவது கதையும் நன்றாக இருந்தது என்றாலும் மனத்தில் பதிய வைத்துக் கொள்வது சீதாவுக்குச் சிரமமாக இருந்தது. இதை வெளியில் சொன்னால் ஸரோஜா தன்னை அடிக்கவே வந்துவிடுவாள் என்ற பயத்தில் சும்மா இருந்துவிட்டாள்.

திருமணம் சிறப்பாக நடந்தேறியது. மாப்பிள்ளையின் எழுத்தாள நண்பர்கள், பதிப்பாளர்கள், இலக்கிய விமர்சகர்கள் என்று பலர் வந்திருந்தார்கள். எல்லோரும் ஆஞ்சநேய சாஸ்திரிக்கல்ல, சந்தனுக்கே வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் பரிசுகளும் வழங்கினார்கள். எத்தனையோ புஸ்தகங்களைப் பரிசுகளாக வழங்கினார்கள். சீதையின் அழகைப் பார்த்துவிட்டு அவரைப் பாராட்டினார்கள். சீதையின் தோழிகள் அவனை வானளாவப் புகழ்ந்தார்கள்.

''வா, சீதா! அருகில் வா! நீ என்ன அவ்வளவு தூரத்தில் ஒதுங்கிப் போய் நின்று விட்டாய்? இப்படிப் பழங்காலப் பெண் போல் கர்நாடகமாக நடந்து கொள்வது எனக்குப் பிடிக்காது. நீ என்னோடு சுதந்திரமாக நட்புரிமையோடு பழக வேண்டும். அது தான் எனக்குப் பிடிக்கும்'' என்றார் எழுத்தாளர் கணவர். சீதை தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். அவன் ஒரு நண்பனைப் போல் புன்னகை தவழ அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள்.

இப்போது தான் செய்ய வேண்டிய கடமை என்னவென்பது நினைவுக்கு வந்தவள்போல் அவரைப் பார்த்து, ''எனக்கு உங்கள் கதைகள் என்றால் ரொம்பவும் பிடிக்கும்'' என்றாள். இப்படிச் சொன்னபோது அவள் குரலில் லேசாக நடுக்கமிருந்தது. அடுத்த கணம் அவளுக்கு வெட்கம் வந்துவிட்டது.

''உண்மையாகவா! அப்படியானால் நான் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான்!'' என்று சொல்லிக் கொண்டே அவள் கரங்களைப் பற்றித் தன்னருகில் உட்கார வைத்துக் கொண்டான்.

''எங்கே, என் கதைகளில் உனக்கு ரொம்பவும் பிடித்த கதையைச் சொல்லு, பார்ப்போம்!'' என்றான். எந்தக் கேள்வி வரக் கூடும் என்று எதிர்பார்த்து, இரவெல்லாம் படித்துவிட்டு, மறுநாள் பரீட்சைக்குச் சென்ற மாணவன், கேள்வித் தாளில், தான் எதிர்பார்த்த கேள்வியே வந்திருப்பதைக் கண்டு எப்படி சந்தோஷப்படுவானோ, அப்படிப் பட்ட சந்தோஷத்துடன் ஒரு வாரகாலமாக மனத்தில் சொல்லிப் பார்த்து வந்த கதையை மிக உற்சாகமாகச் சீதை தன் கணவனுக்குச் சொல்லி முடித்தாள். அவ்வளவையும் கேட்டுவிட்டு, தன் அழகிய மனைவியை நெஞ்சாரக் கட்டித் தழுவி, ''உன்னைப் போன்ற எளிய அப்பாவிப் பெண்தான் எனக்கு மனைவியாக வாய்க்க வேண்டும் என்று நினைத்தேன். கிடைத்துவிட்டாய்!'' என்று அவள் காதுகளில் ரகசியமாகச் சொன்னான் சந்தன்.

தான் அவ்வளவு சீக்கிரம் பரீட்சையில் தேறிவிட்டதற்குச் சீதை மகிழ்ந்து போனாள். தன் கணவனின் இதய சாம்ராஜ்யத்தை அவ்வளவு எளிதாக வெற்றி கொண்டதற்கு உள்ளம் பூரித்துப் போனாள்.

மறுநாள் வெயில் கொளுத்தும் பட்டப் பகலில் வியர்வை வழிய சீதையின் வீட்டிற்கு வந்தாள் ஸரோஜா மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க!

''என்னடி இது! இந்த வேளையில் இப்படி வந்து சேர்ந்தாய்!'' என்று கேட்டாள் சீதை. சீதையின் முகத்தில் ஒளிர்ந்த மகிழ்ச்சியைக் கண்டு ஸரோஜாவிற்குச் சற்று மன நிம்மதி ஏற்பட்டது. எனினும் சீதையைத் தனியாக, ஒருபக்கமாக அழைத்து ரகசியமாக ''என்னடி உன் கணவருக்குக் கதையைச் சொன்னாயா?'' என்று கேட்டாள். அந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்குமுன் ஸரோஜாவே, ''சொல்வதானால் அந்த இரண்டாவது கதையைச் சொல்லு. முதல் கதையில் ஒரு தவறு. அது சந்தனுடைய கதையல்ல. வசுந்தராவின் கதை'' என்றாள். மேலும் ஏதேதோ சொன்னாள் ஸரோஜா! அவையொன்றும் சீதையின் காதுகளில் விழவே இல்லை!

மூலம் தெலுங்கு: இந்திரகண்டி ஜானகிபாலா

தமிழாக்கம்: எஸ்.வி.எஸ்

1

ஆபத்தான ஜோக்கள்

முகுந்தன்

(அவசியமான) முன்னுரை:

''அகோ வாரும் பிள்ளாய் அற்புதசாமி! இப்படி உட்காரும்..... அருண் என்று ஓர் வேலையில்லாப் பட்டதாரி, மீசைதாரி, வாரப்படாத கேசதாரி — அவன் கதையை நீர் அறிவீரா?'' என்று கேட்டது வேதாளம், கையிலிருந்த இரண்டு ஸ்பெஷல் ஜர்தா பீடாக்களை வாயில் போட்டு மென்றபடியே.

அற்புதசாமி (வயது 36) ஒரு வாயில்லாப் பூச்சி. 'முந்தானை முடிச்சு' படம் பார்த்த சூட்டோடு சூடாக, முழுக்க முழுக்க முருங்கை மரங்களையே கொண்ட ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கிப் போட்டார். தினமும் தன் கையாலேயே முருங்கைக்காய்களைப் பறித்து மனைவியிடம் கொடுத்துச் சாம்பார், கூட்டு, அவியல், பொரியல், சட்னி, கொத்சு என்று வகைவகையாகச் சமைத்துப் போடச் சொல்லிச் சாப்பிட்டு வந்தார்.

ஒருநாள் நண்பகல் வேளையில் அவர் முருங்கைக்காய் பறிக்கப் போனபோது, ஈசான்ய மூலையிலிருந்த ஒரு மரத்திலிருந்து, ''இன்னா நைனா!'' என்று இனிய மதராஸ் தமிழில் அழைத்தபடியே இறங்கி வந்தது வேதாளம்.

டி.வி.யில் 'விக்ரம் அவுர் வேதாள்' தொடரைத் தவறாமல் பார்த்தவராதலால் பயப்படாமல், ''யாரய்யா நீ?'' என்று அதட்டினார் அ. சாமி.

''சர் (த்)தான் சார்! ரொம்பத்தான் டாவு காட்டாதீங்க! பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் இந்த மரத்தில் தனியாக உட்கார்ந்து 'போர்' அடிக்கிறதேயென்று கூப்பிட்டேன்.... நாம் நல்ல நண்பர்களாக இருப்போம். உங்களுக்கு நான் நிறையக் ஜோக்ஜோக் கதைகள் சொல்கிறேன்.... சரிதானா?

ஒரு கண்டிஷனோடு ஒப்புக் கொண்டார் அற்புதசாமி: ''ஜோக்ஜோக் கதையெல்லாம் வேண்டாம். நமக்குச் சரிப்படாது. நல்ல மர்மக் கதையாகச் சொல்வதானால் கேட்கிறேன்..... இல்லையென்றால் ஆளை விடு.....!'' என்று நிபந்தனை போட்டார்.

''மர்மம்தானே! நிறைய ஸ்டாக் இருக்கிறது.... இப்போது சொல்லப் போகும் அருணின் கதை மர்மக் கதையேதான்... சொல்லட்டுமா?

தலையாட்டினார் அற்புதசாமி.



அருண் அந்த அதிகாலை நேரத்தில் மேஜையருகில் உட்கார்ந்து தீவிரமாக யோசித்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான்.

விலைவாசி, லஞ்சம், விபத்து, மோசடி ஆகியவற்றுடன்போட்டிபோட்டுக்கொண்டு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேலையில் லாப்பட்டதாரிக்கும்பலில் அவனும்ஒருவன்.

நிறைய 'இண்டர்வ்யூக்களுக்குப் போய், தோல்வி கண்டு, விரக்தி அடைந்தவன். காலப்போக்கில், காரசாரமான வார்த்தை களைப் போட்டுப் புதுக் கவிதைகள் எழுதத் தேர்ச்சி பெற்றிருந்தான். கூடிய விரைவில் குறுந்தாடி வளர்த்து, ஜோல்னாப் பை மாட்டி, அறிவு ஜீவியாகப் பரிணமம் பெறக் கூடிய நிலையில் இருந்தான்.

அவனையொத்தவேலையில்லாப்பட்டதாரி கள் காலையில் நேரங்கழித்து எழுந்திருப்பார் களோ என்னவோ, அருண் விடியற்காலை ஐந்து மணிக்கெல்லாம் படுக்கையை உதறி விடுவான். பழக்க தோஷம்தான் காரணம்.

அருணின் தந்தை விநாயகம், ஆதிநாளில் சொந்தமாகக் கோழிப் பண்ணை நடத்தி வந்தவர். பண்ணையை ஒட்டியே வீடு. எனவே, தினமும் பண்ணையிலிருந்த சேவற் கோழிகள் அமர்க்களமாகக் கூவி எல்லாரையும் எழுப்பி விடும். இப்போது பண்ணை போய், கோழிகள் வெவ்வேறு இடங்களில் பிரியாணியாகி ஜீரணிக்கப்பட்ட பின்னரும் அருணிடம் அந்தக் காலத்துப் பழக்கமே நீடித்தது.

அருணின் பேனா, வெள்ளைத் தாளில் புதுக் கவிதை வடித்தது:-

சினிமா வந்தது
நாடகம் போச்சு
டி.வி. வந்தது
சினிமா சிதைந்தது
வீடியோ வந்தது
டி.வி.யும் மாளும்'
எது வாழ்ந்தாலும்
எது மடிந்தாலும்
ஜீவித்திருப்பது —
ரத்தம் குடிக்கும்
மனுஷப் பூச்சிதான்.

ஒரு முதல்தரமான கவிதையைப் பிரச வித்துவிட்ட திருப்தியில் நாற்காலியில் சாய்ந்து விரல்களை நெட்டி முறித்தான் அருண்.

ஓசைப்படாமல் பின்னால் வந்து நின்றார் விநாயகம். காகிதத்தை ஒரு நோட்டம் விட்டார். பார்க்கக் கூடாத எதையோ பார்த்து



விட்டது போல முகத்தைச் சுளித்தார். (அவருக்குப் பிடிக்காத எட்டாயிரத்து முந்நூற்று நான்கு விஷயங்களில் புதுக் கவிதையும் அடக்கம்.)

''அருண்! உனக்கு இன்று இண்டர்வ்யூ உண்டு.... நினைவிருக்கிறதா?''

தலையாட்டினான்.

''சர்ட்டிபிகேட் எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டாகிவிட்டதா?''

''எல்லாம் ஃபைல்லே வச்சிருக்கேன்...''

''பேப்பரைப்படித்துக்கொள்... இன்றைய நியூஸிலிருந்து கேள்வி கேட்டாலும் கேட்பார்கள்...''

''சரி'' என்ற அருண், எழுந்து டிரஸ் மாற்றிக் கொள்ளத் தொடங்கினான்.

''எங்கேடா கிளம்பறே?''

''சலூனுக்கு....''



''நானே சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்... தலையை நன்றாக 'டிரிம்' பண்ணிக் கொள்.....''

''நான் அதற்காகப் போகவில்லை....அங்கே போனால் மூணு நாலு பேப்பர் பார்க்க முடியும்... தவிர, 'டிரிம்' பண்ணிக் கொண்டால், உங்களுக்குத்தான் பத்து ரூபாய் செலவு பிடிக்கும்.... ரேட்டெல்லாம் உயர்த்தி விட்டார்கள்...''

''நம்ம சதா கடைதானே? அவன்தான் உனக்கு நெருங்கிய தோஸ்த் ஆச்சே? பழைய ரேட்டுக்கே பண்ண மாட்டானா?''

''நட்பு வேறே, தொழில் வேறே.... உங்களுக்கு அதெல்லாம் சொன்னால் புரியாது!''

சதா ஹேர் டிரஸ்ஸிங் சலூனில் எந்த வேளையும் கும்பல் நிறைந்திருக்கும். சிகை அலங்காரம் தவிர, சும்மா 'தலையைக் காட்டி' விட்டுப் போவதற்கென்றே நிறையப் பேர் வருவார்கள். பேட்டை நியூஸ் முதல் சர்வதேச அரசியல் உட்படப் பலவிதமான பேச்சுகள், வதந்திகள், சர்ச்சைகளுக்கான அரங்கம் அது.

உரிமையாளர் சதாசிவம் தோற்றத்தில் காங்கோ—டிரம் மாதிரி கட்டை குட்டை. பரந்த மனம். சிரித்த முகம். கை ஓயாத கத்திரிக்கோல் வீச்சு. வாய் ஓயாத பேச்சு. அவரது பணிவும், கனிவும் கஸ்டமர்களை அவரிடம் இழுத்து வந்தன. வருகிறவர்கள் அத்தனை பேரும் அவரது கையால் முடியிழக்கவே விரும்பினார்கள். நான்கு நாற்காலிகள் போட்டு வேலை நடக்குமிடத்தில் இது சாத்தியமில்லை. எனவே, யாருக்கும் மனக்குறை வேண்டாமென்று, தானே ஃபினிஷிங் டச் கொடுத்து அனுப்புவார் சதா.

அருண் போனபோதும் உறிஞ்சிக்கொண்டிருந்தார் சதா.

''வாங்க சார்! டேய் பையா! சாருக்கு டீ ஊத்திக் கொடுடா!''

''வேண்டாம் சதா.... பேப்பர் பார்த்துட்டுப் போகலாமென்று வந்தேன்....''

''நியூஸ்லே சூடு ஒண்ணும் இல்லே சார். எல்லாம் வழக்கம்போலத்தான். சிலோன்லே போராளிங்க....''

''சிரமப்படாதீங்க. நானே பார்த்துக்கறேன்...''

அடுத்த அரை மணி நேரம் செய்தித் தாள்களில் தலைப்புகளை மேய்ந்துவிட்டுப் புறப்பட்ட போது, ''என்ன சார் கட்டிங் பண்ணிக்கலையா?'' என்று கேட்டார் சதா.

''அடுத்த வாரம் வரேன்....''

சதா விடுவதாக இல்லை. பலவந்தமாக நாற்காலியில் உட்கார்த்தி வைத்துவிட்டார். டிரிம்மிங் முடிந்ததும் தலை சீவுவதற்குச் சீப்பு எடுத்துக் கொடுத்தபடியே, ''உன்னாலே முடியறபோது பணம் கொடு சார்!'' என்று காதருகில் முணுமுணுத்தார்.

அருண் அந்தக் கணம் நெகிழ்ந்துதான் போனான்.

வீட்டுக்கு வந்து குளித்து, டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த அருணை விநாயகம் கேட்டார்:

''கைச் செலவுக்குப் பணம் இருக்கா?''

''தீர்ந்து போயிட்டுதுப்பா.... இருபது ரூபாய் கொடுங்க!''

''இருபதா? எதுக்கு?''

''பத்து ரூபாய் ஹேர்—கட்டிங்குக்குக் கொடுத்தேன். செலவுக்குப் பத்து ரூபாய்.... அதிகமாக எதுவும் கேட்கல்லே!'' — கூசாமல் பொய் சொன்னான் அருண்.

முணுமுணுத்துக் கொண்டே பர்ஸிலிருந்து ஓர் இருபது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினார் விநாயகம்.

பதினொரு மணிக்கு இண்டர்வ்யூ.

அருண் விலாசம் விசாரிப்பதில் கால் மணிக்கு மேல் விரயம் செய்துவிட்டு 'சராகா பார்மசூட்டிகல்ஸ்' நிறுவனத்துக்குள் அடியெடுத்து வைத்தபோது 10.55 ஆகிவிட்டது.

ரிசப்ஷன் பகுதியில் ஏகப்பட்ட கும்பல்.

எல்லார் முகத்திலும் எதிர்பார்ப்பு எழுதி ஒட்டியிருந்தது.

"கத்திரி வெயிலில் காயப் போட்ட கொத்தவரங்காய் போல மெலிந்த தோற்றம் கொண்ட ரிசப்ஷனிஸ்ட், அருண் நீட்டிய கடிதத்தை அலட்சியமாக இடது கையால் வாங்கிப் பார்த்து (வலது கை பப்பிள்கம் காகிதத்தைப் பிரித்துக் கொண்டிருந்தது), ''ப்ளீஸ் வெயிட்!'' என்று சொன்னான்.

ஒருசோபாவில் நால்வரோடு ஐவரானோம் என்று போய் உட்கார்ந்தான் அருண். வந்திருப்பவர்களை ஒரு நோட்டம் விட்டான். குறிப்பாகப் பெண்கள் — அதுவும் அழகும் கவர்ச்சியுமானவர்கள் — வந்திருக்கிறார்களா என்று கவனித்தான். யாருமில்லை. கொஞ்சம் நிம்மதி பிறந்தது.

ஆறுவருடங்களுக்குமுன்பு இண்டர்வ்யூக்களுக்குப் போக ஆரம்பித்த புதிதில், தன்னைப் போலவே வந்திருப்பவர்களிடம் பேச்சுக் கொடுத்து விவரம் விசாரிப்பதில் அவனுக்கு ஆர்வம் இருந்தது. அது படிப்படியாகக் குறைந்து, இப்போது யாராவது பேச முன் வந்தாலும் தவிர்க்கும் தன்மை உருவாகியிருந்தது.

கொஞ்ச நேரம் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த அருண், எதிரே குட்டி மேஜை மீதிருந்த 'இந்தியா டுடே'யை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தபோது, இவனுடைய காலை மிதித்தபடியே தாண்டிக் கொண்டு அப்பால் போய் உட்கார்ந்தான் ஒருவன்.

அருண் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான் அந்த ஆசாமியை.

இளைஞன்தான். நல்ல உயரம். தாடியும் மீசையுமாகக் கிட்டத்தட்ட டி. ராஜேந்தரின் மறுபதிப்பு. கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். பேண்ட்டும் சட்டையும் வெகுவாகக் கசங்கியிருந்தன.

வெளியே சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து உள்ளே வந்திருப்பதால், பார்வையில் தடுமாற்றம் ஏற்பட்டு, அவன் தன் காலை மிதித்திருக்கக் கூடும் என்று நினைத்துக் கொண்டான் அருண்.

பத்திரிகை படிப்பதில் பத்து நிமிடம் போல அமைதியாகக் கழிந்தது.

ஏதோ ஓர் உள்ளுணர்வு தூண்டி விடவும், அருணின் செவிப் புலன் கூர்மையாகியது. யாரோ பென்சிலை மேஜை அல்லது நாற்காலி முனையில் வைத்துத் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணத் தட்டல் அல்ல. 'கட்டுக் கடகட' என்று தந்தி மொழியில்!

அருண் வேலை தேடித் திரிந்த நாட்களில் தனது தகுதியை உயர்த்திக் கொள்வதற்காக எழும்பூரில் ஒரு பயிற்சி நிலையத்தில் சேர்ந்து மோர்ஸ் பயிற்சியும் பெற்றதுண்டு. அது இப்போது கை கொடுக்கவும், வருகிற ஒலியை எழுத்துக்களாக மனத்தில் நோக்கத் தொடங்கினான்.

'ஈ.... ஜி.... ஜி.... ஈ.... ஒய்.... ஈ.... ஈ.... ஜி.... ஜி.... ஈ.... ஒய்.... ஈ....'

தூக்கி வாரிப் போட்டது அருணுக்கு. பள்ளியில் படிக்கும் நாட்களில் அவனது செல்லப் பெயர் 'முட்டைக் கண்ணன்'. ஒரு சிலர் மட்டுமே அறிந்திருந்த அந்தப் பெயரை 'எக் ஐ' என்று தந்தி மொழியில் தட்டி அவனை அழைப்பது யார்?

'இந்தியா டுடே'யைத் தாழ்த்தி, சுற்று முற்றும் பார்த்தபோது, சற்று முன் காலை மிதித்து விட்டுப் போன தாடிக்காரன்தான் கூடுதலாகப் போடப்பட்டிருந்த ஓர் இரும்பு நாற்காலியில் அமர்ந்து தட்டுகிறான் என்பது தெரிய வந்தது.

தந்திச் செய்தி தொடர்ந்தது:

'EGG EYE.... I AM IN DANGER.... SOS....'

திடீரென்று சப்தம் நிற்கவும், தாடி இளைஞன் அவசரமாக எழுந்தான். வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினான். போகிற வேகத்தில் அருண் மீது ஒருமுறை இடறி விழுந்தான்.

அருண் நிமிர்ந்து நிதானிப்பதற்குள், தாடி இளைஞன் வாசலை நெருங்கிவிட்டான். அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.


இரண்டு சோபாக்கள் தள்ளி அமர்ந்திருந்த ஓர் ஆசாமி சட்டென்று இடுப்பிலிருந்து பிஸ்டலை உருவி, தாடி இளைஞனை நோக்கிச் சுட்டான்!

அதற்குள் தாடிக்காரன் அலுமினிய ப்ரேம் போட்ட கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு வீதியில் இறங்கிவிட்டான். பிஸ்டலிலிருந்து சீறிப் பாய்ந்த குண்டு, கண்ணாடியில் பட்டு, 'சிலிங்' என்று கண்ணாடித்துண்டுகள் சிதற, சுட்டவனும் புலிப் பாய்ச்சலில் வெளியே பாய்ந்தான்.

தொடர்ந்த குழப்பத்தில் ஆளுக்கு ஆள் கூச்சலிட்டுப் பரபரக்க, கொத்தவரைக்காய் ரிஸப்ஷனிஸ்ட் பீதியில் பப்பிள்கம்மை விழுங்கி விட்டு விழிக்க, அதிர்ச்சியடைந்து உட்கார்ந்திருந்தான் அருண்.

அது ஆரம்பம்தான் என்று அப்போது அவனுக்குத் தெரியாது!

(தொடரும்)



''உங்க கார் எவ்வளவு வேகமாப் போவும்?''

''அது சொல்ல முடியாதுங்க! தள்ளுகிறவர்களின் பலத்தையும், எண்ணிக்கையையும் பொறுத்தது அது!''

— ஆர். அரிகோபி



ஸா:.ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன்.

ஸா:.ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன்.
இந்த ஹேர் ரிமூவிங் லோஷனை உபயோகப்படுத்துவதில் எந்த சிரமமுமில்லை, சங்கடமுமில்லை.
மிருதுவான மேனி மீது எளிதாகவும் சீராகவும் பரவுகிறது!
இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது: 80 மி.லி. மற்றும் 45 மி.லி.
ஆம்! எத்தனை சிக்கனம்.
ஸா:.ப்ட் அண்ட் ஸில்க்கி லோஷன் அங்கமெங்கும் மென்மை உணர்வு.
45மி.லி.பாட்டில் விலை ரூ. 10.70
(தல வரிகள் தனி)



*45 மி.லி.பாட்டிலில், சரக்குகள் தீரும்



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி – 1987

முதல் பரிசு	ரூ	1500
இரண்டாவது பரிசு	ரூ	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ 375 வீதம்)	ரூ	750

ஆக மொத்தம் ரூ 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.


தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 2 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை-600 034.


இவன் தூக்கத்துலகூட மால்கம் மார்ஷலே எதிர்க்க தயாரா இருக் கான் போலிருக்கே ?
நீ ஒண்ணு! கொசுக் களை எதிர்க்க இவன் இப்படித்தான் தூங்குவான்!
கொசுக்களை 'ரன்' எடுக்கச் செய்கிறது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
ஏய்,சாம்ராஜ்! பேரர் வேஷத்துல போலீஸ் காரன் வந்துருக்கான் போலிருக்கே.
பயப்படாதே! கோவா கொசுக்கள் நம்ம முகத்தையும் மாத்திடுச்சு
தப்பிக்கும் கொசுக்களிடமிருந்து வழி டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
பம்பாய்-400 023, போன்: 273831

பூர்வ கதை

சுமார் 980* ஆண்டுகளுக்கு முன்னால் தென்னாட்டில் வலிமை பெற்று வளர்ந்து வந்த சோழ சாம்ராஜ்யத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி அரசாண்டு வந்தார். அவர் உடல்நிலை திருப்திகரமாக இல்லையென்று நாடெங்கும் ஒரு வதந்தி பரவியது. சுந்தர சோழருக்குப் பிறகு தஞ்சாவூர் சிம்மாசனத்தில் யார் ஏறப் போகிறார் என்ற பேச்சும் எழுந்தது. சுந்தர சோழரின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலர் அச்சமயம் காஞ்சி நகரில் இருந்தார். அவரிடமிருந்து தஞ்சாவூருக்குச் செய்தி கொண்டு போனான் வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் வாலிபன்.

பழைய வாணர் குலத்தைச் சேர்ந்த இந்த வீரன் வழியில் வீர நாராயண ஏரியை அடுத்திருந்த கடம்பூரில் செங்கண்ணர் சம்புவரையர் என்னும் பிரமுகரின் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கினான். ஆதித்த கரிகாலருக்கு விரோதமாக ஒரு பெரிய சதி நடைபெறுகிறது என்பதை அங்கே தெரிந்து கொண்டான். சோழ ராஜ்யத்தின் தனாதிகாரியும், தானிய பண்டாரத் தலைவருமான பெரிய பழுவேட்டரையர் உள்படப் பல பிரமுகர்கள் அச்சதியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் அறிந்தான். பழுவேட்டரையர் தமது முதிய பிராயத்தில் ஓர் இளம் பெண்ணை மணந்திருந்ததுடன் அவளைத் தான் போகுமிடமெல்லாம் மூடு பல்லக்கில் அழைத்துச் செல்லுவது வழக்கம். கடம்பூர் மாளிகைக்கும் மூடு பல்லக்கு வந்திருந்தது. அதில் பழுவூர் இளைய ராணி வந்ததாகவே அனைவரும் எண்ணியிருந்தார்கள். ஆனால் நள்ளிரவில் நடந்த சதிக் கூட்டத்தின் முடிவில் பழுவேட்டரையர் மூடு பல்லக்கின் இரகசியத்தை அம்பலப்படுத்தினார். பட்டுத் திரையை விலக்கியதும் உள்ளேயிருந்து இளவரசர் மதுராந்தக தேவர் வெளிப்பட்டு வந்தார். இவர் சுந்தர சோழரின் பெரிய தந்தையான சிவஞான கண்டராதித்தரின் புதல்வர். அடுத்த பட்டத்துக்கு உரியவர் மதுராந்தக தேவர்தான் என்று அங்கு வந்திருந்த சோழ நாட்டுப் பிரமுகர்கள் ஏக மனதாக முடிவு கட்டி ஜய கோஷம் செய்தார்கள்.

இதையெல்லாம் கடம்பூர் மாளிகையில் ஒரு மறைவான இடத்திலிருந்து வந்தியத்தேவன் கவனித்தது போலவே ஆழ்வார்க்கடியான் நம்பி என்னும் வீர வைஷ்ணவர் ஒருவரும் கவனித்தார். வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியாரும் கொள்ளிடக் கரையில் சந்தித்து ஒரே படகில் ஆற்றைக் கடந்தார்கள். ஒருவரிடம் ஒருவர் உளவு அறிய முயன்றார்கள். முடியவில்லை.

ஆழ்வார்க்கடியார் யோசனைப்படி வந்தியத் தேவன் தஞ்சை போகும் மார்க்கத்தில் பிரசித்தி பெற்ற குடந்தை ஜோதிடரிடம் சென்றான். அவருடைய வீட்டில் இரு உயர்குலப் பெண்களைச் சந்தித்தான்.

குடந்தை ஜோதிடரிடம் வந்தியத் தேவன் புதிதாக எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆழ்வார்க்கடியாருடைய இன்னொரு பெயர் திருமலையப்பன் என்பது மட்டும் தெரிந்தது. பின்னர் அவன் அரிசிலாற்றங்கரையோடு தஞ்சாவூரை நோக்கிச் சென்றபோது, குடந்தை ஜோதிடரின் வீட்டில் அவன் பார்த்த இரு பெண்களும் இன்னும் சிலரும் நதிக் கரையில் கலங்கி நிற்பதையும் அவர்களுக்கு அருகில் பயங்கரமான ஒரு முதலை வாயைப் பிளந்து கொண்டிருப்பதையும் பார்த்தான். பாய்ந்து சென்று முதலையின் மீது தன் வேலைப் பாய்ச்சினான். அப்பெண்களின் கேலிச் சிரிப்பு அவனுடைய மனத்தில் குழப்பத்தை உண்டாக்கிற்று. பிறகு, அவன் கொல்ல முயன்ற முதலை, இறந்த பின் பதப்படுத்திப் பஞ்சு அடைத்திருந்த முதலை என்று தெரிந்து மிகவும் வெட்கினான். இதனால் ஏற்பட்ட கோபத்தைத் தான் ஏறி வந்த குதிரையின் மீது காட்டி அதை விரைந்து செலுத்தினான். இதற்கிடையில் ஆழ்வார்க்கடியானுக்குச் சில விசித்திரமான அனுபவங்கள் ஏற்பட்டன. சுந்தர சோழ சக்கரவர்த்திக்கும் சோழர் குலத்துக்கும் எதிராகப் பயங்கர சதித் திட்டம் உருவாகிக் கொண்டிருப்பதை அவர் யதேச்சையாக அறிந்தார். அச்சதியில் ஈடுபட்டுள்ளவர்கள் மீன் சமிக்ஞை காட்டியதால் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்களாயிருக்கக் கூடும் என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது.

வந்தியத் தேவன் தஞ்சை கோட்டை நோக்கிப் பிரயாணம் செய்கையில் மதுராந்தகரின் பல்லக்கு என்று எண்ணி பழுவூர் ராணி நந்தினியின் பல்லக்கை வழி மறித்தான். அவன் சகோதரன் ஆழ்வார்க்கடியான் தன்னை அனுப்பியதாகப் புனைந்துரைத்து அவளிடமிருந்து பனை இலச்சினை பதித்த மோதிரத்தைப் பெற்றான். அதன் துணையுடன் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்தான். அங்கே அவனுக்குச் சேந்தன் அமுதன் என்ற இளைஞனின் நட்பு கிடைத்தது. சுந்தர சோழ சக்கரவர்த்தியையும் சந்தித்தான். ஆதித்த கரிகாலர் அனுப்பிய ஓலையை அவரிடம் சேர்ப்பித்தான். குந்தவை தேவிக்குத் தான் கொண்டு வந்த ஓலையைக் காணவில்லை என்று உணர்ந்து அவன் கவலையில் ஆழ்ந்து போகும் போதே அவன் நடவடிக்கைகளைச் சந்தேகித்த சின்னப் பழுவேட்டரையர் அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டார்....

* 1950 இல் எழுதியது

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 29

"நம் விருந்தாளி"

பலவர்கள் சென்றபிறகு அரண்மனை மருத்துவர் சக்கரவர்த்திக்கு மருந்து கலந்து கொண்டு வந்தார். மலையமான் மகளான பட்டத்தரசி அதைத் தன் திருக்கரத்தால் வாங்கிக் கணவருக்குக் கொடுத்தாள்.

அதுவரை பொறுமையாய்க் காத்திருந்த சின்னப் பழுவேட்டரையர், வந்தியத் தேவனை பிடித்தபிடி விடாமல் இழுத்துக்கொண்டேசக்கரவர்த்தியின் அருகில் போய்ச் சேர்ந்தார்.

"பிரபு! புது மருந்தினால் ஏதாவது பலன் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"பலன் தெரிகிறதாக மருத்துவர் சொல்லுகிறார்; தேவியும் சொல்கிறாள். ஆனால் எனக்கென்னவோ, நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மையைச் சொன்னால், தளபதி! இதெல்லாம் வீண் முயற்சி என்றே தோன்றுகிறது. என் விதி என்னை அழைக்கிறது. யமன் என்னைத் தேடிக் கொண்டு பழையாறைக்குப் போயிருக்கிறான் என்றே நினைக்கிறேன். அங்கே நான் இல்லையென்று அறிந்ததும், இவ்விடம் என்னைத் தேடிக் கொண்டு வந்து சேருவான்....!"

"பிரபு! தாங்கள் இப்படி மனமுடைந்து பேசக் கூடாது. எங்களையெல்லாம் இப்படி மனங் கலங்கச் செய்யக் கூடாது. தங்கள் குல முன்னோர்கள்...."

"ஆ! என் குல முன்னோர்கள் யமனைக் கண்டு அஞ்சியதில்லையென்று சொல்லுகிறீர்! எனக்கும் என் குல முன்னோர்கள் பலரைப் போல் போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர் செய்து உயிர் விடும் பாக்கியம் கிடைக்குமானால், அத்தகைய மரணத்துக்குச் சிறிதும் அஞ்சமாட்டேன். சோர்வும் கொள்ளமாட்டேன். உற்சாகத்துடன் வரவேற்பேன். என்னுடைய பெரிய தகப்பனார் இராஜாதித்தியர் தக்கோலத்தில் யானை மேலிருந்து போர் புரிந்தபடியே உயிர் நீத்தார். சோழ குலத்தின் வீரப் புகழைத் தக்கோலம் போர்க்களத்தில் என்றென்றும் நிலை நாட்டினார். 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று புகழ் பெற்றார். நான் என்ன புகழைப் பெறுவேன்? 'நோய்ப் படுக்கையில் துஞ்சிய சுந்தர சோழன்' என்றுதானே

அமரர் கல்கி

பெயர் பெறுவேன்? என்னுடைய இன்னொரு பெரிய தகப்பனார், கண்டராதித்த தேவர் சிவபக்தியில் ஈடுபட்டு மரண பயத்தை விட்டிருந்தார். ஸ்தல யாத்திரை செய்வதற்கு மேற்குக் கடற்கரை நாடுகளுக்குப் போனார். அங்கேயே காலமானார். 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்று அவரும் பெயர் பெற்றார். அவரைப் போன்ற சிவபக்தனும் அல்ல நான்; ஸ்தல யாத்திரை செய்யவும் இயலாதவனாகி விட்டேன். இப்படியே எத்தனை நாள் படுத்திருப்பேன்? என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாருக்கும் பாரமாக...! ஆனால் என் மனத்திற்குள் ஏதோ சொல்கிறது. அதிககாலம் நான் இந்தப் பூவுலகில் இருக்கமாட்டேன் என்று....''

''சக்கரவர்த்தி! அரண்மனை வைத்தியர் தங்களுக்கு அபாயம் ஏதும் இல்லை என்று கூறுகிறார். ஜோதிடர்களும் அபாயம் இல்லையென்றே சொல்கிறார்கள். ஆனால் இந்தச் சிறுபிள்ளை தங்களிடம் ஏதோ அபாயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான்....''

''ஆ! இவன் காஞ்சி நகரிலிருந்து வந்த பிள்ளைதானே? ஆமாம்; ஏதோ அபாயம் என்று சொன்னான். எதைப் பற்றிச் சொன்னாய், தம்பி? என்னுடைய நிலையைப் பற்றியா?''

வல்லவரையனுடைய மூளை மின்னல்வேகத்தில் வேலை செய்தது. 'அபாய'த்தைப் பற்றித் தான் எச்சரித்ததாக ஒப்புக் கொண்டால் சந்தேகங்கள் ஏற்பட்டுத் தனக்கு அபாயம் நேருவது நிச்சயம். அந்த இக்கட்டிலிருந்து தப்ப வேண்டும். நல்லது; ஓர் உபாயம் செய்து பார்க்கலாம். இலக்கணத்தைத் துணையாகக் கொண்டு நெடிலைக் குறில் ஆக்கலாம்!

''சக்கரவர்த்திப் பெருமானே! அபாயத்தைப் பற்றிச் சொல்வதற்கு, நான் யார்? நம் வீர தளபதி சின்னப் பழுவேட்டரையரும், அரண்மனை வைத்தியரும், சாவித்திரி அம்மனையொத்த மகாராணியும் இருக்கும் போது என்ன அபாயம் வந்துவிடும்? 'அபயம்' 'அபயம்' என்று தங்களிடம் நான் முறையிட்டுக் கொண்டேன். பழைய வாணர் குலத்துக்கு நான் ஓர் அறியாச் சிறுவன்தான் இப்போது பிரதிநிதியாக மிஞ்சியிருக்கிறேன். தங்கள் திருப்புதல்வர் மனம் மகிழும்படி சோழப் பேரரசுக்குத் தொண்டு புரிந்து வருகிறேன். எங்கள் பழைய பூர்விக ராஜ்யத்தில் ஒரு சிறு பகுதியையாவது அடியேனுக்குத் திருப்பிக் கொடுக்க அருள் புரிய வேண்டும். அரசர்க்கரசே! அபயம்! அபயம்! இந்த அறியாச் சிறுவன் தங்கள் அபயம்!'' என்று வல்லவரையன் மூச்சு விடாமல் படபடவென்று பேசி நிறுத்தினான்.

இதைக் கேட்ட பழுவேட்டரையரின் முகம் சுருங்கியது. சுந்தரசோழரின் முகம் மீண்டும் மலர்ந்தது. மகாராணியின் முகத்தில் கருணை ததும்பியது.

''இந்தப் பிள்ளை பிறந்தவுடனே சரஸ்வதி தேவி இவனுடைய நாவில் எழுதி விட்டாள் போலும்! இவனுடைய வாக்குவன்மை அதிசயமாயிருக்கிறது!'' என்றாள் தேவி.

இதுதான் சமயம் என்று வந்தியத்தேவன், ''தாயே! தாங்கள் எனக்காகப் பரிந்து ஒரு வார்த்தை சொல்ல வேணும். நான் தாய் தந்தையற்ற அநாதை. வேறு ஆதரவு அற்றவன். என்னுடைய வேண்டுகோளை நானே

விஜயாலயன்





ஆதித்த சோழன்

தான் வெளியிட்டாக வேண்டும். பக்தனுக்குப் பரிந்து பார்வதி தேவி பரமசிவனிடமும் லக்ஷ்மி தேவி விஷ்ணுவிடமும் பேசுவது போல் தாங்கள் எனக்காகப் பேச வேண்டும். எங்கள் பூர்விக அரசில் ஒரு பத்துக் கிராமத்தைத் திரும்பக் கொடுத்தாலும் போதும். நான் மிகவும் திருப்தி அடைவேன்!'' என்றான்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கச் சுந்தர சோழருக்கு ஒரே வியப்பும் மகிழ்ச்சியுமாயிருந்தது. அவர் சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, ''தளபதி! இந்த இளைஞனை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. தேவியின் முகத்தைப் பார்த்தால், இவனை மூன்றாவது பிள்ளையாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடலாமா என்றே யோசிப்பதாகத் தெரிகிறது. இவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கலாம் அல்லவா? அதில் ஒன்றும் கஷ்டம் இராதே! உமது அபிப்ராயம் என்ன?'' என்றார்.

''இதில் அடியேனுடைய அபிப்ராயத்துக்கு இடம் என்ன இருக்கிறது? இளவரசர் கரிகாலரின் கருத்தையல்லவா அறிய வேண்டும்?'' என்றார் தஞ்சைக் கோட்டைத் தளபதி.

''சக்கரவர்த்தி! இளவரசரைக் கேட்டால், பழுவூர்த்தேவரைக் கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார். பழுவூர்த்தேவரோ, இளவரசரைக் கேட்க வேண்டும் என்கிறார். இரண்டு பேருக்கும் நடுவில் என் கோரிக்கை....''

''பிள்ளாய்! நீ கவலைப்படாதே! இரண்டு பேரையும் சேர்த்து வைத்துக் கொண்டே கேட்டுவிடலாம்!'' என்றார் சக்கரவர்த்தி.

பிறகு சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து, ''தளபதி! இளவரசனிடமிருந்து இந்தப் பிள்ளை ஓலை கொண்டு வந்தான். பழையபடி, காஞ்சிக்கு நான் வரவேண்டும் என்றுதான் ஆதித்தன் ஓலையில் எழுதியிருக்கிறான். அங்கே புதிதாய் பொன் மாளிகை கட்டியிருக்கிறானாம். அதில் நான் சில நாளாவது தங்க வேண்டுமாம்!'' என்றார்.

''தங்கள் சித்தம் எப்படியோ, அப்படியே செய்கிறது!'' என்றார் கோட்டைத் தளபதி.

''ஆ! என்னுடைய சித்தம் எப்படியோ அப்படி நீர் நடத்துவீர். ஆனால் என் கால்கள் மறுக்கின்றன. காஞ்சிக்குப் பிரயாணம் செய்வது இயலாத காரியம். அரண்மனைப் பெண்டுகளைப் போல் பல்லக்கில் ஏறித் திரை போட்டுக்கொண்டு யாத்திரை செய்வதென்பதை நினைத்தாலே எனக்கு அருவருப்பாயிருக்கிறது. ஆதித்த கரிகாலனை இங்கே வந்துவிட்டுப் போகும்படி நான் மறு ஓலை எழுதிக் கொடுக்க வேண்டும்....''

''இளவரசர் இச்சமயம் காஞ்சியை விட்டு இங்கு வரலாமா? வடதிசையில் நம் பகைவர்கள் இன்னும் பலசாலிகளாக இருக்கிறார்களே!''

''பார்த்திபேந்திரனும் மலையமானும் அங்கிருந்து பார்த்துக்கொள்வார்கள். இளவரசன் இச்சமயம் இங்கே என் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஏதோ சொல்கிறது. அது மட்டுமல்ல; ஈழநாட்டுக்குச் சென்றிருக்கும் இளங்கோவையும் உடனே இங்கு வந்து சேரும்படி அழைப்பு அனுப்பவேண்டும். இரண்டு

பேரையும் வைத்துக் கொண்டு ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்ய விரும்புகிறேன். அருள்மொழி இங்கு வரும்போது, ஈழப்படைக்கு உணவு அனுப்புவது பற்றி உங்கள் ஆட்சேபத்தையும் அவனிடம் தெரிவிக்கலாம்....''

''சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும். ஈழத்துக்கு உணவு அனுப்புவதை நான் ஆட்சேபிக்கவில்லை. தனதான்யாதிகாரியும் ஆட்சேபிக்க வில்லை. சோழ நாட்டுக் குடிமக்கள் ஆட்சேபிக்கிறார்கள். சென்ற அறுவடையில் சோழ நாட்டில் விளைவு குறைந்துவிட்டது. நம்முடைய மக்களுக்கே போதாமலிருக்கும்போது, இலங்கைக்குக் கப்பல் கப்பலாக அரிசி அனுப்புவதை மக்கள் ஆட்சேபிக்கிறார்கள்! தற்போது வாய்க்குள் முணுமுணுக்கிறார்கள். கொஞ்ச நாள் போனால், மக்களின் கூச்சல் பலமாகும். தங்கள் உடல் நிலையைப் பாதிக்கும்படி இந்த அரண்மனைக்குள்ளேயும் அவர்களுடைய கூச்சல் வந்து கேட்கும்.....!''

''குடிமக்கள் ஆட்சேபிக்கிற காரியத்தைச் செய்ய அருள்மொழி ஒருநாளும் விரும்ப மாட்டான். எல்லாவற்றுக்கும், அவன் ஒரு தட்வை இங்கு வந்துவிட்டுப் போகட்டும். பெரிய பழுவேட்டரையர் வந்ததும் இலங்கைக்கு ஆள் அனுப்புவது பற்றி முடிவு செய்யலாம். அவர் எப்போது திரும்புகிறார்?''

''இன்று இரவு கட்டாயம் வந்துவிடுவார்!''

''காஞ்சிக்கும் நாளைய தினம் ஓலை எழுதி அனுப்பலாம். இந்தப் பிள்ளையினிடமே அந்த ஓலையையும் கொடுத்தனுப்பலாம் அல்லவா?''

''இந்தச் சிறுவன் காஞ்சியிலிருந்து ஒரே மூச்சில் வந்திருக்கிறான். சில நாள் இவன் இங்கேயே தங்கி இளைப்பாறிவிட்டுப் போகட்டும். வேறு ஆளிடம் ஓலையைக் கொடுத்து அனுப்பலாம்.''

''அப்படியே செய்க. இளவரசன் வருகிறவரையிலே கூட இவன் இங்கேயே இருக்கலாம்!''

இச்சமயம் மலையமான் மகள் எழுந்து நிற்கவே, சின்னப் பழுவேட்டரையர், ''இன்று அதிக நேரம் தங்களுக்குப் பேசும் சிரமம் கொடுத்துவிட்டேன். மன்னிக்க வேணும். தேவி எச்சரிக்கை செய்யும் வரையில் நீண்டுவிட்டது!'' என்று சொன்னார்.

''தளபதி! இந்தப் பிள்ளை நம் விருந்தாளி. இவனுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுங்கள். சக்கரவர்த்திக்கு மட்டும் உடம்பு சரியாயிருந்தால், இவனை நமது அரண்மனையிலேயே இருக்கச் சொல்லியிருக்கலாம்!'' என்றாள் மலையமான் மகள்.

''நான் கவனித்துக் கொள்கிறேன், தாயே! தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். நன்றாய்க் கவனித்துக் கொள்கிறேன்!'' என்றார் சின்னப் பழுவேட்டரையர். அப்போது அவரையறியாமலே அவருடைய ஒரு கை மீசையைத் தொட்டு முறுக்கிற்று.

அத்தியாயம் 30

சித்திர மண்டபம்

சின்னப் பழுவேட்டரையர் வந்தியத்தேவனைத் தம்முடன் ஆஸ்தான மண்டபத்துக்கு அழைத்துப் போனார். சக்கரவர்த்தியிடம் அவன் கூறியது என்ன என்பதைப் பற்றி அவன் சொன்ன சமாதானம் அவருக்கு அவ்வளவாகப் பூரண திருப்தி அளிக்கவில்லை. சக்கரவர்த்தியைத் தனியாகப் போய்ப் பார்க்கும்படி அவனுக்கு அநுமதி அளித்தது ஒருவேளை தவறோ என்றும் தோன்றியது. ஆதித்த கரிகாலரிடமிருந்து வந்தவனாதலால், அவனைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டியது முறை. ஆனால் தமையனார் முத்திரை மோதிரத்துடன் அனுப்பியுள்ளபடியால் சந்தேகிக்க



பராந்தகச் சக்கரவர்த்தி.

இடமில்லை. ஆகா! இம்மாதிரி காரியங்களில் பெரியவருக்கு வேறொருவர் ஜாக்கிரதை சொல்லித் தர வேண்டுமா, என்ன? ஆனாலும், தாம் திடீரென்று தரிசன மண்டபத்துக்குள் சென்ற பொழுது அவ்வாலிபன் தயங்கி நின்று பயந்தவன் போல் விழித்தது அவர் கண்முன்னால் தோன்றியது. "அபாயம்! அபாயம்!" என்று அவன் கூவியது நன்றாகக் காதில் விழுந்ததாக ஞாபகம் வந்தது. 'அபயம்' என்று சொல்லியிருந்தால், அது தம் காதில் 'அபாயம்' என்று விழுந்திருக்கக் கூடியது சாத்தியமா? எல்லாவற்றுக்கும் இவனை உடனே திருப்பி அனுப்பாமலிருப்பது நல்லது. தமையனார் வந்த பிறகு இவனைப் பற்றி நன்றாய்த் தெரிந்து கொண்டு பிறகு உசிதமானதைச் செய்யலாம். இம்மாதிரி தீரனாகிய வாலிபனை நாம் நம்முடைய அந்தரங்கக் காவற் படையில் சேர்த்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். சமயத்தில் உபயோகமாயிருப்பான். ஏன்? இவனுக்கு இவனுடைய முன்னோர்களின் பழைய அரசில் ஒரு பகுதியை வாங்கிக் கொடுந்தாலும் கொடுக்கலாம். இம்மாதிரி பிள்ளைகளுக்கு ஒருமுறை உதவி செய்துவிட்டால், அப்புறம் என்றைக்கும் நமக்குக் கட்டுப்பட்டு நன்றியுடனிருப்பார்கள். ஒருவேளை, இவன் உறுதியான விரோதி என்று ஏற்பட்டுவிட்டால், அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எதற்கும் தமையனார் வந்து சேரட்டும்; பார்க்கலாம்.

ஆஸ்தான மண்டபம் சென்றதும் வந்தியத்தேவன் அப்புறமும் இப்புறமும் ஆவலுடன் பார்க்கத் தொடங்கினான். தளபதியிடம் தான் ஓலையை எடுத்துக் கொடுத்த இடத்தில் உற்று உற்று நன்றாகப் பார்த்தான். தப்பித் தவறி இன்னொரு ஓலை, — அந்த முக்கியமான ஓலை கிடக்கிறதா என்றுதான். அதை மட்டும் கண்டுபிடிக்க முடியாவிட்டால், தன்னைப் போன்ற மூடன் வேறு யாரும் இருக்க முடியாது! உலகமே புகழும் சோழ குலத்து அரசிளங் குமரியைத் தான் பார்க்க முடியாமலே போய்விடும். ஆதித்த கரிகாலர் தன்னிடம் ஒப்புவித்த பணியில் சரி பாதியைச் செய்ய முடியாமலே போய்விடும்.

சின்னப் பழுவேட்டரையர் அங்கிருந்த ஏவலாளர்களில் ஒருவனைப் பார்த்து, "இந்தப் பிள்ளையை நமது அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ! விருந்தாளி விடுதியில் வைத்து வேண்டிய வசதிகள் செய்து கொடுத்துப் பார்த்துக் கொள்! நான் வரும் வரையில் அங்கேயே இரு!" என்றார்.

வந்தியத் தேவனும் ஏவலாளனும் வெளியே சென்ற உடன், இன்னொருவன் தளபதியிடம் பயபக்தியுடன் நெருங்கி, ஓர் ஓலைச் சுருளை நீட்டினான். "இங்கிருந்து தரிசன மண்டபத்துக்குப் போகும் வழியில் இது கிடந்தது. இப்போது சென்ற பையனுடைய மடியிலிருந்து விழுந்திருக்கக் கூடும்!" என்று சொன்னான்.

தளபதி அதை ஆர்வத்துடன் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அவருடைய புருவங்கள் நெற்றியின் சரி பாதி வரையில் உயர்ந்து நெரிந்தன. அவருடைய முகத்தில் கொடூரமான மாறுதல் ஒன்று உண்டாயிற்று.

(தொடர்ச்சி 45—ஆம் பக்கம்)

விருப்பம்!

ஹனீபா

திருமணம் பண்டிகை மற்றும் விழாக்களுக்கு அழகழகான காஞ்சீபுரம், பனாரஸ், தர்மாபுரம் ஆரணி பட்டுப்படவைகள் உங்கள் விருப்பம்போல் எங்களிடம் கிடைக்கும்.

எங்கும் கிடைக்காத டிசைன்களில் வகைவகையான வண்ணங்களிலான பட்டுப் புடவைகள் உங்கள் விருப்பத்திற்கேற்ப எங்களிடம் உள்ளது.

பட்டுப் புடவைமட்டுமல்லாமல் மில் புடவைகளும் உங்கள் விருப்பம் போல் எங்களிடம் கிடைக்கும்.


ஆண்களுக்கான பேண்ட், ஷர்ட் துணி வகைகள், ரெடிமேட் ஆடைகளை உங்கள் விருப்பம் போல் எங்களிடம் வாங்கலாம்.

இவ்வளவு உயர்ந்த தரமுள்ள துணி வகைகள் குறைந்த விலையில் உங்கள் விருப்பம் போல் எங்களிடம் கிடைக்கிறதென்றால் அது சிங்கப்பூர் மலேசியாவில் துணி விற்பனையில் கொடிகட்டி பறக்கும் ஹனீபா அவர்களின் நேரடிப் பார்வையில் துணிகள் கொள்முதல் செய்யப்படுவதனுல் உங்கள் விருப்பம் நிறைவு பெறுவது ஹனீபாவிலே.

ஹனீபா
டெக்ஸ்டைல்ஸ்

14, சர் தியாகராயா ரோடு,
பாண்டி பஜார்,
சென்னை-600017

national 1455



திருப்பங்களில் வலுவான பிடிப்பு !

ரிங் சைப்ஸ் கொண்ட முதல் ஸ்கூட்டர் டயர், அதாவது பாதையில் நல்ல பிடிப்பு. கடினமான திருப்பங்களிலும்... அதிகபட்ச வேகத்திலும் கூட.

ஸியெட் ஸ்கூட்டர் டயர்கள்-ஏன்?





முழுமையான பாதுகாப்பு !

கரடு முரடான பாதைகளில், சடன் பிரேக் போட வசதியாக நூதன ட்ரெட் அமைப்பு. ஸியெட் ஸ்கூட்டர் டயர் எந்தத் தொந்தரவையும் எளிதாக சமாளிக்கிறது.

ULKA-CT-7-87 TAM

"ஆஹா! இளைய பிராட்டிக்கு ஆதித்த கரிகாலர் எழுதிய ஓலை. 'அந்தரங்கமான காரியங்களுக்கு உண்மையான வீரன் ஒருவன் — நினைத்த காரியத்தை முடிக்கக் கூடிய தீரன், — வேண்டும் என்று கேட்டிருந்தாயல்லவா? அதற்காக இவனை அனுப்பியிருக்கிறேன். இவனைப் பூரணமாக நம்பி எந்த முக்கியமான காரியத்தையும் ஒப்புவிக்கலாம்' என்று இளவரசர் தம் கைப்பட எழுதியிருக்கிறார். ஆ! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இந்த ஓலையைப் பற்றிப் பெரியவருக்குத் தெரியுமோ, என்னவோ? இவன் விஷயத்தில் இன்னும் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!" என்று கோட்டைத் தளபதி தமக்குள்ளே சொல்லிக் கொண்டார். ஓலையைப் பொறுக்கிக் கொண்டு வந்தவனை அழைத்துக் காதோடு சில விஷயங்களைக் கூறினார். அவனும் உடனே புறப்பட்டுச் சென்றான்.

சின்னப் பழுவேட்டரையரின் மாளிகையில் வந்தியத் தேவனுக்கு ஆசார உபசாரங்கள் பலமாக நடந்தன. அவனைக் குளிக்கச் செய்து புதிய உடைகள் அணிந்து கொள்ளக் கொடுத்தார்கள். நல்ல உடைகள் அணிந்து கொள்வதில் பிரியமுள்ள வந்தியத் தேவனும் குதூகலத்தில் ஆழ்ந்தான். காணாமற் போன ஓலையைப் பற்றிய கவலையைக் கூட மறந்துவிட்டான். புது உடை உடுத்திய பின்னர் இராஜபோகமான அறுசுவைச் சிற்றுண்டிகளை அளித்தார்கள். பசித்திருந்த வந்தியத் தேவன் அவற்றை ஒருகைபார்த்தான். பின்னர், அவனைச் சின்னப் பழுவேட்டரையர் மாளிகையின் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். "தளபதி வருகிறவரையில் இந்த மண்டபத்திலுள்ள அபூர்வ சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்!" என்றார்கள். இவ்விதம் சொல்லிவிட்டு, காவலர்கள் மூன்று பேர் மண்டபத்தின் வெளியில் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டே சொக்கட்டான் ஆடத் தொடங்கினார்கள்.

சோழ குலத்தின் புதிய தலைநகரமான தஞ்சைபுரி அந்த நாளில் சிற்ப சித்திரக் கலைக்குப் பெயர் போனதாயிருந்தது. திருவையாற்றில் இசைக் கலையும், நடனக் கலையும் வளர்ந்தது போல் தஞ்சையில் சிற்ப சித்திரக் கலைகள் வளர்ந்து வந்தன.

முக்கியமாக, சின்னப் பழுவேட்டரையர் மாளிகையில் இருந்த சித்திர மண்டபம் மிகப் பிரசித்தி அடைந்திருந்தது. அந்த மண்டபத்துக்குள் இப்போது வந்தியத் தேவன் பிரவேசித்தான். சுவர்களில் பல அழகிய வர்ணங்களில் தீட்டியிருந்த அற்புதமான சித்திரங்களைப் பார்த்துப் பார்த்துப் புளகாங்கிதம் அடைந்தான். அந்த ஆனந்தத்தில் தன்னை மறந்தான்; தான் வந்த முக்கியமான காரியத்தையுங் கூட மறந்தான்.

இராஜாதித்யன்



சோழ வம்சத்தின் பூர்வீக அரசர்களையும் அவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் சித்திரிக்கும் காட்சிகள் அவனுடைய கவனத்தைக் கவர்ந்து பரவசமடையச் செய்தன. முக்கியமாக, சென்ற நூறு வருஷத்துச் சோழர்களின் சரித்திரம் அந்தச் சித்திர மண்டபத்தில் பெரும் பகுதியை ஆக்ரமித்துக் கொண்டிருந்தன. வந்தியத்தேவனுக்கு அதிகமான ஆர்வத்தை உண்டாக்கின சித்திரங்களும் அவைதான்.

இந்தக் கட்டத்தில், சென்ற நூறு வருஷமாகப் பழையாறையிலும் தஞ்சையிலும் இருந்து அரசு புரிந்த சோழ மன்னர்களின் வம்ச பரம்பரையை வாசகர்களுக்குச் சுருக்கமாக ஞாபகப்படுத்த விரும்புகிறோம். இனி இந்தக் கதையில், மேலே



வரும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதற்கு அதைத் தெரிந்து கொள்வது மிக்க உபயோகமாயிருக்கும்.

தொண்ணூற்றுறு போர்க் காயங்களைத் தன் திருமேனியில் ஆபரணங்களாகப் பூண்ட **விஜயாலயசோழனை**ப் பற்றி முன்னமே கூறியிருக்கிறோம்.

சோழ மன்னர்கள் **பரகேசரி, இராஜகேசரி** என்னும் பட்டங்களை மாறி மாறிப் புனைந்து கொள்ளுவது வழக்கம். பரகேசரி விஜயாலயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் **இராஜகேசரி ஆதித்த சோழன்** பட்டத்துக்கு வந்தான். அவன் தந்தைக்குத் தகுந்த தனயனுக விளங்கினுன். முதலில் அவன் பல்லவர் கட்சியில் நின்று பாண்டியனைத் தோற்கடித்துச் சோழ ராஜ்யத்தை நிலைப்படுத்திக் கொண்டான். பிறகு, பல்லவன் அபராஜிதவர்மனேடு போர் தொடுத்தான். யானை மீது அம்பாரியில் இருந்து போர் புரிந்த அபராஜித வர்மன் மீது ஆதித்தசோழன்தாவிப் பாய்ந்து அவனைக் கொன்று தொண்டை மண்டலத்தை வசப்படுத்தினுன். பிறகு கொங்கு மண்டலமும் இவன் ஆட்சிக்குள் வந்தது. ஆதித்தன் சிறந்த சிவபக்தன். காவிரி ஆறு உற்பத்தியாகும் சஹ்ஸ்ய மலையிலிருந்து அப்புண்ணிய நதி கடலில் கலக்கும் இடம் வரையில் ஆதித்த சோழன் பல சிவாலயங்களை எடுப்பித்தான்.



தக்கோலப் பெரும்போர்

இராஜகேசரி ஆதித்த சோழனுக்குப் பிறகு **பரகேசரி பராந்தகன்** பட்டத்துக்கு வந்தான். நாற்பத்தாறு ஆண்டு காலம் அரசு புரிந்தான். இமயத்தில் புலிச் சின்னம் பொறித்த கரிகால் பெருவளத்தானுக்குப் பின்னர் சோழ வம்சத்தில் மாபெரும் மன்னன் பராந்தகன்தான். வீர நாராயணன், பண்டித வத்சலன், குஞ்சர மல்லன், சூர சிகாமணி என்பன போன்ற பல பட்டப் பெயர்கள் அவனுக்கு உண்டு. ''மதுரையும் ஈழமும் கொண்டவன்'' என்ற பட்டமும் உண்டு. இந்த முதற் பராந்தகன் காலத்தி

லேயே சோழ சாம்ராஜ்யம் கன்யாகுமரியிலிருந்து கிருஷ்ணா நதி வரையில் பரவியது. ஈழ நாட்டிலும் சிறிது காலம் புலிக் கொடி பறந்தது. தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன்கூரை வேய்ந்து புகழ் பெற்ற பராந்தகனும் இவனேதான். இவனுடைய ஆட்சியின் இறுதி நாட்களில் சோழ சாம்ராஜ்யத்துக்குச் சில பேரபாயங்கள் வந்தன. அந்த நாளில் வடக்கே பெருவலி படைத்திருந்த இராஷ்டிர கூடர்கள் சோழர்களுடைய பெருகி வந்த பலத்தை ஒடுக்க முனைந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தின் மீது படை எடுத்து வந்து ஓரளவு வெற்றியும் அடைந்தார்கள்.

பராந்தகச் சக்கரவர்த்திக்குமூன்றுபுதல்வர்கள் உண்டு. இவர்களில் வீராதி வீரனாக விளங்கியவன் மூத்த புதல்வனாகிய **இராஜாதித்யன்** என்பவன். வடநாட்டுப் படையெடுப்பை எதிர்பார்த்து இராஜாதித்யன் திருமுனைப் பாடி நாட்டில் பெரும் சைன்யத்துடன் பல காலம் தங்கியிருந்தான். தன் தந்தையின் பெயர் விளங்கும்படி வீரநாராயண ஏரி எடுத்தான்.

அரக்கோணத்துக்கு அருகில் **தக்கோலம்**என்னுமிடத்தில் சோழசைன்யத்துக்கும் இராஷ்டிரக் கூடப் படைகளுக்கும் பயங்கரமான பெரும்போர் நடந்தது. இந்தப் போரில் எதிரிப் படைகளை அதா ஹதம் செய்து தன் வீரப் புகழை நிலைநாட்டிய பிறகு, இராஜாதித்யன் போர்க்களத்தில் உயிர் துறந்து வீர சொர்க்கம் அடைந்தான். இவனும் பல்லவ அபராஜித வர்மனைப் போல் யானை மீதிருந்து போர்புரிந்து யானை மேலிருந்தபடியே இறந்தபடியால், இவனை 'ஆனை மேல் துஞ்சிய தேவன்' என்று கல்வெட்டுச் சாஸனங்கள் போற்றிப் புகழ்கின்றன.



இராஜாதித்யன் மட்டும் இறந்திரா விட்டால், அவனே பராந்தக சக்கரவர்த்திக்குப் பிறகு சோழ சிம்மாதனம் ஏறியிருக்க வேண்டும். இவனுடைய சந்ததிகளே இவனுக்குப் பின்னர் முறையாகப் பட்டத்துக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் இளவரசன் இராஜாதித்யன் பட்டத்துக்கு வராமலும் சந்ததியில்லாமலும் இறந்துவிடவே, இவனுடைய இளைய சகோதரர் **கண்டராதித்த தேவர்** தந்தையின் விருப்பத்தின்படி இராஜகேசரி பட்டத்துடன் சிங்காதனம் ஏறினார்.

இவர் தமது தந்தையையும் பாட்டனையும் போலவே சிவபக்தி மிகுந்தவர். அத்துடன் தமிழன்பு மிக்கவர். உண்மையில் இவருக்கு இராஜ்யம் ஆளுவதில் அவ்வளவு சிரத்தையே இருக்கவில்லை. ஆலய வழிபாட்டிலும் தமிழ் இன்பத்திலும் அதிகமாக ஈடுபட்டிருந்தார். மகான்களாகிய நாயன்மார்களைப் பின் பற்றிச் சிவபெருமான் மீது துதிப் பாடல்கள் பாடினார். 'திருவிசைப்பா' என்று வழங்கும் இப் பாடல்களில் கடைசிப் பாட்டில் இவர் தம்மைப் பற்றியே பின்வருமாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்:—

"சீரான்மல்கு தில்லைச் செம்பொன்
அம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன்
தஞ்சையர்கோன் கலந்த
ஆராவின் சொற் கண்டராதித்தன்
அருந்தமிழ் மாலை வல்லார்
பேரா உலகிற் பெருமை யோடும்
பேரின்ப மெய்துவரே!"

விஜயாலயனுக்குப்பிற்பட்ட சோழ மன்னர்கள் பழையாறையிலும்தஞ்சையிலும் வசித்த போதிலும் பூர்விகச் சோழத் தலைநகர் உறையூர் என்னும் பாத்தியதையை விட்டுவிடுவதில்லை. உறையூருக்குஇன்னொருபெயர்**கோழி** என்பதாகும். ஆகையால் சோழ மன்னர்கள் தங்களைக் **"கோழி வேந்தர்"** என்று சொல்லிக் கொண்டார்கள்.

கண்டராதித்த தேவர் சிம்மாசனத்திலிருந்து பெயரளவில் அரசு புரிந்த போதிலும், உண்மையில் அவருடைய இளைய சகோதரனாகிய அரிஞ்சயன்தான் இராஜ்ய விவகாரங்களைக் கவனித்து வந்தான். இராஜாதித்யனுக்குத் துணையாக அரிஞ்சயன் திருநாவலூர் முதலிய இடங்களில் சைன்யங்களுடன் தங்கியிருந்தான். இராஷ்டிர கூடர்களுடன் வீரப் போர் நடத்தினான். தக்கோலத்தில் சோழ சைன்யத்துக்கு நேர்ந்த பெருந் தோல்வியை விரைவிலேயே வெற்றியாக மாற்றிக் கொண்டான். இராஷ்டிர கூடர் படையெடுப்பைத் தென்பெண்ணைக்கு அப்பாலேயே தடுத்து நிறுத்தினான்.

எனவே, இராஜகேசரி கண்டராதித்த சோழர் தம் தம்பி அரிஞ்சயனுக்கு யுவராஜ பட்டம் சூட்டி அவனே தமக்குப் பின் சோழ சிங்காதனத்துக்கு உரியவன் என்றும் நாடறியத் தெரிவித்துவிட்டார்.

இவ்விதம் கண்டராதித்தர் முடிவு செய்ததற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருந்தது. இவருடைய மூத்த மனைவி இவர் பட்டத்துக்கு வருவதற்கு முன்பே காலமாகிவிட்டாள். பிறகு வெகு காலம் கண்டராதித்தர் மணம் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால் இவருடைய தம்பி அரிஞ்சயனுக்கோ அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த புதல்வன் இருந்தான். பாட்டனாரின் பராந்தகன் என்னும் பெயரையும், மக்கள் அளித்த சுந்தர சோழன் என்னும் காரணப் பெயரையும் சூட்டிக் கொண்டிருந்தான்.

எனவே, தமக்குப் பிறகு தமது சகோதரன் அரிஞ்சயனும் அரிஞ்சயனுக்குப் பிறகு அவனுடைய புதல்வன் சுந்தரசோழனும் பட்டத்துக்கு வர வேண்டும் என்று கண்டராதித்தர் திருவுளங் கொண்டார். இந்த ஏற்பாட்டிற்குச் சாமந்த கணத்தினர், தண்ட நாயகர்கள், பொதுஜனப் பிரதிநிதிகள் எல்லாருடைய சம்மதத்தையும் ஒருமனதாகப் பெற்றுப் பகிரங்கமாக உலகறியத் தெரிவித்தும் விட்டார்.



சிவபக்தர் கண்டராதித்தர்

இந்த ஏற்பாடுகள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு கண்டராதித்தரின் வாழ்க்கையில் ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. மழவரையன் என்னும் சிற்றரசன் திருமகளை அவர் சந்திக்கும்படி நேர்ந்தது. அந்த மங்கையர் திலகத்தின் அழகும் அடக்கமும் சீலமும் சிவ பக்தியும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. முதிர்ந்த பிராயத்தில் அந்தப் பெண்மணியை மணந்து கொண்டார். இந்தத் திருமணத்தின் விளைவாக உரிய காலத்தில் ஒரு குழந்தையும் உதித்தது. அதற்கு மதுராந்தகன் என்று பெயரிட்டுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். ஆனால் அரசர் அரசி இருவருமே இராஜ்யம் சம்பந்தமாக முன்னம் செய்திருந்த ஏற்பாட்டை மாற்ற விரும்பவில்லை. தம்பதிகள் இருவரும் சிவ பக்தியிலும், விரக்தி மார்க்கத்திலும் ஈடுபட்டவர்களாதலால் தங்கள் அருமைப் புதல்வனையும் அந்த மார்க்

கத்திலேயே வளர்க்க விரும்பினார்கள். கேவலம் இந்த உலக சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் சிவலோக சாம்ராஜ்யம் எவ்வளவோ மேலானது என்று நம்பியவர்களாதலால், அந்தச் சிவலோக சாம்ராஜ்யத்துக்கு உரியவனாக மதுராந்தகனை வளர்க்க ஆசைப்பட்டார்கள். ஆகையால் கண்டராதித்தர் தமக்குப் பிறகு தம் சகோதரன் அரிஞ்சயனும் அவனுடைய சந்ததிகளுமே சோழ சாம்ராஜ்யத்துக்கு உரியவர்கள் என்ற தமது விருப்பத்தைப் பகிரங்கப்படுத்தி நிலைநாட்டினார்.

எனவே, இராஜாதித்தன், கண்டராதித்தர் என்னும் இரு உரிமையாளர் வம்சத்தைத் தாண்டி அரிஞ்சயன் வம்சத்தாருக்குச் சோழ சிங்காதனம் உரிமையாயிற்று.

கண்டராதித்தருக்குப் பிறகு அதிக காலம் பரகேசரி அரிஞ்சயன் ஜீவிய வந்தனாக இருக்கவில்லை. ஒரு வருஷத்திலேயே தமையனாரைப் பின் தொடர்ந்து தம்பியும் கைலாச பதவிக்குச் சென்றுவிட்டான்.

பின்னர், இளவரசர் சுந்தர சோழருக்கு நாட்டாரும் சிற்றரசர்களும் பிற அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து முடிசூட்டி மகிழ்ந்தார்கள். இராஜகேசரி சுந்தர சோழரும் அதிர்ஷ்ட வசத்தினால் தமக்குக் கிடைத்த மகத்தான பதவியைத் திறம்படச் சிறப்பாக வகித்தார். ஆட்சியின் ஆரம்ப காலத்தில் பல வீரப் போர்கள் புரிந்து பாண்டிய நாட்டையும் தொண்டைமண்டலத்தையும் மீண்டும் வென்றார். இராஷ்டிர கூடப் படைகளைத் தென்பெண்ணைக் கரையிலிருந்து விரட்டி அடித்தார்.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வர்களான ஆதித்த கரிகாலரும் அருள்மொழிவர்மரும் தந்தையை மிஞ்சக் கூடிய இணையற்ற வீரர்களாயிருந்தார்கள். அவர்கள் இருவரும் தந்தைக்குப் பரிபூரண உதவி செய்தார்கள். அவர்கள் மிகச் சிறு பிராயத்திலேயே போருக்குச் சென்று முன்னணியில் நின்று போர் புரிந்தார்கள்; அவர்கள் சென்ற போர்முனைகளிலெல்லாம் விஜயலக்ஷ்மி சோழர்களின் பக்கமே நிலை நின்று வந்தாள்.



அத்தியாயம் 31

"திருடர்! திருடர்!"

வி ஜயாலயசோழர் முதல் இரண்டாம் பராந்தக ராகிய சுந்தர சோழர் வரையில் சோழ மன்னர்களின் உயிர்ச் சித்திரங்களை நம் வீரன் வந்தியத்தேவன் பார்த்து மகிழ்ந்தான். ஆஹா! இவர்களில் ஒவ்வொருவரும் எப்பேர்ப்பட்டவர்கள்? எத்தகைய மகா வீரர்கள்! உயிரைத் திரணமாக மதித்து எவ்வளவு அரும் பெரும் செயல்களை இயற்றியிருக்கிறார்கள்! கதைகளிலும் காவியங்களிலும் கூட இப்படிக் கேட்டதில்லையே? இத்தகைய மன்னர் பரம்பரையைப் பெற்ற சோழ நாடு பாக்கியம் செய்த நாடு; இன்று அவர்களுடைய ஆட்சியின் கீழ் உள்ள நாடுகள் எல்லாம் பாக்கியம் செய்த நாடுகள்தான்.

மேற்கூறிய சோழ மன்னர்களின் சரித்திரங்களைச் சித்திரித்த காட்சிகளில் இன்னொரு முக்கியமான அம்சத்தை வந்தியத் தேவன் கவனித்தான். ஒவ்வொரு சோழ அரசருக்கும் பழுவூர்ச் சிற்றரசர் வம்சத்தினர் தலை சிறந்த உதவிகள் செய்திருக்கிறார்கள்;



வீரத் தொண்டுகள் பல புரிந்து வந்திருக்கிறார்கள்.

முத்தரையர் வசத்திலிருந்த தஞ்சைக் கோட்டையை முற்றுகையிட்டு முதலில் அந்நகரில் பிரவேசித்தவர் ஒரு பழுவேட்டரையர். இரு காலும் இழந்த விஜயாலய சோழன் திருப்புறம்பயம் போர்க்களத்தில் புகுந்து அதிபராக்கிரமச் செயல்களைப் புரிந்த போது அவனுக்குத் தோள் கொடுத்துத் தூக்கிச் சென்றவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் தலையில் கிரீடத்தை வைத்துப் பட்டாபிஷேகம் செய்வித்தவர் ஒரு பழுவேட்டரையர். ஆதித்த சோழன் யானை மீது பாய்ந்து பல்லவ அபராஜித வர்மனைக் கொன்றபோது ஆதித்தன் பாய்வதற்கு வசதியாக முதுகும் தோளும் கொடுத்தவர் ஒரு பழுவேட்டரையர். பராந்தக சக்கரவர்த்தி நடத்திய பல போர்களில் முன்னணியில் புலிக் கொடியை எடுத்துச் சென்றவர்கள் பழுவேட்டரையர்கள். இராஜாதித்யன் போர்க்களத்தில் காயம் பட்டு விழும்போது அவனை ஒரு பழுவேட்டரையர் தன் மடியின் மீது போட்டுக் கொண்டு, ''இராஷ்டிர கூடப் படைகள் தோற்று ஓடுகின்றன!'' என்ற செய்தியைத் தெரிவித்தார். அவ்விதமே, அரிஞ்சயருக்கும் சுந்தர சோழருக்கும் வீரத் தொண்டுகள் புரிந்து உதவியவர்கள் பழுவேட்டரையர்கள்தான்.

இதையெல்லாம் சித்திரக் காட்சிகளில் பிரத்யட்சமாகப் பார்த்த வல்லவரையன் சொல்லி முடியாத வியப்பில் ஆழ்ந்தான். அண்ணன் தம்பிகளான பழுவேட்டரையர்கள் இன்று சோழ நாட்டில் இவ்வளவு ஆதிக்கம் வகிப்பதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. சுந்தரசோழர் எது விஷயத்திற்கும் அவர்களுடைய யோசனையைக் கேட்டு நடப்பதிலும் வியப்பில்லை.

ஆனால், தான் இப்போது பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பது என்னவோ நிச்சயம். சின்னப் பழுவேட்டரையருக்குத் தன் பேரில் ஏதோ சந்தேகம் ஜனித்துவிட்டது. பெரியவர் வந்துவிட்டால், அந்தச் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிடும். முத்திரை மோதிரத்தின் குட்டு வெளியாகிவிடும். பிறகு தன்னுடைய கதி அதோகதிதான்! சின்னப் பழுவேட்டரையரின் நிர்வாகத்திலுள்ள தஞ்சாவூர்ப் பாதாளச் சிறையைப் பற்றி வல்லவரையன் கேள்விப்பட்டிருந்தான். அதில் ஒருவேளை தன்னை அடைத்து விடக் கூடும். பாதாளச் சிறையில் ஒருவனை ஒரு தடவை அடைத்துவிட்டால், பிறகு திரும்பி வெளியேறுவது அநேகமாக நடவாத காரியம். அப்படி வெளியேறினாலும் எலும்பும், தோலுமாய், அறிவை அடியோடு இழந்து, வெறும் பித்துக்குளியாகத்தான் வெளியேற முடியும்!

ஆகா! இத்தகைய பேரபாயத்திலிருந்து தப்புவது எப்படி? ஏதாவது யுக்தி செய்து பெரியவர் வருவதற்குள்ளே கோட்டையை விட்டு வெளியேறிவிட வேண்டும். பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை கூட நம் வீரனுக்கு இப்போது போய்விட்டது. உயிர் பிழைத்து, பாதாளச் சிறைக்குத் தப்பி, வெளியேறிவிட்டால் போதும்! ஓலையில்லாவிட்டாலும், குந்தவைப் பிராட்டியை நேரில் பார்த்துச் செய்தியைச் சொல்லி விடலாம். நம்பினால் நம்பட்டும்; நம்பாவிட்டால் போகட்டும்; ஆனால் தஞ்சைக் கோட்டையை விட்டு வெளியேறுவதற்கு என்ன வழி?

தான் உடுத்தியிருந்த பழைய ஆடைகள் என்ன ஆயின என்ற சந்தேகம் திடீரென்று வந்தியத்தேவன் மனத்தில் உதயமாயிற்று. தன்னுடைய உடைகளைப் பரிசிலனை செய்து பார்ப்பதற்காகவே தனக்கு இவ்வளவு உபசாரம் செய்து புது ஆடைகளும் கொடுத்திருக்கிறார்கள்! குந்தவை தேவியின் ஓலை தளபதியிடம் அகப்பட்டிருக்க வேண்டும்; சந்தேகமில்லை. தான் புலவர்களுடன் திரும்பிப் போய்விடா வண்ணம் தன் கையை இரும்புப் பிடியாக அவர் பிடித்ததின் காரணமும் இப்போது தெரிந்தது. ஒரு ஆளுக்கு மூன்று ஆளாய்த் தன்னுடன் அனுப்பிய காரணமும் தெரிந்தது. ஆகா! ஒரு யுக்தி! உடனே ஒரு யுக்தி கண்டு பிடிக்க வேண்டும்! பழுவேட்டரையர்

Binatone

3 YEAR QUARTZ GUARANTEE

on Colour Picture Tube

பினடோனின் நவீன குவார்ட்ஸ் நுட்பச் சாதனையின் பலன்

உங்கள் டிவியின் கலர்படக் குழாயை எல்லா நேரங்களிலும் பாதுகாக்கும் ஈடிணையற்றதொரு கண்டுபிடிப்பு; லண்டனிலும் ஜப்பானிலும் உள்ள பினடோன் ஆராய்ச்சி & அபிவிருத்திப் பிரிவு விஞ்ஞானபூர்வமாக நிரூபித்துள்ளது.

டிவி வாங்குவோர் ஒவ்வொரு நாளும் குவார்ட்ஸ் டிவியை கேட்டுவாங்குவதில் வியப்பில்லை.

புதியதை வாங்குங்கள், சிறந்ததை வாங்குங்கள், இதைவிடச் சிறந்தது வேறில்லை.



Binatone

*Q QUARTZ | C COLOUR | F FILTER | S SYSTEM

நீடித்துழைக்க தயாரிக்கப்பட்டது

மேல்விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் டீலருடன் தொடர்புகொள்க. சிரமம் இருப்பின் அணுகுக : பினடோன், எலக்ட்ரானிக்ஸ் 23/4788-90 அன்ஸாரி ரோடு, தரியாகஞ்ச், புதுதில்லி-110002.

Arms Communications-416 TAM

திரும்புவதற்குள்ளே கண்டு பிடிக்க வேணும்! — இதோ தோன்றிவிட்டது ஒரு யுக்தி! பார்க்க வேண்டியதுதான் ஒரு கை! வீர வேல் வெற்றி வேல்!

வந்தியத் தேவன் சித்திர மண்டபத்தின் பலகணி வழியாக வெளியே பார்த்தான். சின்னப் பழுவேட்டரையர் பரிவாரங்கள் புடை சூழக் குதிரை மேல் வந்து கொண்டிருந்தார். ஆகா! இதுதான் சமயம்! இனி ஒருகணமும் தாமதிக்கக் கூடாது.

வாசற்படிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிய ஏவலாளர்கள் மூவரும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தார்கள். மாளிகை வாசலில் சின்னப் பழுவேட்டரையர் வரும் சத்தம் அவர்களுடைய காதிலும் விழுந்தது.

வந்தியத் தேவன் அவர்கள் அருகில் நெருங்கி, "அண்ணன்மார்களே! நான் தரித்திருந்த உடைகள் எங்கே?" என்று கேட்டான்.

"அந்த அழுக்குத் துணிகள் இப்போது என்னத்துக்கு? எஜமான் உத்தரவுப்படி புதிய பட்டுப் பீதாம்பரங்கள் உனக்குக் கொடுத்திருக்கிறோமே!" என்றான் ஒருவன்.

"எனக்குப் புதிய உடைகள் தேவையில்லை. என்னுடைய பழைய துணிகளே போதும். அவற்றைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்!"

"அவை சலவைக்குப் போயிருக்கின்றன. வந்த உடனே தருகிறோம்."

"அதெல்லாம் முடியாது! நீங்கள் திருடர்கள். என்னுடைய பழைய உடையில் பணம் வைத்திருந்தேன். அதைத் திருடிக்கொள்வதற்காக எடுத்திருக்கிறீர்கள். உடனே கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால்....!"

"இல்லாவிட்டால், என்ன செய்துவிடுவாய், தம்பி! எங்கள் தலையை வெட்டித் தஞ்சாவூருக்கு அனுப்பிவிடுவாயோ? ஆனால் இதுதான் தஞ்சாவூர்; ஞாபகம் இருக்கட்டும்!"

"அடே! என் துணிகளை உடனே கொண்டு வருகிறாயா, இல்லையா?"

"இருந்தால்தானே தம்பி கொண்டு வருவேன்! அந்த அழுக்குத் துணிகளை வெட்டாற்று முதலைகளுக்குப் போட்டு விட்டோம்! முதலை வயிற்றில் போனது திரும்பி வருமா?"

"திருட்டுப் பயல்களே! என்னுடன் விளையாடுகிறீர்களா! இதோ உங்கள் எஜமானரிடம் சென்று சொல்கிறேன். பாருங்கள்!" என்று வந்தியத்தேவன் வாசற்படியைத் தாண்டத் தொடங்கினான். மூவரில் ஒருவன் அவனைத் தடுப்பதற்காக நெருங்கினான். வந்தியத்தேவன் அவனுடைய மூக்கை நோக்கிப் பலமாக ஒரு குத்து விட்டான். அவ்வளவுதான்; அந்த ஆள் மல்லாந்து கீழே விழுந்தான். அவன் மூக்கிலிருந்து இரத்தம் சொட்டத் தொடங்கியது.

இன்னொருவன் வந்தியத் தேவனுடன் மல் யுத்தம் செய்ய வருகிறவனைப் போல் இரண்டு கைகளையும் முன்னால் நீட்டிக் கொண்டு வந்தான். நீட்டிய கைகளை வந்தியத்தேவன் பற்றிக் கொண்டு, தன் கால்களில் ஒன்றை எதிராளியின் கால்களின் மத்தியில் விட்டு ஒரு முறுக்கு முறுக்கினான். அவ்வளவுதான்; அந்த மனிதன் 'அம்மாடி' என்று அலறிக் கொண்டு கீழே உட்கார்ந்துவிட்டான். இதற்குள் மூன்றாவது ஆளும் நெருங்கிவரவே, வந்தியத்தேவன் தன் கால்களை எடுத்துக் கொண்டு ஒரு காலால் எதிரியின் முழங்கால் முட்டைப் பார்த்து ஓர் உதை விட்டான். அவனும் அலறிக் கொண்டு கீழே விழுந்தான்.

மூன்று பேரும் சட்டுப்பென்று எழுந்து மறுபடியும் வந்தியத் தேவனைத் தாக்குவதற்கு வளைத்துக் கொண்டு வந்தார்கள். வெகு ஜாக்கிரதையாகவே வந்தார்கள்.

இதற்குள் மாளிகை வாசலில் குதிரை வந்து நின்ற சத்தம் கேட்டது.

வந்தியத் தேவன் தன் குரலின் சக்தியையெல்லாம் உபயோகித்துத் "திருடர்கள்! திருடர்கள்!" என்று சத்தமிட்டுக் கொண்டே அவர்கள் மீது பாய்ந்தான். மூன்று பேரும் அவனைப் பிடித்து நிறுத்தப் பார்த்தார்கள். மறுபடியும், "திருட்டுப் பயல்கள்!" "திருட்டுப் பயல்கள்!" என்று பெருங்குரலில் கூச்சலிட்டான் வந்தியத் தேவன்.


அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர், "இங்கே என்ன ரகளை?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார்.

(தொடரும்)


ஒருத்தரைப் போல் ஒருத்தர் நிறம் இருத்தல் இல்லை.
பொருத்தமளிக்க உமக்கென்றே 3 வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.
நேச்சுரல் —மாநிற மேனியருக்கு
லைட் —சிகப்பு மேனியருக்கு
கோல்டு —கருவண்ண மேனியருக்கு
லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய நேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் —தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரிட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக
லக்மே
காலமைன்
சரும வண்ணம் எவ்வண்ணம்
சாயலுண்டு அவ் வண்ணம்.
Tm

பொய்முகங்கள்!


மைதுவுக்கு அன்று பிறந்த நாள்...
மைதூ! அம்மா ஆர்டர் பண்ணினதை அப்பா வாங்கிண்டு வந்திருக்கார் பாரு!
ஓடி வந்த மைதூ தாயா-ரை அணைத்துக் கொண்டாள்...
சீ! ஒரு என்னை.. புடவை கசங்கிடும்!
ராஜா வருந்தினான்...
தனு டியர்! குழந்தை கிட்டே சதா ஏன் எரிஞ்சு விழறே...?
உங்களுக்கென்ன.. பேசுவீங்க? பெண்ணைப் பிறந்த நாள் அழகு, ஆடம்பரம்னு அலைய வேண்டியிருக்கே. இமேஜைக் காப்பாத்திக்கணுமே!


கதை: குஞ்சலம் ஜெயராம்
படம்: அரஸ்
அவசரப்படுத்தினாள் தனு...
சாரி, ஸார்! ஃப்ரெண்ட்ஸ் வர நேரமாச்சு. ஸ்வீட் ஸ்டால்ல ரசகுல்லா, சமோஸா ஆர்டர் பண்ணியிருக்கேன். சீக்கிரம் வாங்கிட்டு வாங்க...
ஆறு மணிக்கு மறுபடியும் டிரஸ் செய்து கொண்டு தயாரானாள் தனு -
மைதுவுக்கு நான் டிரஸ் பண்ணியிருக்கேன். பார் நல்லாயிருக்கா?
உம். கொஞ்சமா ஸ்பான்ஜ் டச்சப் பண்றேன். அது என் மேலே படாதே! டிரஸ் கலைஞ்சரும்!
விருந்தினரில் ஒருத்தியான ஸீதா மைதுவைத் தூக்கிக் கொஞ்சினாள்...
இந்த ஆன்ட்டி நல்லவங்க. என்னைக் கட்டிக்கிறாங்க அம்மா மாதிரி ஒதுக்கித் தள்ளலை...
ஸீதா மைதுவுக்குப் பர்ஸ் தந்து...
பிரிச்சுப் பாரு மைது!
அது கெட்ட பழக்கம்!


சித்ரா, தனுவிடம் ரகசியமாக...
குழந்தை -யின் ஆர்வத்தைக் கட்டுப்படுத்தாதே! பரிசுப் பொருட்களைப் பார்க்கட்டும்... அதை வச்சுண்டு விளையாடட்டும். ஷோ கேஸில் பூட்டி வைச்சுடாதே!
அம்மா பெரிசா உபதேசிக்க வந்துட்டா...
மேலும் விருந்தினர்கள் வர...
ஹாய் ரஞ்சு
ஹாய் ஷைலஜா!
மணி ஏழாகிவிட-
வைஷு டார்லிங்! கேக்கை வெட்டு... வா! அப்புறம் எல்லாருக்கும் டிபன் தரணும்!
முதல்ல கேண்டில் களை ஊதி அணை...
எதிர்பாராத விதமாக வைஷு...
மாட்டேன் போ! போன வாரம் அம்மா பர்த்டேக்கு வைச்ச மாதிரி முப்பத்தேழு கேண்டில் வைச்சாத்தான் ஊதி அணைப்பேன்! எனக்கு மட்டும் ஐந்து தானே வைச்சிருக்கே.....!


தனு அசடு வழிந்தாள்—
ஹி... ஹி... போன வாரம் எங்க வெட்டிங் டேயும் என் பிறந்த நாளோடு சேர்ந்து வந்ததாலே கல்யாணம் முடிஞ்சு எட்டு வருஷ மானதாலே எட்டு மெழுகு வர்த்திகள் கேக்கில் அதிகமா சேர்த்து வெச்சோம் அதான்....
விருந்தினர் விடை பெற்ற பிறகு—
நான் சமாளிக்கற துக்காகச் சொ-ன்னதை யாரும் நம்பப் போற தில்லே.... அதுனால்...
தனு! இது நீதை உன் இமே ஜை உடைச்சுட் டான்னு அவளோட் கோவிக்காதே!
கணவரை அதிசயத்தில் ஆழ்த்தினாள் தனு—
இல்லே ராஜா! வைஷு என் பொய்யா ன இமேஜை உடைத்தெறிந்து எனக்குச் சுதந் திரம் தந்துட்டா. அவளிடம் அன்பா இருப் பதன் மூலம் அதற்கு நன்றி சொல்லப் போறேன்...!


இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்?

24

கிருஷ்ணனின் காலும், மனமும் சேர்ந்து முரண்டு பிடித்தன. ஓர் அடி கூட முன்னே நகர மறுத்தன. நட்பின் அகண்ட பரிமாண அழைப்பில் பல்லாயிரம் மைல் கடந்து இந்த வீட்டைத் தேடி வந்தவர் திகைத்து, மலைத்து நின்றார். இந்த வீட்டிற்குள் என்றால் எப்படி நுழைய முடியும்? எதைத் தேடி நான் இனிமேலும் சுவாதீனத்துடன் உள்ளே செல்ல முடியும்? இந்த ஓட்டு வீட்டின் திண்ணையிலே அவரும் சுந்தரமும் சேர்ந்து கழித்த நாட்கள் எத்தனை! இந்தச் சின்ன ஊர் அவருக்கு நெருக்கமானதற்குக் காரணம் அவர் பிறந்து, வளர்ந்த இடம், இன்றும் அவரைப் பெற்றவள் வசிக்குமிடம் என்ற ஒரு காரணத்தால் மட்டும்தானா? மழலைப் பேச்சு உதிரத் தொடங்கும்போதே ஆரம்பித்த ஒரு நட்பு எத்தனை ஆண்டுகளாக அதே பலத்துடன் தொடர்ந்திருக்கிறது. வாழ்வில் தடங்கள் மாறி, வாழ்க்கை முறை மாறி, வசதிகள் மாறிவிட்ட போதும் நட்பு என்னும் எவ்வளவு மகத்தான சக்தி அவர்களைப் பிணைத்திருக்கிறது! கொடுக்கல், வாங்கல் எதுவுமில்லாத இரு மனம் புரிந்து கொண்டு, பகிர்ந்து கொண்ட அற்புதமான நட்பு. உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும், நெருங்கியிருந்த இரு நட்பு உள்ளங்களில், ஒன்றை இப்படி அகாலமாகப் பறித்துக் கொள்ளக் கடவுளுக்குத்தான் எப்படி மனம் வந்தது.... எந்தவித நோய் நொடியுமின்றி, ஆஜானுபாகுவாக ஆண்மை அழகின் சித்திரமாக நின்ற சுந்தரம், திடீரென இறப்பான் என்று அவர் என்றாவது நினைத்தாவது பார்த்திருக்கிறாரா? மரணம் என்பதன் சாத்தியக் கூற்றைக் கூட அவர் சிந்தித்துப் பார்த்ததில்லையே.... சுந்தரம் இப்படி, மறைந்து விடுவான் என்று தெரிந்திருந்தால் அவர் மனத்தில் ரகசியமாக வைத்திருந்த ஒரு திட்டத்தைப் பற்றிச் சென்ற முறையாவது மனம் திறந்து சுந்தரத்திடம் பேசியிருப்பாரே.... இப்போதே என்ன அவசரம் என்று எண்ணியது எவ்வளவு தவறாகப் போய் விட்டது.

வீட்டு வாசலிலேயே மலைத்து நிற்பதில் என்ன பயன்? உள்ளே சென்று ஞானத்தையும், குழந்தைகளையும் சந்திக்க வேண்டும். அவரிடம் அந்தத் துணிவில்லை. வாயிற் திண்ணையிலேயே அமர்ந்து கிருஷ்ணன் விம்மி விம்மி அழலானார். தன் பணம், பதவி, கல்வி, செல்வாக்கு அத்தனையும் மறந்து. 'என்னை விட்டுட்டுப் போயிட்டியேடா சுந்தரம்' என்று பொங்கிப் பொங்கிக் குலுங்கினார்.

திருமணமான புதிதிலும் சரி, சமீபகாலங்களிலும் சரி, அவர் மனைவி பலமுறை கூறியிருக்கிறாள். ''உங்களுக்கும் சுந்தரம் அண்ணாவிற்கும் இடையிலான நட்பைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாகக் கூட இருக்கு. உங்க நட்பிலே புகைச்சல், பொறாமை போட்டி எதுவுமில்லையே... நாம இப்படிச் சாதாரணமாக நின்றுவிட, இவன் இவ்வளவு பெரிய மனுஷனாயிட்டானேன்னு அவரும் நினைக்கல்லே. இவன் என்ன சாதாரண ஸ்கூல் வாத்தியார்னு நீங்களும் நினைக்கல்லே. ரெண்டு பேரும் சேர்ந்தா அது என்னதான் மணிக் கணக்காப் பேசுவேளோ?'' என்று வியப்பாள். ''உலகத்திலே இத்தகைய நட்பெல்லாம் சாதாரணமா ஏற்படுகிற விஷயமில்லே'' என்பாள்.

உண்மைதான். அவர்கள் நட்பு சாதாரண உறவு நிலையைக் கடந்ததுதான். அதில் நான் என்ற இறுமாப்பிருந்ததில்லை. அதனால்தான், சுந்தரத்தின் உடன்பிறந்த சகோதரர்கள் இருந்தும், உடன் பிறவாத இந்தச் சகோதரன் — நண்பனின் குடும்பத்தின் எதிர்காலத்திற்கே தான் பொறுப்பு என்பது போல் இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கிறார்.

மோகம் என்பது இதுதானோ?

உஷா சுப்பிரமணியன்

இன்று காலையிலிருந்து அவர் கேட்டறிந்த விஷயங்கள் வேறு அவரை அடியோடு உலுக்கியிருந்தன. நண்பன் பெற்ற மகள் வேறு சொல்லிக் கொள்ளாமல் ஊரிலிருந்து ஓடிவிட்டாளாம். லோகுவை எங்கே தேடுவது? அவள் எதிர்காலத்துக்கு என்ன வழி செய்வது? கட்டுப்பாடுகள் நிறைந்த குடும்பத்தில் வெளியாளான அவர் எத்தகைய முடிவுகள் எடுத்திட முடியும்...? எல்லாவற்றுக்கும் மேல் இன்று மதியத்திலிருந்து அவரை உள்ளூரக் குடைந்து கொண்டிருக்கும் விஷயம்.... அவரால் நம்பவே முடியவில்லையே... சுந்தரத்தின் வாழ்வில் இத்தகைய அவலம் நிகழ முடியுமா?

வாயிற் திண்ணையில் தனியே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தவரை முதலில் பார்த்தது புவனாதான். ''மாமா'' அவர் இருகைகளையும் பற்றிக் கொண்டாள். ''மாமா, அப்பா போயிட்டா.... எங்கப்பா போயிட்டா....'' என்று 'ஓ'வென அலறத் துவங்கினாள். அவளைச் சமாதானப்படுத்துவது எப்படி என்று புரியாமல், அவரும் சேர்ந்து வெடித்தார். இந்தக் குழந்தை மீது சுந்தரம் உயிரையே வைத்திருந்தான் என அவர் அறிவார். தலைவனற்றுப் போன இந்தக் கப்பல் இனி எவ்விதம் மிதக்கும்... மனத்தைத் திடப்

படுத்திக் கொண்டார். "புவனு, நான் இப்ப உள்ளே போய் உங்கம்மாவைத் துக்கம் விசாரிச்சுட்டு வர்றேன். எனக்கு ஒன்னோட தனியாப் பேசணும்."

"அம்மாவிடம் என்ன துக்கம் வேண்டியிருக்கு மாமா? அவளாலதான் எங்கப்பா செத்தார். என்னைப் பெரிய பாடகியாக்கப் போறேன்னு பட்டணத்திலே போய் ஒக்காந்த தனுலதான் எங்கப்பா கவனிப்பாரில்லாம செத்துட்டார். லோகு ஓடிப் போயிட்டா... எல்லாம் எங்கம்மாவால்தான்...."

"அப்படியெல்லாம் அசட்டுத்தனமாப் பேசாதே... உங்கம்மா உன்னே முன்னுக்குக் கொண்டு வரணும்னுதானே மெட்ராஸுக்குப் போனு. ஹார்ட் அட்டாக் என்றால் நீங்கள் பக்கத்திலே இருக்கும் போதும் நடந்திருக்கக் கூடும். அம்மாவைக் கேவலமாப் பேசக் கூடாதும்மா..." கிருஷ்ணன் புவனுவை மெல்லச் சமாதானம் செய்துவிட்டு உள்ளே சென்றார். "வாடா கிச்சு..." என்று வாயிற் கதவில் குனிந்து சுந்தரம் வரவேற்பது போன்ற பிரமை ஏற்பட்டது. நெஞ்சம் சுரீர் என வலித்தது. கண்கள் பனித்தன.

"அண்ணு, உங்க தம்பி இப்படி என் பூவையும், பொட்டையும் பறிச்சுட்டுப் போயிட்டாரே...." என்று ஞானம் அழுதது அவருக்கு விநோதமாக இருந்தது. இந்தப் பெண்களுக்குக் கணவன் இழப்பை விட, பூவும்பொட்டும்தான் முக்கியமாகத்தோன்றுகிறதா.... ஞானம் புலம்பித் தீர்த்தாள். "நான் இனிமேல் இங்கே தனியா என்னங்க பண்ணுவேன். அவரில்லாத வீட்டிலே நான் என்ன தான் செய்வேன்... சடங்கு முடிஞ்சு ரெண்டு நாளிலே பட்டணத்துக்குப் போறேங்க..." என்று புலம்பியழுததுடன், லோகு சென்னையில் நலமாக இருக்கிறாள் என்ற விவரத்தையும் சொன்னது கேட்டு, 'நல்லவேளை' என்று பெருமூச்சுவிட்டார் கிருஷ்ணன். "நாளைக்குச் சடங்குக்கு வந்து உங்க தம்பி நினைவா சாப்பிட்டுட்டுப் போங்க...." என்று ஞானம் அழைத்ததும் மெல்லத் தலை அசைத்தார்.

திரும்பி நடக்கும்போது மனம் கனத்தது. அவர் இழப்பை யாரேனும் புரிந்து கொள்வார்களா?

"மாமா...." கிருஷ்ணன் திரும்பினார். "மாமா, உங்க கூட நான் நடந்து வரட்டா? உங்களைப் பார்த்தா எனக்கு அப்பா நினைவு அதிகமாகிறது."

"வாம்மா... வா... ஆத்துப் படுகை வரை நடந்து போகலாம் வா.... உங்கப்பாவும் நானும் சேர்ந்து விளையாடின இடங்கள் இதெல்லாம்...."

இருவரும் மௌனமாக, சிந்தனையில் நடந்தனர்.

புவனு திடீரென்று, "மாமா, எனக்குப் பயம்மா இருக்கு மாமா.... ரொம்பப் பயமா இருக்கு" என்றாள்.

"உட்காரு புவனு.... நானிருக்கறவரையில் எதுக்கும் பயப்படாதேம்மா...

"புவனு, நான் உன்னோட என்ன பேச நினைக்கிறேன் தெரியுமா, உனக்கும் சேகருக்கும் இருக்கும் இணைப்புப் பற்றி எனக்குத் தெரியும் புவனு.... உங்கப்பாவுக்கும் எனக்குமான நட்பு மாதிரி, சின்ன வயதில் துவங்கி, உங்களோட அந்த அன்பும் வளர்ந்துட



ணும்னு நான் நினைக்கிறேன். நீயும் சேகரும் இப்போ வயசிலே ரொம்பச் சின்னவா. ஆனா, இந்த வயதிலே பூத்து, இடமா வளர்ந்து, காய்த்து, தக்க பருவத்திலே கனியாகும் அன்பு அற்புதமானதாக இருக்கும். நானும் சுந்தரமும் நண்பர்களாக இருந்தோம். ஆனால், நீயும் சேகரும் காதலால் இணையற துக்கும் வாய்ப்பிருக்கு. அதை நான் ரொம்ப விரும்பறேன், புவனா...''

''மாமா...'' புவனா திகைத்தாள்.

''உன்னைப் பற்றி அத்தனை விஷயங்களை யும் சேகர் எனக்குத் தெரிவித்துக் கொண்டு தான் இருக்கான். சுந்தரம் போய்விட்டான் என்று நான் சேகரிடம் அமெரிக்காவிற்கு போனில் சொன்னவுடன் அவன் அலறிவிட் டான். மறுவினாடி, ''அப்பா நீங்க ஊருக்குப் போய்ப் புவனாவுக்காகப் பாதுகாப்பாக ஒரு வழி பண்ணுங்கோ!'' என்று கேட்டுக்கொண் டான். என் பிள்ளை பேச்சை மதித்துத்தான் நான் இங்கே ஓடி வந்தேன். ஆனா, நான் இன்னிக்கு மத்தியானம் கேள்விப்பட்ட சில விஷயங்கள் என்னை மிகவும் பாதித்துவிட் டன. அதன் பிறகு முடிவு செய்தேன், நீ இனிமேல் சென்னையிலே தங்கி, இந்த வாழ்க்கை முறையைத் தொடர்வதோ, சினிமாவில் பாட்டுப் பாடுவதோ உனக்கு நல்லதல்லன்னு... உங்களுக்கு உதவறதுக் குன்னு ஒருத்தன் மெட்ராஸிலிருந்து வந் திருக்கானே, அவன் என்னை யார் என்று கூட அறியாமல் கடைத் தெருவில் சந் தித்து எவ்வளவு கேவலமான விஷயங்களைப் பேசினான் தெரியுமா?''

''யாரு, ரவீந்தர் அண்ணனா?''

''அண்ணனாவது, தம்பியாவது....? அர சியலில் இந்த அண்ணன், தம்பி விவகார மெல்லாம் வெறும் வெளி வேஷம். உங்க ளால் காரியம் நடக்கும்வரை அண்ணி, தங் கச்சி என்று குழைபவன் வெளியிலே சொல்லத் தகாத வார்த்தைகளால் விமர் சிக்கிறான். அவன் பேசுவதில் எவ்வளவு நிஜம் என்று நான் ஆராயப் போவதில்லை. உங்கம்மா, சின்னக் குழந்தையில்லை. உலகத் திலே நியாயம், அநியாயம் தெரிந்தவள். அவள் உன்னை உயர்த்துவதாக எண்ணிக் கொண்டு தான் அதல பாதாளக் குழியில் விழுந்துவிட்டாள் என்று தோன்றுகிறது. அவள் விரும்பினால்தானே வெளி வர முடி யும். ஆனா, நீ அப்படியில்லை, உனக்கு வழி காட்ட, தக்க ஆசிரியர் தேவை.''

புவனா தலை குனிந்தாள். ''மாமா, எனக்கே கொஞ்ச நாளா எதுவுமே பிடிக்கல்லை. அம்மா செய்யற பல விஷயங்கள் புரியலை என்று னும், அது சரியில்லைன்னும் படறது.''

''நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே. உன் எதிர்கால வாழ்வை நான் அமைத்துத் தர் றேன். உன்னை நான் மெட்ராஸில் நல்ல ஸ்கூலில் ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்க வைக்கிறேன். சங்கீதத்தை உயர் பாடமாக எடுத்துக் கொண்டு காலேஜிலே படி. நிறை யப் பாட்டுப் பயிற்சி செய். பக்குவம் பெற்ற பிறகு, பணமும், புகழும் பெறலாம். மேடை யேறிப் பாடலாம். இப்போது அவசரமில்லை.

ஒவ்வொருவர் உடலுக்கும் ஒப்பற்ற பொருத்தம்

டான்டெக்ஸ்®

ப்ரீஃப்ஸ்

வெஸ்ட்ஸ்


காஷுவெல்ஸ்

சிறுவர்களுக்கான ரகங்கள்



TTK தயாரிப்பு

Integrads 2321 Tam



''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சமுதாயத்தில் உள்ள மேடுபள்ளங்களைச் சரி பண்ணுவோம்னு சொன்னீங்களே, இப்போ என்ன பண்ணியிருக் கீங்க?''

''ஆயிரம் ரோடு ரோலர்களுக்கு ஒரு வெளி நாட்டு கம்பெனியில் ஆர்டர் பண்ணியிருக் கோமே!''

— கிழை. அ. கதிர்வேல்.

நீ இன்னும் குழந்தைம்மா. இன்னும் நாலைந்து வருஷங்கள் போகட்டும். சேகரும் நீயும் சேர்ந்து அதன் பிறகு என்ன செய்ய விரும்புகிறீர்களோ அது உன் இஷ்டம். இப் போதைக்கு உன்னைச் சில மாதங்களுக்கு என்னோட குவைத்துக்கு அழைத்துச் செல்ல லாம்னு நினைக்கிறேன்.''

''அம்மா சம்மதிப்பாளா மாமா?''

ஞானம் சம்மதித்தாள். மகளை அவள் விரும்பியபடி புகழேணியில் ஏற்ற முடியா மல் போனது வருத்தம்தான். அதுவும் வெண் ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந் தாற் போல... ஆனால் அவள் தாய்மை கேட்டது: 'நீ தந்த விலையை உன் பெண்க ளாவது தராமல் காப்பாற்ற இதைவிட வேறு நல்ல வழி உண்டா?' ஏற்கெனவே லோகு வைப் பற்றிய கவலை அவளை அரித்துக் கொண்டிருந்தது. இவளுக்காவது படிப்பு, பாட்டு, நல்ல வாழ்க்கை எல்லாம் ஒருவர் அளிக்க முன்வரும்போது ஏன் தடுக்க வேண் டும்? ஆனால் புவனு என்ற சாக்கில்லாமல் அவள் எப்படி பட்டணத்தில் தங்க முடியும்? அதுதான் லோகு அவள் விழுந்த வலையிலே யே சென்று விழுந்திருக்கிறாளே... லோகு வைக் காப்பாற்ற வேண்டும். தன்னைப் பணயம்வைத்தாவது லோகுவைக்காப்பாற்ற வேண்டும்....

''யோசிக்காதே ஞானம். எதிர்காலத்திலே சேகரும், புவனுவும் இருமணம் செய்துக் கணும்னு கூட நான் விரும்பறேன்.''

''என்ன அண்ணு இது. நாம ஜாதி வேறே, வேறே... நாகம்மாப் பாட்டி உயிரையே விட் டுடுவாங்க.....''

''ஜாதி மதத்தையெல்லாம் கடந்து நட்பு சாத்தியம் என்றால், அன்பும் காதலும் மட்டும் சாத்தியமில்லையா? எங்கம்மாவால் இதைப் புரிஞ்சுக்க முடியாதுதான். ஆனால் சேகர், புவனு இணைப்பு எப்படிப்பட்ட துன்னு எனக்குத் தெரியும். அதுக்கு நாம ஆதரவு தரணும்...''

''எப்படியோ செய்யுங்க. அவ வாழ்வை அமைச்சுக் குடுங்க....'' ஞானம் கை கூப்பி னுன். உறவுகளின் வேருெரு பரிமாணம் புரிய அவள் நெகிழ்ந்து கண்ணீர் சொரிந் தாள். தன் கணவர் தன் மீது காட்டிய அன் பிற்கு, அவர் பிரிய மகளுக்கு இந்த வாழ்க் கையைத் தான் அமைத்துத் தர வேண்டும் என முடிவு செய்தாள்.

சடங்கு முடிந்த மறுநாளே, அவளை ரவீந் திரன் சென்னைக்கு அவசர, அவசரமாக அழைத்துச் சென்றதும், அங்கே லோகுவை வசதிக்கும், செல்வத்திற்கும் பழக்கி அவள் அழகையும் குரலையும் பற்றிய மாய மிதப்பை ஏற்றி வைத்திருந்ததும் நிஜம்.

நித்யாவைத் தேடி மணம் முடிப்பதாக லோகுவை ஏமாற்றிக் காத்திருக்க வைக் கும்போதே, ம.ரா.வின் மாப்பிள்ளை — தயா ரிப்பாளர் ரங்கவள்ளல், அவளுக்குப் பட சான்ஸ் கொடுப்பதாகக் கூறி மெல்ல, மெல்லத் தன் வழிக்குக் கொண்டு வந்தான். ஞானத்திற்கும், லோகுவிற்கும் சுகமான இந்த வாழ்க்கை பழகிப் போயிற்று.

ஒருமுறை ஸ்டூடியோவில் நித்யானந் தத்தைச் சந்தித்தபோது, ''என்ன மாமி மெட் ராஸ் வந்துட்டீங்களா... நடிகர் ரஞ்சித் கிட்ட ப்ரொடக்ஷன் மானேஜரா இருக்கேன். சம் பளம் ஐந்நூறு தான். ஆனு, மாசம் ஐயா யிரம் ப்ரொடக்ஷன் வேலையிலே பண்ணிட றேன். என்ன லோகு, எப்ப ப்ரீ, சொல்லேன். வந்து பார்க்கணும்'' என்று கண் சிமிட்டி னுன். அருகில் நின்ற உதிரி நடிகையின் கன் னத்தைக்கிள்ளினுன். ஞானம்புரிந்துகொண் டாள். அவர்களுக்கு ஆதரவு தரும் அரசியல் போல, அவனுக்கு வாழ்வு தரும் சினிமாவுக் கும் கட்டுப்பாடு, ஒழுக்கம் போன்ற விஷ யங்களுக்கும் அதிக உறவில்லை என்று. இவனி டம் இனியும் திருமணம் பற்றிப் பேச முடி யுமா?

புவனு விடுமுறைகளில் வந்து போகி ருள். ஆனால் அவள் எதிர்பார்ப்புகள், லயிப்பு கள் அத்தனையும் மாறிவிட, அவள் இவர் களிடமிருந்து மனத்தால் ஒதுங்கிவிட்டாள். 'யாரையும் வெறுக்காதே புவனு, மனிதர்களை உருவாக்குவது சந்தர்ப்பச் சாட்சியங்கள் தான்' என்று சேகர் கடிதங்களில் எழுதுவது புரிகிறது. அம்மாவும், லோகுவும் தோல் சுருங்கி, அழகு குன்றும்போது இவர்களை யார் காப்பாற்றுவார்கள் என்று பயமாக இருக்கிறது.

ஆனால் அவளைப் பொறுத்தவரை, பாதை புரிந்துவிட்டது. அப்பா, அவள் எப்படி வாழ வேண்டுமென்று விரும்பியிருப்பாரோ, அப் படியே.... அப்பாவின் நினைப்பு, சேகரின் அன்பு இரண்டும் அவளுக்குப் போதும். அவள் படிப்பாள், பட்டம் பெறுவாள், சங்கீத ஆராய்ச்சி செய்வாள், மேடையேறிப் பாடுவாள். சேகர் மேல் வைத்த மோகம் காட்டும் வழியில் அவள் எதிர்காலத் திட்டம் திடமாக எழுதப்பட்டிருந்தது.

(முற்றும்)

இராமேஸ்வர சேது தீர்த்த மகிமை

மூவுலகும் புகழ் பெற்றது சேது தீர்த்தம் என்பது. கற்பனையல்ல. இராமேஸ்வர் சேதுக்கரை கடல்நீர் சுமார் இரண்டு லட்ச மைல்கள் சுற்றிச் சுழன்று வருவதாகும். இந்த நீரோட்டம் மிகவும் ஆழ்கடலிலும் வரும் வழியில் கடலின் அடித்தளத்திலும் படிந்திருக்கும் ஜீவ அணுக்களையும் மற்ற சத்துப் பொருட்களையும் வாரி அள்ளி எடுத்துக் கொண்டு சுழல் நீரோட்டமாகத் தொடர்ந்து ஓடுகிறது. இந்த ஜீவ அணுக்கள் கடலில் இருக்கும் செடி கொடிகள் பாசி மற்றும் கடலில் வளரும் தாவரங்களில் உண்டாகிறது. இவை தேவாமிர்தத்திற்குச் சமம் என்று வைத்துக் கொள்ளவும். இதன் நிறம் வெளரிய மஞ்சள்.

இந்த ஜீவ அணுக்களும் பிற சத்துப் பொருட்களும் சேதுமுனையையொட்டி ஓடி வரும்போது சேதுக்கரை முனையில் வடமேற்காக திரும்புமிடத்தில், கரையில் ஒதுக்கப்பட்டு, தேங்கி நின்று விடுகிறது. இந்தக் குறிப்பிட்ட இடம்தான் புனித சேது தீர்த்த ஸ்நான கட்டம். இந்தப் புனித நீரோட்டம் உலகில் வேறு எங்கிலும் கரையை ஒட்டினாற்போல் ஓடவில்லை. இந்த ஜீவ சத்துப் பொருட்கள் அதிக சக்தி வாய்ந்ததாகவும், கண்ணுக்குத் தெரியாதபடி மிக நுட்பமானதாகவும், அபூர்வமாகவும், மிருதுவானதாகவும் இருப்பதால் சூரிய வெப்பம் பட்டவுடன் நசித்து விடுகிறது.

ஆதலால் அதிகாலையில் 4 மணியிலிருந்து உதயத்தில் 5 மணிக்குள் புனித சேது ஸ்நானம் செய்வது நலம். மக்களுக்கு மிக உகந்தது. இது இயற்கையாக அமையப் பெற்றிருப்பதால் மக்கள் எல்லாருக்கும் பொதுவானது. எம்மதத்தையும் சார்ந்ததல்ல. இவை இறைவனுக்கு உகந்தவை. மிகப் பிரியானவை.

இப்புனித சேது தீர்த்தத்தில் எந்தவித ஜாதி மத வித்தியாசமின்றி மக்கள் ஸ்நானம் செய்து நற்கதி அடையப் பெறலாம்.

— நன்றி அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில்
கும்பாபிஷேக சிறப்பு மலர் 5.2.1975

பி.டி.சாமி

அவர் பதறலோடு "வேண்டாம் சத்யஜித்! என்னைச் சுட்டுடாதே..." என்று கதறினார்.

"யூ மஸ்ட் டை... நம்பர் சொல்றேன். கவுண்ட் பண்ணிக்க... த்ரீ சொன்னதும் தோட்டாஸ் பறந்து வந்து உன் மார்பில் முத்தமிட்டுத் துளைக்கும். டியர் பிரண்ட், சாரி பார்த டிஸ்டர்பன்ஸ்".

விஸ்வபிரசாத் மரண பீதியுடன் விழிக்க ஆரம்பித்தார். விழிகள் பிதுங்கின. இவன் எப்படியும் சுட்டுக் கொன்று விடுவான்.

"ட்டு..."

"வே... வேண்டாம்... சத்யஜித் வேண்டாம்..."

"இப்படிச் சொன்னால் எப்படி? நீ உயிரோட இருந்தால் உன்னோட மகள் சிந்திகாவின் தேனூற்று பாயும் உடம்பை நான் எப்படி தொட முடியும்? எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும்? பல கோடிகள் ரூபாய் மதிப்புள்ள ப்ராப்பர்ட்டீகம் என் கைக்கு வந்து சேராதே! நான் ஜெம் ஆப் ஜெம்... என் பிளான் சக்ஸஸ் ஆகணும்..."

அவன் சொல்ல —

இவர் மேலும் வியர்த்தார்...

"உன்னுடைய ஒரே சன்னைக் கூட நான் கொன்று விடுவேன்..."

"யூ ராஸ்கல்... ப்ளடி பாஸ்டர்... என் மகளைக் கொல்ல நினைக்காதே!"

இவர் குபீரென்று ஆத்திரமாகி அவனை எட்டி மிதிக்க காலை வீசியது தான் தாமதம்—

"த்ரீ" என்று அவன் சொல்லி ட்ரிக்கரை இழுத்து விட, வெடிச் சப்தத்துடன் அவர் மரண ஓலம் எழுப்பி பயங்கரமாக அலறினார். ஏதோ ஒன்று சுருக்கென்று நடு நெஞ்சில் பாய்ந்து உள்ளுக்குள் காணாமல் போய் முதுகுப் பக்கமாய்ப் பிய்த்துக் கொண்டு போனது போல் இருந்தது—ஏதோ ஒன்று நீய்த்துக் கொண்டு போனது போன்ற பிரமை.

குண்டு பாய்ந்த இடத்தில் இருந்து ரத்தம் குங்குமக் கரைசலாய் வீரியத்துடன் அடிக்க—இவர் கண்களை மேலே சொருக விட்டுக் கொண்டு தத்தளித்த போது—

வாசலில் வந்தனா தெரிந்தாள்.

ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரே திகில்! 'தினமலர் —வாரமலர்' ஏப்ரல் 12, ஞாயிறு இதழில் ஆரம்பம்.

வந்து பார் வந்தனா

கதைகளில் மட்டுமே காணமுடியும்!

* மொழி பற்றிய கேள்விக்கு, 'அன்பு என்ற ஒரு மொழி நன்கு தெரிந்திருக்கிறதா என்பதுதான் முக்கியம்' என்ற தராகவின் பதில் மனத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

* மகரிஷியின் சிறுகதை ஒவ்வொரு ஊரிலும் நடைபெற்று வருவதையே எடுத்துக் காட்டுகிறது. அரிய முத்து போன்ற அரிய மனிதர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் கடைசியில் அவரைப் போன்றவர்கள் வெற்றி பெறுவதும் அயோக்கியர்கள் மனம் திருந்து வதும் கதைகளில் மட்டுமே!

காட்டூர், எஸ். அருள்மொழி

* ஊனமுற்ற ஒரு பெண் தன் மனத்தில் உள்ளதை இவ்வளவு தைரியமாகச் சொல்லி, ஊனமுற்ற குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மார்களின் நிலைமையையும் தெளிவாக வெளியிட்டது அத்தகைய குழந்தைகளைப் பாதுகாக்கும் பிற தாய்மார்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தியிருக்கும். இனி அடுத்தவர்கள் தங்கள் குழந்தைகளை ஏசி, பேசினால் கூட காதில் வாங்காமல் மனோதைரியத்துடன் இருக்க அது உதவும்.

திருச்சி என்.ஏ. பரீதா பேகம்.

* செல்வி அருள்மொழி பற்றிய 'ஊனம் இவருக்கல்ல; அரசுக்குத்தான்' கட்டுரையைப் படித்தேன். இந்தக் கட்டுரைக் கருத்தோடும் தலைப் போடும் ஒப்பிடும்படி பாரதியார் பாடியுள்ள ஒரு 'அருள்மொழி' என் நினைவில் வந்தது. சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறுவதன் வாயிலாக பாரதியார் நம் பாரத தேசத்தின் பெருமையை இப்படிப் 'பாடியுள்ளார்:

ஊனமொன் றறியா ஞானமெய்ப் பூமி!
வானவர் விழையு மாட்சியார் தேயம்!

இந்தப் பாடல் வரிகளுடன் இன்றைய நிலைமையை ஒப்பிடும்போது மிகவும் துக்கமாக இருக்கிறது.

சென்னை—75, வி.ச.வா.

* ஏற்காட்டின் எழில்மிகு தோற்றத்தை அட்டையில் வெளியிட்டு எங்களைப் பரவசப்படுத்தினீர்கள். மேலும் அது அழிவின் பாதையில் அடியெடுத்து வைக்கிறது என்ற செய்தியையும் வெளியிட்டது மனத்தை நெருடத்தான் செய்தது.

கச்சனம், பி. துரையன்.

* வறண்டு வரும் ஏற்காடு கட்டுரை வரிக்கு வரி பிரமாதம். மலைப்பிராந்தியங்களில், பட்டா நிலங்களில் மரம் வெட்டுவதற்கு அரசாங்க லைசென்ஸ் பெற வேண்டும். இதைத் தாராளமாகக் கொடுப்பதால் ஏராளமான மரங்கள் வெட்டப்படுகின்றன. இந்தப் பாதகமான செயல்கள் தற்பொழுது தமிழ்நாட்டின் எல்லா மலைப்பிரதேசங்களிலும் நடக்கின்றன. ஒருபக்கம் மரங்கள் வெட்டப்படுகின்றன. மறுபக்கம் மரம் நடும் விழா விமரிசையாக ஏராளமான செலவில் கொண்டாடப்படுகிறது. இரண்டுக்கும் காரணகர்த்தா அரசாங்கம்தான்.

பட்டிவீரன்பட்டி, தில்லை கோவிந்தன்.

* டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தியின் கற்பு விளக்கமும், கட்டுப்பாடு விளக்கமும் மிகவும் அருமையாக இருந்தன. அதற்கு ஏற்றாற்போல மோகம் என்பது இதுதானோ என்ற கதையில் தாம்பத்யத்தின் சிறப்பை மிகவும் தெளிவாக உணர்த்தியிருந்தார் ஆசிரியை.

வேலூர், காமாட்சி சத்தியநாராயணன்.

* சுஜாதாவின் கட்டுத்தனத்தைக் கிரிக்கெட் டெஸ்ட் வர்ணனையிலும் பார்க்க முடிந்தது நாங்கள் 'கிளீன் போல்ட்' ஆனோம் — அவரது வர்ணனைக்கு.

திருவிடைமருதூர், எஸ். நாதன் பாபு.

* தடம் புரளாமல் ஓடிக் கொண்டிருக்கும் ஒரே ரயில் கல்கி ரயிலாகத்தான் இருக்க முடியும். தலையங்கத்தில் தமிழக போலீஸின் நிலைமையையும், ஜனாதிபதி பிரதமர் நல்லுறவை (!?)யும், தமிழக அரசின் செயல் முறைகளையும், வேறு யாரால் தடம் புரளாமல் எழுத முடியும்?

பட்டுக்கோட்டை—2, சண்முக. இராதா.

* தராக பதில்கள் பகுதியில் தேர்தல் நடக்க இருக்கும் மாநிலங்களுக்குப் பிரதமர் விஜயம் செய்து முந்நூறு கோடி ஒதுக்குகிறேன். நானூறு கோடி ஒதுக்குகிறேன் என்று பிரசாரம் செய்ததைப் பற்றிக் குறைபட்டுக் கொண்டீர்களே? கேரளத்திலும், மே.வங்கத்திலும் மக்கள் யாரை ஒதுக்கினார்கள் பார்த்தீர்களா? கவலை வேண்டாம். மக்களுக்கு யாரை எப்போது ஒதுக்க வேண்டும் என்று தெரியும்.

வெள்ளகால், இரா. கந்தையா.

* சேலம் கலெக்டரின் பேட்டியைப் படித்து முடித்தவுடன் ஒரு பத்திரிகை இதைவிட என்ன சமுதாயப் பணி செய்துவிட முடியும் என்ற நிறைவு ஏற்பட்டது. அதே நேரத்தில் மக்களின் பிரச்னைகள் மனத்தை நெகிழச் செய்துவிட்டன.

ஸ்ரீரங்கம், வி. சௌரிராஜன்.

* சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரையும் அமைச்சரையும் ஒருங்கே பேட்டி கண்டு குறைகளைக் கூறியது பாராட்டத் தகுந்தது.

மன்னார்குடி, வி. அமிர்தலிங்கம்

* அளவில் சிறியதானாலும், 'நறுக்'கென்று அமைந்திருந்தது 'மகள்' சிறுகதை.

ஸ்ரீரங்கம், ஆர். ஸ்ரீநிவாசன்.

* 29.3.87 இதழ் கல்கியில் 18—ம் பக்கத்தில் வெளியான உ. ராஜாஜியின் ஜோக்கைப் படித்த என் நண்பர் 'வஞ்சம் பொரிக இல்லாமல், வாங்கிய பட்டத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப வேலை கிடைப்பது இந்நாளில் பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது. பெண்ணாகப் பிறந்திருந்தால் இந்நேரம் ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு குடும்ப வாழ்க்கை விளாவது நடுபட்டிருப்பேன் என்று அங்கலாய்த்தது என் மனத்தை வாள் கொண்டு வெட்டியதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது. 'ஏன் தான் பெண்ணாகப் பிறந்தோமோ?' என்று பெண்கள் ஒருபுறம் விசனப்படுவதும், இப்போது ஆண்கள் இப்படி அங்கலாய்ப்பதும்.... மொத்தத்தில் வாழ்க்கையே சுமையாகிப் போய்விட்டது.

பெங்களூர்—21, குழற்கோமான்.

வெங்கட் சொன்ன ஜோசியம்!

பெங்களூர் வெஸ்ட் என்ட் ஹோட்டலின் 1110 எண் அறை வாசலில் 'Dont disturb' போர்டு தொங்கியது. அறையின் வெளியே வராந்தாவில் அமர்ந்திருந்த மார்ஷலிடம் உள்ளே சென்று நாங்கள் வந்திருப்பதைத் தெரிவித்ததும் காவஸ்கர் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். அவரது பத்தாயிரம் ரன் சாதனையைப் பாராட்டி விட்டுப் பேட்டியைத் துவங்கினோம்.

கே: இப்போதெல்லாம் ஐந்துநாள் டெஸ்டு மாட்சுகளில் சுவாரஸ்யம் மிகவும் குறைந்து போய் விட்டது. அனேகம் மாட்சுகள் டிராவில் முடிந்து விடுகின்றன. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

* வெங்கட்டுடன் காவஸ்கர்



ப: பல டெஸ்ட் மாட்சுகள் 'போர்'- அடிப்பது உண்மைதான். இதற்குக் காரணம் எந்த அணியும் டெஸ்டு மாட்சில் ஒரு 'முடிவு' கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விளையாடுவதில்லை. இதற்கு மேற்கிந்தியத் தீவு அணி மட்டும் விதிவிலக்கு. இவர்கள் மட்டுமே பந்து வீச்சைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி ஆட்டத்தில் ஒரு முடிவு காணப் பாடுபடுகிறார்கள்.

கே: ஒரு நாளில் குறிப்பிட்ட அளவு ஓவர்கள் பந்து வீசாவிட்டால் சம்பந்தப்பட்ட அணிக்கு அபராதம் விதிக்க வேண்டும் என்று பத்திரிகைகளில் அடிக்கடி எழுதி வருகிறீர்கள். இந்த யோசனையை கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டுக்குத் தெரிவித்ததுண்டா?

ப: இல்லை. பத்திரிகைகளில் எழுதியதோடு சரி. போர்டு இதைப் பற்றி ஆலோ

காவஸ்கர் காங்கிரசில் சேர்வாரா?

காப்டனாக இருந்த காலத்தில் இந்தியாவுக்கு நிறைய வெற்றிகளைப் பெற்றுத் தரவில்லை என்றொரு குற்றச்சாட்டு காவஸ்கர் மீது சுமத்தப்படுவதுண்டு. ஆனால் அவர் இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் மதிப்பையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த நிறையப் பாடுபட்டார் என்பதை யாரும் எளிதில் மறுக்க முடியாது. ஒரு டெஸ்ட் பந்தயத்துக்கு ரூ 17,500; ஒவ்வொரு ஒரு நாள் பந்தயத்துக்கும் ரூ. 5,000 என்று ஆட்டக்காரர்களுக்கு இன்று அளிக்கப்படும் சன்மானத் தொகை காவஸ்கரின் தீவிர முயற்சியால் நிர்ணயிக்கப்பட்டதே. ஆட்டக்காரர்கள் தங்குமிடம், இதர வசதிகள் போன்றவற்றின் தரத்தையும் கணிசமாக மேம்படுத்த காவஸ்கர் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டுடன் போராடினார்.

தனியார் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை விளம்பரம் செய்ய கிரிக்கெட் ஆட்டக்காரர்களைப் பயன்படுத்திக் கொண்டு, மிகக் குறைந்த அளவே சன்மானம் அளித்த நிலைமையைச் சீர்திருத்தியதும் காவஸ்கர்தான்.

Professional Management Group என்றொரு அமைப்பை நிறுவச் செய்து, அந்த அமைப்பின் மூலம் விளம்பரதாரர்களுக்கும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குமிடையே நியாயமான ஒப்பந்தங்கள் ஏற்பட வழி வகுத்தார்.

காப்டன் பொறுப்பை உதறிய பிறகு காவஸ்கரால் தம் பாட்டிங்கில் அதிக கவனம் செலுத்த முடிகிறது. ஓபனிங் பாட்ஸ்மனாக இருப்பதைவிட மூன்று அல்லது நான்காவது ஆட்டக்காரராக இருப்பதையே இப்போது அதிகம் விரும்புகிறார். ஆனால் சிறிது காலம் மட்டுமே அப்படி ஆடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

மாட்ச் விளையாட வேண்டிய தினங்களில் உணவு விஷயத்தில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருக்கிறார். காலையில் சிறிதளவு ஆகாரம் சாப்பிடுவதோடு சரி. மதிய இடைவேளையின்போது சாப்பிடுவதில்லை. தண்ணீருடன் நிறைய

சித்து வருகிறதா என்பது தெரியாது.

கே: நீங்கள் அயல்நாட்டில் விளையாடிய மாட்சுகளில் எதை நினைவை விட்டு நீங்காததாகக் கருதுவீர்கள்?

ப: 1971 இல் வெஸ்ட் இன்டீஸுக்கு எதிராக போர்ட் ஆஃப் ஸ்பெயினில் விளையாடிய டெஸ்ட்தான் இன்னும் மனத்தில் பசுமையாக நினைவிலிருக்கிறது. அன்று ரசிகர்கள் எனக்கு ரூபாய் நோட்டு மாலை அணிவித்து ஊக்கம் அளித்தார்கள்.

கே: நீங்கள் சந்தித்துள்ள அதிவேகப் பந்து வீச்சாளர்களுள் மிகச் சிறந்தவர் யார்? வேகப் பந்து வீச்சைத் தைரியமாக எதிர்த்து ஆடும் ஆற்றலை எப்படி வளர்த்துக் கொண்டீர்கள்?

ப: வேகப் பந்து வீச்சாளர்களுள் தலை சிறந்தவரென நான் கருதுவது ஜெஃப் தாம்ப்ஸனைத்தான். ஆண்டி ராபர்ட்ஸின் பந்து வீச்சிலும் நிறைய Swing உண்டு. ஆரம்பத்தில் இவர்களை எதிர்த்து விளையாட எனக்கு அதிர்ஷ்டம் நிறையக் கைகொடுத்தது. அதனால் துணிச்சல் வளர்ந்தது. அவர்களுடைய தாக்குதலுக்குச் சமமான எதிர்த் தாக்குதலுடன் விளையாடும் திறமை படிப்படியாக எனக்குக் கைவரத் தொடங்கியது. இப்போது 18 — 20 வருஷ அனுபவத்திற்குப் பிறகு எந்த ஃபாஸ்ட் பௌலிங்கையும் சந்திக்கத் தைரியம் இருக்கிறது.

கே: உங்களை இந்தியாவின் டான் பிராட்மன் என்று வர்ணிக்கும் வெங்கட் பற்றி...?

ப: என் வளர்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வருபவர் வெங்கட். எனது முதல் அயல்நாட்டு டெஸ்ட் பயணத்தின் போது



குளுகோஸ் உட்கொள்கிறார். இயல்பாகவே சுறுசுறுப்பானவர். படிக்கட்டுகளை இரண்டிரண்டாகத் தாண்டிக் குதித்துத்தான் ஏறுவார். விளையாட்டின் போது பட்ட காயங்களுக்குச் சிகிச்சை பெற மட்டுமே இவர் டாக்டரை நாடுவார். ஆரோக்கியமான உடல் இவருக்குக் கிடைத்த வரப்பிரசாதம். அதைக் கவனமாகப் பேணிப் பாதுகாத்தும் வருகிறார்.

காவஸ்கரின் ஆட்டச் சிறப்புக்குக் கவனமானத் திட்டமிடுதல் ஒரு காரணம். களத்தில் இறங்குவதற்கு முன்பே பௌலர்களை மட்டுமின்றி, ஃபீல்டர்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்கிறார் காவஸ்கர். ''சில ஃபீல்டர்கள் கவலை காரணமாகவே சற்றுக் கலவரப்பட்டுப் போயிருப்பார்கள். அவர்கள் இருக்கும் திக்கை நோக்கி ஆடினால் அதிக ரன்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.''

அடிக்கடி வெளியூர் போக நேர்ந்த போதிலும் பெற்றோர், மனைவி, குழந்தை என்று அனைவரிடமும் இவருடைய பந்த பாசம் மிக வலுவானது. மனைவி மார்ஷினை 'பம்மி' என்று அழைக்கிறார். நல்ல கணவன், பொறுப்புள்ள தந்தை என்றும் பெயர் பெற்றுவிட்டார் காவஸ்கர். தாம் பணிபுரியும் அலுவலகத்திலும் நல்ல பெயர் வாங்கியிருக்கிறார்.

பத்திரிகைகளில் எழுதுவதோடு, மேடைப் பேச்சிலும் ஓரளவு தேர்ந்தவர் காவஸ்கர். சீக்கிரமே இவர் தயாரித்த டி.வி. நிகழ்ச்சி வெளி வரப் போகிறதாம்! நகைச்சுவை உணர்வு உண்டு. ஆனால் அது உள் அர்த்தம் கொண்ட மெலிதான நகைச்சுவையாக இருக்கும். அதைக் கேட்டு அயல்நாட்டவர் புரிந்து கொண்டு சிரிப்பதைப் போல் நம்மவர் செய்வதில்லை என்பதே இவருடைய குறை!

ஏற்கெனவே சினிமாவில் பிரவேசித்துள்ள காவஸ்கருக்கு இந்திரா காங்கிரஸில் சேர்வதன் மூலம் அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது! ஆனால் இந்த அழைப்புக்கு இது வரை பிடிகொடுக்காமல் இருந்து வருகிறார் காவஸ்கர். நாளை எப்படியோ?

நன்றி: காவஸ்கர் பற்றி டாம் மொரேஸ் எழுதிய நூல்.
மாக்மில்லன் பிரசுரம்



வெங்கட் உதவி காப்டனாக இருந்தார். இப்போது நான் பத்தாயிரம் ரன்கள் எடுத்த போது அணியின் மானேஜராக இருந்தவர் அவர்தான். பல சமயங்களில் என் மனச் சோர்வைப் போக்கவும் டென்ஷனைக் குறைக்கவும் வெங்கட் பாசத்தோடு உதவியிருக்கிறார். வெஸ்ட் இன்டீஸ் ஜமைக்காவில் பலத்த அடிபட்டு நான் உற்சாகமிழந்து துவண்டு போயிருந்த போது அவர் என் கைரேகைகளைப் பார்த்து, "உனக்கு நல்ல எதிர்காலம்இருக்கிறது" என்றுசொன்னதை என்னால் மறக்கவே முடியாது.

கே: விஜய் அமிர்தராஜ் இளம் சிறுவர்களுக்கு இலவச டென்னிஸ் பயிற்சி முகாம்

காவஸ்கரைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்? இங்கே ஒரு க்விஸ் தரப்பட்டுள்ளது. எத்தனை கேள்விகளுக்குச் சரியான பதில் தர முடிகிறது என்று பாருங்களேன்....

1. காவஸ்கரின் அப்பா அம்மா பெயர் என்ன?

2. அவர் தாய் மொழி என்ன?

3. பிறந்த தேதி என்ன?

4. முதல் டெஸ்ட் மாட்சை காவஸ்கர் எங்கே, எப்போது ஆடினார்?

5. காவஸ்கர் 1000 ரன்களை எட்டியது எப்போது? எங்கே?

6. எத்தனையாவது டெஸ்ட்டில் அவர் 5000 ரன்களை எட்டினார்?

7. அவர் 10,000 ரன்கள் எடுக்க எடுத்துக் கொண்ட காலம் எவ்வளவு?

8. காவஸ்கரின் 10000 ரன்களில் எவ்வளவு சதங்கள் அடக்கம்?

9. இதுவரை ஒரே ஒரு விக்கெட்தான் எடுத்திருக்கிறார் காவஸ்கர். அது யாருடைய விக்கெட்?

10. எந்த ஊரில் காவஸ்கர் அதிகப்படியான சதங்களைப் போட்டிருக்கிறார்?

11. காவஸ்கர் முதல் பந்திலேயே அவுட் ஆனது எத்தனை தடவை?

12. காவஸ்கர் எந்த இந்திய பந்து வீச்சாளரின் பௌலிங்கின்போது அதிகப்படியான கேட்சுகள் பிடித்திருக்கிறார்? (17 தடவை)

13. ஒரே ஒரு டெஸ்ட்மாட்ச்சில் ஓப்பனிங் பாட்ஸ்மேனாக ஆட ஆரம்பித்து, இறுதிவரை நாட் அவுட் ஆகவே இருந்தார் காவஸ்கர். அது எப்போது?

14. பல்வேறு டெஸ்ட்களிலுமாக, காவஸ்கர் இதுவரை எத்தனை ஆட்டக்காரர்களுடன் ஓப்பனிங் பேட்ஸ்மேனாக ஆடியிருக்கிறார்?

15. அவர் நடித்துள்ள மராத்திப் படத்தின் பெயர் என்ன?

16. ஸ்போர்ட்ஸ் ஐட்டங்கள் விற்கும் ஒரு கடைக்கு உரிமையாளர் காவஸ்கர். அதன் பெயர் என்ன? அது எங்கே இருக்கிறது?

17. காவஸ்கர் இப்போது எந்த நிறுவனத்தில் பணிபுரிகிறார்?

18. இதுவரை அவர் எழுதியுள்ள புத்தகங்கள் என்னென்ன?

19. காவஸ்கரும் அவர் மகன் ரோகனும் இணைந்து ஒரு விளம்பரத்தில் தோன்றுகின்றனர். அது எந்த விளம்பரம்?

விடைகள்:

1. அப்பா பெயர் மனோகர் காவஸ்கர்; அம்மா மீனாட்டை (காவஸ்கருக்கு ஒரு சகோதரியும் உண்டு. பெயர் நூதன்).

2. மராத்தி. இப்போதும் அம்மாவுக்குக் கடிதம் எழுதினால் மராத்தியில்தான் எழுதுவார் காவஸ்கர்.

3. 10.7.1949.

4. 1971 ஆம் வருடம் மார்ச் 6 ஆம் தேதி போர்ட் ஆஃப் ஸ்பெயினில் மேற்கு இந்தியத் தீவிற்கு எதிராய் ஆடினார்.

5. 25.1.73 இல் இங்கிலாந்துக்கு எதிரான மாட்சில் கான்பூரில் 1000 ரன்களை எட்டினார். மனைவி மார்ஷலில் கான்பூர்காரர்தான்.

6. ஐம்பத்திரண்டாம் டெஸ்ட்டில்.

7. 16 வருடங்களும் ஒரு நாளும்.

8. முப்பத்து நான்கு

9. ஜாகிர் அப்பாஸின் விக்கெட்.

10. பம்பாயில் ஐந்து தடவை.

11. மூன்று தடவைகள்.

12. கபில்தேவ்.

13. பாகிஸ்தானுக்கு எதிராய், பைசலாபாத்தில் 82 — 83 ஆம் வருடத்தில் எடுத்த ரன்கள் 127.

14. பதினாறு.

15. சவேலி பிரேமசி.

16. பூனாவில்பெயர் 'சன்னீ ஸ்ஸ்போர்ட்ஸ் பொட்டீக் (Sunny's Sports Boutique)

17. நிர்லான் நிறுவனத்தில்.

18. சன்னி டேஸ் (தாம் கிரிக்கெட் ஆட்டக்காரர் ஆனது எப்படி என் விவரிப்பது) ரன்ஸ் அண்டு ரூயின்ஸ். (மேற்கிந்தியத் தீவின் வேகப்பந்து வீச்சாளர்களைத் தாம் சமாளித்து ஆடின விதம் பற்றி) ஐடல்ஸ் (அகில உலகக் கிரிக்கெட் வீரர்களைப் பற்றி) ஒன் டே ஒண்டர்ஸ் (ஒரு நாள் பந்தயங்களில் இந்தியாவின் ஆட்டம் பற்றி).

19. போர்ஹென்ஸ் பற்பசை விளம்பரம்.

தொகுப்பு: மௌஷ்மி

வேத வைதிக நூல்கள் விலை தபால் செலவு உட்பட:

I 1. ஸாமவேத அஷ்ட ப்ராம்மணம் — நாகராக்ஷரம் — 3 பாகங்கள், விலை ரூ. 210/—
2. ஸாமவேத ஸம்ஹிதா — நாகராக்ஷரம் — 2 பாகங்கள் (ஸ்வரத்துடன்) விலை ரூ. 110/—
3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) கிரந்தாக்ஷரம் — 2 பாகங்கள் விலை ரூ. 235/—
4. சாந்தி குஸுமாகரம் (கிரந்தாக்ஷரம்) — 2 பாகங்கள் விலை ரூ. 75/—
5. ஸ்மார்த்த தந்த்ர ஸுதாநிதி (ஸாம வேத பூர்வாபர ப்ரயோகம்) விலை ரூ. 55/—

II க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப் பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புக்கள்
1. போதாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ. 70/—; 2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ. 65/—; 3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம், விலை ரூ. 30/—; 4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ. 60/—; 5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம், விலை ரூ. 25/—; 6. கல்பசிந்தாமணி, விலை ரூ. 35/—

III நாகர அக்ஷரம் — நாகர பதத்திற்குத் தமிழ் அர்த்தத்தோடு
1. ஸ்ரீமத் பாகவதம் — 5 Volumes — 12 ஸ்கந்தங்கள், விலை ரூ. 415/—; 2. ஸுந்தர காண்டம், விலை ரூ. 80/—; 3. ஸ்ரீநாராயணீயம், விலை ரூ. 55/—

IV 1. மனுசேச்லோக " ராமமந்த்ராசேச்லோக, விலை ரூ. 9/—; 2. ஸ்ரீ ராதா க்ருஷ்ண பூஜா விதானம், விலை ரூ. 10/—; நளோதந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்) விலை ரூ. 9/—; 4. வேதபாட வழிமுறை (Syllubus) (ரிக், யஜுர், ஸாம) விலை ரூ. 8/—.

V: P: P: யில் அனுப்புவதில்லை. பூராத் தொகையையும் M: O:)or' Draft மூலம் அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி

D-76, மூன்றாவது கிராஸ்,
ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் உதவி டிரஸ்ட் (Regd)

பதிவு பெற்ற அலுவலகம்:
நெ. 1, சாலைத் தெரு, பெரிய காஞ்சீபுரம் — 631 502.

வற்றாத அருட் கருணை பொழியும் தனித் தவச் செம்மலாம் ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், காஞ்சீபுரம் என வழங்கும் கச்சிமூதூர் எனும் பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் அருளை பிரார்த்தித்துக் கொண்டு, தமது வரையற்ற அன்புள்ளத்துடன், மிகக் குறைந்த வருமானமுள்ளதும், பழைமையானதுமாகிய கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களையும், பண்டாரம் போன்ற பரம்பரை பூஜாரிகளையும் தகுதி பெறச் செய்து, அவர்களுக்கு நிதி உதவி புரிய வேண்டுமென அருள் பாலித்துள்ளார்கள். இந்த திட்டத்தைச் செயல் படுத்த 'கச்சிமூதூர் அர்ச்சகர்கள் உதவி டிரஸ்ட்' என்ற ஸ்தாபனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நற்பணிக்காக சுமார் பத்து லட்சம் ரூபாய் மூலதனமாக இந்த வருடத்தில் தேவைப்படும். பேரருளாளரான காஞ்சி முனிவரின் ஆக்ஞையின்படி 4000 ரூபாய்க்கு அதிகமாக மாத வருமானம் உள்ள அன்பர்கள் குறைந்தபட்சமாகத் தங்கள் ஒரு மாத வருமானத்தையும், மற்றைய அன்பர்கள் தங்களால் இயன்ற அளவும் இந்த நிதிக்கு நன்கொடையாகப் பண உதவி நல்கி நமது உன்னதமான ஆலய வழிபாட்டுக் கலாசாரத்தை மறுமலர்ச்சி பெறச் செய்து பலப்படுத்தி அதைக் காப்பாற்றப் பணிவுடன் கோரப்படுகிறார்கள்.

நன்கொடைகளை செக்/டிராப்ட் மூலமாக 'கச்சி மூதூர் அர்ச்சகர்கள் உதவி டிரஸ்ட்' (**Kachchi Moodoor Archakas Welfare Trust**) என்ற பெயருக்கு எழுதி, செயலாளர், கச்சி மூதூர் அர்ச்சகர்கள் உதவி டிரஸ்ட், 1, சாலை தெரு, காஞ்சீபுரம் என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். அல்லது 'மெயில் டிரான்ஸ்பர்' மூலமாக சேமிப்பு கணக்கு எண் 1245, இந்தியன் பாங்க், சாலைதெரு, காஞ்சீபுரம் — 2, என்ற விலாசத்திற்கு அனுப்பி டிரஸ்ட் ஆபீசுக்கு அதைத் தெரியப்படுத்தலாம்.

இந்தத் திட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு காஞ்சி ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் கருணைக்கும் காஞ்சி முனிவரின் அருளாசிக்கும் பாத்திரராகும்படி வேண்டிக் கொள்கிறோம்.

சென்னை உயர்நீதிமன்ற முன்னாள்
நீதிபதி என். கிருஷ்ணசாமிரெட்டி
தலைவர், பொறுப்புக் குழு.

இந்த நிதிக்காக 1.4.86 முதல் 31.3.88 முடிய கொடுக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமானவரி இலாகாவின் சட்டத்தில் உள்ள 80G பிரிவின்படி சலுகைகள் பெறலாம். இதை வருமான வரி இலாகா ஆணையாளர் V, தமிழ்நாடு தமது 9.1.87 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நம்பர் 2039 (71)/86 மூலம் அறிவித்திருக்கிறார்.



10,000 ரன்களைக் கடந்து சாதனையை ஏற்படுத்திய காவஸ்கர் ஓய்வு பெறுவாரா? அல்லது தொடர்ந்து விளையாடுவாரா? காவஸ்கரே கூறிய பதில் இது: "கிரிக்கெட்டில் என்ன நடக்கும் என்பதை எப்படி முன்கூட்டியே சொல்ல முடியாதோ அதைப் போல்தான் காவஸ்கரும்!"

— தோபங்க

நடத்தி வருவதைப் போல் கிரிக்கெட் பள்ளி ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

ப: பம்பாயில் ஓர் இன்டோர் ஸ்டேடியத்தில் கிரிக்கெட் பயிற்சிப் பள்ளி நிறுவி நடத்தத் திட்டம் இருக்கிறது. பம்பாயில் இட நெருக்கடி காரணமாக இங்கு பயிலும் மாணவர்களுக்குக் கல்வி வசதியும் தங்குமிடமும் செய்துதர இயலாது. ஆனால் இப்பயிற்சிப் பள்ளியை வருடம் முழுவதுமே திறந்து வைக்க உத்தேசித்துள்ளேன்.

கே: பாகிஸ்தானும் இந்தியாவும் இணைந்து முன்னின்று நடத்தப் போகும் உலகக் கோப்பை ஒருநாள் பந்தயத்தின் முடிவுகள் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

ப: முடிவுகளை முன்கூட்டியே கணிக்க முடியாது. ஆனால், எல்லா நாடுகளிலிருந்தும் வரும் முதல் தர முன்னணி ஆட்டக்காரர்களை எதிர்த்துவிளையாட இளம் ஆட்டக்காரர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதால், அவர்களின் ஆட்டத் திறன் மேம்படும்.

கே: இளம் ஆட்டக்காரர்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?

ப: மூன்று **'D'** கள் ரொம்ப முக்கியம் — **Discipline** (கட்டுப்பாடு), **Dedication** (ஈடுபாடு), **Determination** (மன உறுதி). இவற்றை இளைஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்; எப்போதும் கைவிடாமல் இருக்க வேண்டும்.

(இந்தக் கட்டத்தில் பம்பாயில் பள்ளி நேரம் முடிந்து ரோஹன் காவஸ்கர் விமானம் மூலம் பெங்களூர் வந்து சேர....)

கே: ரோஹனை ஒரு பாட்ஸ்மனாக உருவாக்கப் போகிறீர்களா? அல்லது பௌலராகவா?

ப: அவன் கிரிக்கெட் ஆடும் சுதந்திரத்தில் நான் தலையிடப் போவதில்லை. அவன் விருப்பத்திற்கு விட்டு விடுவேன்.

பேட்டி: **குண்டுமணி**

மேலட்டை வண்ணப்படம்: **பாலாஜி**

புகைப்படங்கள்: **கே.வி. ஆனந்த்**

பாலாஜி



"ஏன்யா, படிச்சுக்கிட்டு இருக்கற எங்களுக்கு இடைஞ்சலா கழுத்தை நீட்டி நீட்டி, பேப்பர் படிக்கிறயே, யார்யா நீ?"


"இந்தப் பேப்பரை வாங்கினவனுங்க."

— புத்தனும்பட்டி கிருஷ்ணராஜ

"உங்க பத்திரிகையில ஜோக்கே போட மாட்டேங்கறீங்களே...."

"அதான் அரசியலை நிறைய எழுதுறோமே!"

— கடுவை கோபால்சாமி



வில்லன்: இவ்வளவு உயர மலையில் இருந்து எப்படி சார் குதிக்கிறது?

டைரக்டர்: பயப்படாம குதிங்க சார், ஸ்லோ மோஷன்லதானே எடுக்கப் போறோம்!

— கிழை அ. கதிர்வேல



"இந்த ஆபீஸில் யார் யாரைப் பார்த்து எவ்வளவு கொடுத்தால் காரியம் நடக்கும்னு எனக்குத்தான் தெரியும்."

"சரி, சொல்லுங்க."

"அதுக்கு எனக்குத் தனியா இருபது ரூபா தரணுமே!"

— கிழை அ. கதிர்வேல்



கல்கி வாசகர்களுக்கு விருது



படத்தில்: இடமிருந்து வலமாக: தினமலர் ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, சங்கர் தயாள் சர்மா, நீதிபதி மோகன், அமெரிக்க, ரஷ்ய கான்ஸல்கள், 'ஹிந்து' துணை ஆசிரியர் என். ராம்.

"ஆளுனர்கள் எல்லோரும் உண்மையான காந்தியவாதிகளாக இருக்கிறோம். காந்திஜியின் குரங்குப்பொம்மைகள் உணர்த்தும் 'தீயதைப் பார்க்காதே, தீயதைக் கேட்காதே, தீயதைப் பேசாதே' என்ற கொள்கைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வருகிறோம் — அதாவது தீமை ஏதும் நடப்பதைப் பார்த்தால்கூட கண், காது, வாய் ஆகியவற்றை இறுக மூடிக் கொண்டுவிடுகிறோம்!" என்றார் மஹாராஷ்டிர ஆளுனர் சங்கர் தயாள் சர்மா, பலத்த சிரிப்புக்கிடையில்.

சென்னை மயிலாப்பூர் அகாடமியின் சார்பாகத் தினமலர் நிறுவனர் ராமசுப்பையர் நினைவுச் சுழற்கோப்பைகளைச் சென்ற ஆண்டின் தலைசிறந்த பத்திரிகைகளுக்கு வழங்கிய போதுதான் அவர் இவ்வாறு 'தமாஷாகச் சொன்னார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றித் தெளிவாகவும் சிறப்பாகவும் ஆய்ந்து, செய்திகளும் கருத்துகளும் வெளியிட்ட 'ஹிந்து' நாளிதழுக்கும், கிராமப்புறமக்களின் பிரச்னைகள் குறித்தும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் புலனாய்வு முறையில் செய்தி சேகரித்த கல்கிக்கும் சுழற்கோப்பைகளை வழங்கினார் சங்கர் தயாள் சர்மா. "தினமலர்" ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, மைலாப்பூர் அகாடமியின் உறுப்பினர்கள், அமெரிக்க கான்ஸல் ஜெனரல் ஜான் ஸ்டெம்பல், ரஷ்யத் தூதரக அதிகாரி விளாடிமிர் ஆகியோர் ஜஸ்டிஸ் மோகன் தலைமையில் பேசினார்கள். ஏராளமான பத்திரிகைத் துறை அன்பர்களும் பொதுமக்களும் கலந்து கொண்ட இவ்விழாவில் ஹிந்து துணை ஆசிரியர் என். ராமும், கல்கி ஆசிரியரும் பரிசுகளைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை ஆற்றினார்கள்.

* * * * *

பரிசு பெற்ற பாரம்பரியம் மிக்க சகோதரப் பத்திரிகை "ஹிந்து" வுக்குப் பாராட்டும் 'வாழ்த்தும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரிசும் பாராட்டும் பெறும் நோக்குடன் கல்கியின் 'மாதம் ஒரு மாவட்டம்' சமுதாயப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. மக்களின் அனைத்துப் பிரச்னைகளும் இப்பணியால் தீர்ந்து விடும் என்ற பகற்கனவும் எங்களுக்கு இல்லை. மக்களின் விழிப்புணர்ச்சியாலும், அதிகாரிகளின் ஒத்துழைப்பினாலும் நாங்கள் சுட்டிக்காட்டிய ஒரு சில பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது உண்மைதான். எனினும், இப்பணியை ஆரம்பித்தபோது, மாவட்டச் சுற்றுப் பயணக் கட்டுரைகளின் மூலம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் மட்டுமே அதனை மேற்கொண்டோம். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை வாசகர்கள் உண்மையான ஈடுபாட்டுடன் எழுதி வரும் ஏராளமான கடிதங்கள் எங்களுக்கு உணர்த்தி வருகின்றன. ராமசுப்பையர் நினைவுப் பரிசு அந்த நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதுடன் எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மாதம் ஒரு மாவட்டம் என்ற கல்கியின் சமுதாயப்பணித்திட்டம் தொடங்கிய நாள் முதலாக, உரிய காலத்தில் கடிதங்கள் எழுதியும், சுற்றுப் பயணங்களின்போது எங்கள் நிருபர்களுடன் ஒத்துழைத்தும், நடவடிக்கை எடுக்கப்பட்ட பிரச்னைகள் பற்றி உடனுக்குடன் தெரிவித்தும், இப்பணியை விமர்சித்தும், பாராட்டியும் ஏராளமான வாசகர்கள் ஒத்துழைத்து வருகின்றனர். எனவே கல்கிக்கு வழங்கப்பட்ட தினமலர் ராமசுப்பையர் நினைவு விருது, ஒவ்வொரு கல்கி வாசகருக்கும் வழங்கப்பட்ட விருதே ஆகும். அதனை எங்கள் அன்பு வாசகர்களுக்கு அர்ப்பணித்துப் பாராட்டுத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ரெடிமணி வாடிக்கையாளர் பண உதவியில் முதன்மையான பெயர்

வாடிக்கையாளர்களுக்குத் தேவையான நீடித்து உழைக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை, சம்பளப் பணத்தை நம்பிக் குடும்பம் நடத்துபவர்கள் வாங்குவதற்காக ரெடிமணி முதன் முதலாகக்கடன் வசதித் திட்டத்தை அளித்தது. இத்திட்டம் எல்லோராலும் விரும்பி வரவேற்கப் பட்டதால் இன்று இது போன்ற துறைகளில் இயங்கும் நிறுவனங்களிலேயே நிதி நிலைமையில் மிகவும் சிறப்பாக அமைந்துள்ள ஒரு நிறுவனமாகத் திகழ்கிறது.

டெபாசிட்தாரர்களுக்கு உடனடி கடன் வசதி

இந்தியக் கம்பெனிகளிலேயே அதனுடைய டெபாசிட்தாரர்களுக்கு உடனடி கடன் வசதியை அளிக்கும் தனிச்சிறப்பைப் பெற்றது ரெடிமணி ஒன்றுதான். இவ்வசதி அதனுடைய 500க்கும் மேற்பட்ட அலுவலகங்களில் அளிக்கப்படுவதோடு டெபாசிட்தாரர்களுக்கு விருப்பமானக் கடைகளிலும் அளிக்கப்படுகிறது.

சில்லறை வியாபாரிகள் மற்றும் தயாரிப்பாளர்களின் நன்மதிப்பு

ரெடிமணி, தயாரிப்பாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் விரும்பும் நீடித்து உழைக்கக் கூடிய பொருட்களை விற்பனை செய்யும் இதன் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களின் முழுமையான ஆதரவைப் பெற்றுள்ளது. பணம் கொடுத்து வாங்கும் வாடிக்கையாளர்களைப் போலவே ரெடிமணி உறுப்பினர்களும் இந்த நிலையங்களில் வரவேற்பு அளிக்கப்படுகின்றனர்.

வரையறையில்லாத வாய்ப்புக்கள்

மூன்றே ஆண்டு குறைந்த காலத்தில் தென்னிந்தியாவில் நடுத்தரக்குடும்பத்தினரிடையே ரெடிமணியின் வாடிக்கையாளர் பண உதவித்திட்டங்கள் மிகவும் பிரபலமடைந்துள்ளன. 30,000 உறுப்பினர்கள் மற்றும் டெபாசிட்தாரர்களிடமிருந்து அது பெற்ற அளவிட முடியாத ஆதரவினைப் படம் பிடித்துக் காட்டுகிறது இது.

தகுதிபெற்றோர் நடத்தும் தலைமை நிர்வாகம்

நிதி, சட்டம் மற்றும் நிர்வாகத்துறைகளில் தனிப்பட்டச் சிறப்புடன் திகழும் நிபுணர்களால் நிர்வகிக்கப்படும் ரெடிமணி, தொடர்ந்து முன்னோடியாகத் திகழ்ந்து, இது சம்பந்தப்பட்ட அனைவரின் நம்பிக்கைக்கும் மதிப்பளிக்கும் வகையில் விளங்கும் எனத்திடமாக நம்புகிறது.



ஷாப்பர்ஸ் இன்வெஸ்ட்மென்ட் & பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

105, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை
மைலாப்பூர், சென்னை 600 004

ரெடிமணியில்... சேவை என்பதே வாழ்க்கைத் தத்துவம்

தமிழகத்தில் நிம்மதியின்றி உறங்குபவர் யார்?

நீங்கள் கேட்டவை — தராசு

? காலணித் திட்டம் பணம் படைத்தவர்களுக்கு அல்ல; ஏழைகளுக்கே. இதில் மக்களின் வரிப்பணம் எந்த விதத்தில் திசை திருப்பி விடப்படுகிறது என்பது எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே?

! அன்பரே, உங்களுக்கு விளங்குமாறு ஒரு நீண்ட பொருளாதாரக் கட்டுரை எழுத இந்தக் கேள்வி—பதில் பகுதி இடம் தராது. ஒன்று செய்யுங்கள். எவ்வளவோ பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ள நாட்டிலிருக்கிறீர்கள். 15.3.87 இதழில் வெளியான குறிப்பிட்ட கேள்வி பதிலை ஒரு பொருளாதார நிபுணரிடம் படித்துக் காட்டுங்கள். அவர் நான் எழுதியது தவறு என்று கூறுவாரானால் எனக்கு எழுதுங்கள். தண்டம் சமர்ப்பிக்கிறேன்.



வாக்குச் சாதுர்யம்



கவிதையும் கூட....



ரகசியக் கூத்தம்

* சொமு. முத்து, கொமாரபாளையம்.

? குமரி அனந்தன் இ. காங்கிரஸில் சேர்ந்தது பற்றி?

! மகிழ்ச்சி. ஆனால் இ. காங்கிரஸில் புதிதாக உருவான இன்னொரு கோஷ்டியாகச் செயல்படாதிருக்க வேண்டுமே என்ற கவலையும் கூட.

* எம். கல்யாணசுந்தரம், திருநரையூர்.

? மேற்கு வங்கத்திலும் கேரளாவிலும் பிரபல நடிகர்களின் பிரசாரம் எடுபடவில்லையே?

! பாரத தேசமே அந்த மாநில மக்களை நினைத்துப் பெருமைப்படலாம்.

* பால் செந்தில்குமார், விருத்தாசலம்.

? எஸ்.எஸ்.எல்.சி. கேள்வித்தாள் 'அவுட்' ஆனது பற்றி?

! அவுட் ஆனதில் ஏற்பட்ட மகிழ்ச்சி மறுதேர்வு என்றதும் மறைந்திருக்கும். ஒரு சிலரின் கவனக் குறைவால் செங்கல்பட்டு மாவட்டப் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இரட்டைத் தலைவலி.

* முகமது இப்ராஹிம், தோஹா குவடார் (கல்ஃப்)

* எம். டி. பழனி கதிர், ஆலங்குளம்.

? தமிழகத்தில் தற்போது நிம்மதியின்றித் தூங்குபவர்கள் யார்?

! அந்த ஒன்பது பேர்!

* அ. தாஜ்மஜீத், திருமயம்.*

? சென்னை ஜி. ஹெச்சில் ஓர் ஆசிரியை கற்பழிக்கப்பட்டது போன்ற கொடுமைகளுக்கு முடிவு கட்டத் தாங்கள் கூறும் யோசனை?

! அ. கற்பழிப்புக்குத் தரப்படும் தண்டனை அதிகரிக்கப்பட வேண்டும்; கடுமையானதாக இருக்க வேண்டும். ஆ. கற்பழிக்கப்பட்ட பெண்கள் அவமானம் காரணமாக அதனை மறைக்காமல் தைரியமாக வெளியிட முன்வர வேண்டும். இ. ஏற்கெனவே அறிமுகமில்லாத ஒருவனால் தான் கற்பழிக்கப்பட்டதாக எந்த ஒரு பெண்ணும் புனைந்துரைக்க மாட்டாள் என்பதால், கற்பழிப்புக் குற்றம் சாட்டப்பட்டவனுக்காக வாதாடும்

வழக்குரைஞர்களின் வாதத்துக்கு, நீதிபதிகள் மிகக் குறைந்த அளவே மதிப்புத் தர வேண்டும்.

* அ. து. பூவராகன், விருத்தாசலம்.

? டால்டாவிற்கும், ரசத்திற்கும், ஊறுகாய்க்கும் பதில் சொல்ல ஆரம்பித்து விட்டீர்கள். வேதனை! மிக்க வேதனை! தங்களிடமிருந்து வாசகர்கள் எதிர்பார்ப்பது சத்தான விஷயங்களைத்தான்.

! ஆப்பிளும் ஆரஞ்சும் சாப்பிடலாம். சத்து மிகுதி. ஆனால் கோடை காலத்தில் மலிவாகக் கிடைப்பது கிர்ணி, தர்பூசு. உடம்புக்கு ரொம்ப நல்லது. இவற்றைச் சர்க்கரை சேர்க்காமல் சாப்பிடப் பழகுங்கள்.

* ஆர். சித்ரா, திருச்சி.

? ஏப்ரல் ஃபூல்...?

! தொழில் வர்த்தகத் துறைக்கு உதவும் நோக்கில் மத்திய அரசு ஏப்ரல் முதல் தேதியன்று வங்கி வட்டி விகிதங்களைக் குறைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொண்டு தொழில் வர்த்தகத் துறை தானும் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்தப் போகிறதா அல்லது அரசை ஏப்ரல் முட்டாளாக்கப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

* உஷாராணி மலர்மன்னன், நெய்வேலி.

? ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து செலுத்தப்பட்ட ராக்கெட் தோல்வி கண்டது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! அமெரிக்காவும் ரஷ்யாவும் பல தடவை விழுந்து எழுந்துதான் இந்த அளவுக்கு முன்னேறின. வல்லரசுகளின் உதவியின்றி நாமே சுயமாக விண்வெளிச் சோதனைகளில் ஈடுபடும்போது சில தோல்விகள் தவிர்க்க முடியாதவைதான். காலில் குத்துகிற முள்ளை எடுத்துப் போட்டுவிட்டு நடக்கிற மாதிரி, முன்னேறத்தான் முயல வேண்டும்.

* 'அனுராதா ஆபஸ்தம்பன்', குடியாத்தம்

? அண்மையில் உங்களை உலுக்கிய சம்பவம்?

! உங்கள் புனை பெயரைப் படித்ததுதான்!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'இ. காங்கிரஸ் கூட்டணிக்கு வாக்களித்தால் தமிழகத்தைப் போன்ற ஆட்சி இங்கு அமையும்' என்று எம். ஜி. ஆர். கேரளத் தேர்தல் கூட்டத்தில் பேசியதில் பயந்து போய்த்தான் மக்கள் இ. காங்கிரஸைத் தோற்கடித்து விட்டனர் என்ற கருணாநிதியின் கருத்து மிகச் சுவையாக இருக்கிறதல்லவா?

! கருணாநிதியின் வாக்குச் சாதுர்யத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. அந்த நயத்தை ரசிக்கப் பேரினால் தராசு கருணாநிதியின் ஆள் என்று எம்.ஜி. ஆர். பக்தர்களால் முத்திரை குத்தப்படுவதுதான் வேதனை!

* ஆர்.கே. லிங்கன், மேலகிருஷ்ணன்புதூர்

? கேரள முதல்வராக நாயனார் பதவி ஏற்றிருப்பது குறித்து?

! தகுதியான ஒருவருக்குத்தான் முதல்வர் பதவி தரப்பட்டிருக்கிறது என்றாலும் கே. ஆர். கௌரி முதல்வராவார் என்ற பிரசாரத்தால் ஈர்க்கப்பட்டு அதற்காகவே வோட்டுப் போட்டவர்களுக்கு ஏமாற்றமே.

* சுந்தர், கோவை

? கஜ பூஜைக்காகக் கோவையில் நடைபெறும் 108 யானைகள் ஊர்வலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! "மொட்டைக் கோபுரத்திலும் ஒரு கவிதை உண்டு; அது ராஜ கோபுரமாக மாறியதில் எனக்குத் தனிப்பட்ட முறையில் ஓர் இழப்பு ஏற்பட்டிருக்கிறது" என்று சுஜாதா எழுதியதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொங்கி எழுந்த ஆஸ்திகப் பெருமக்கள், நான் 108 யானைகளை வைத்து கஜ பூஜை செய்வதைப் பற்றி எழுதினால் தாங்கிக் கொள்ளவா போகிறார்கள்? ஆளை விடுங்கள்!

* எஸ்.கனகராசன், காட்டுமன்னார்கோயில்.

? ஜனாதிபதி பிரதமருக்கு எழுதிய ரகசியக் கடிதம் அம்பலமானதில் அரசுத் தரப்பில் ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும் என்று தலையங்கத்தில் எழுதியது சரி. ஆனால் அந்த ஓட்டைகளைச் சட்டவிரோதமாகப் பத்திரிகைகள் பயன்படுத்துவது எவ்வகையில் நியாயம்?

! பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் தகவல்களை, அவை தேசப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காத வரை, வெளியிடுவதில் சட்ட விரோதம் ஏதுமில்லை. சட்டப்படி குற்றமெனில் எக்ஸ்பிரஸ் மீது அரசு இதற்குள் வழக்குத் தொடுத்திருக்குமே! எக்ஸ்பிரஸ் தனது கடமையைத்தான் செய்திருக்கிறது. இதுபோன்ற முக்கியமான உண்மைகளைப் பத்திரிகைகள் வெளியிடாமல் மறைப்பதுதான் ஜனநாயகத்துக்கும் பத்திரிகை தர்மத்துக்கும் துரோகம் இழைப்பதாகும்.

* ரூ. 10 பரிசு பெறுபவர்:

அ. தாஜ்மஜீத்,
மே/பா. அகமது லெப்பை,
திருமயம் — 622 507.
புதுக்கோட்டை மா.வ.

பொன்மொழிப் போட்டி-4 முடிவு

சரியான விடை:

டி.எஸ். எலியட்: நமது வாழ்க்கை வெறும் பிழைப்பாகப் போய்விட்டால் மனிதன் வெறும் மிருகமாகப் போய்விடுவான்!

சத்யசாயிபாபா: கடவுளை வெறும் படமாக எண்ணி வழிபடாதே; படத்தைக் கடவுளாக நினைத்து வழிபடு. இது படிப்படியாகக் கடவுளை உனக்குள் காண வழி வகுக்கும்.

பைபிள்: அடுத்தவன் உனக்கு என்னவெல்லாம் தரவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அவற்றை அடுத்தவனுக்கு நீ கொடு!

ராஜாஜி: எதையும் சரியான அளவில் செய்யப் பழக வேண்டும். நல்ல விதையானாலும் வயலில் மிதமிஞ்சித் தெளிப்பதில் பயனில்லை. வீண் நஷ்டம்.

சரியான விடைகளை 474 வாசகர்கள் எழுதி அனுப்பியுள்ளனர். ரூ 200/— பரிசைச் சமமாகப் பகிர்ந்தளித்தால் தலா 45 காசுகள் மட்டுமே கிடைக்கும் என்பதால், ஒவ்வொருத்தருக்கும் ஏப்ரல் மாத கோகுலம் இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது.

பரிசு பெறுகிறவர்கள்: 1. ஜெ. ரமாதேவிப்ரியா, சென்னை—110; 2. எஸ்.பி. சுப்ரமணியன், சின்ன சேலம்; 3. எஸ். சுந்தரராஜன், திருநெல்வேலி; 4. கே. கே. பச்சையப்பன், கூகலூர்; 5. என். ராம்தாஸ், சென்னை — 81; 6. அன்பில் உதயா, கொன்னக்குடி; 7. எம். பிரகாஷ், திருத்தொண்டைநல்லூர்; 8. இர. நிர்மலா, திருச்சி—17; 9. ஆர். ராஜசேகர், ஈரோடு; 10. ஆர். வேங்கடசுப்ரமணியன், சென்னை—15; 11. என். பாலகிருஷ்ணன், சென்னை—43; 12. எஸ். கலைவாணி, நெய்வேலி—3; 13. மலர்விழி, பாபநாசம்; 14. நா. மயில்சாமி, வேட்டைக்காரன் புதூர்; 15. ஆர். கோபாலகிருஷ்ணன், தஞ்சாவூர்—9; 16. எஸ். ஜெயராமன், கும்பகோணம்; 17. மு. பாலசண்முகம், உடையாம்பாளையம்; 18. ஆர். ராஜாராமன், மதுரை—20; 19. எம். நாதன், சென்னை—11; 20. கே. பத்மாவதி, தக்கோலம்; 21. ஆர். சதானந்த், சென்னை—53; 22. கே. ராஜகோபால், கரியமாணிக்கம்; 23. எஸ். சரோஜா, பெங்களூர்—19; 24. வி. இராமதுரை, மயிலாடுதுறை; 25. ஆர். கௌரி, இந்தூர் (மத்தியப் பிரதேசம்) 26. எஸ். தங்கவேல், புதுடெல்லி—5; 27. ஆர். திருநாவுக்கரசு, திருவாரூர்; 28. டி. ராம் மோகன், அம்பாசமுத்திரம்; 29. எஸ். ஜயலக்ஷ்மி, சேலம்—7; 30. ஏ. வரதராசன், சென்னை—88; 31. வி. சித்ரா, தகடி அஞ்சல்; 32. ஏ. கன்னியப்பன், சென்னை—89; 33. எஸ். பாகீரதி, சென்னை—33; 34. லாசரஸ் ஜெயநந்தன், பெங்களூர்—13; 35. எஸ். பானு கௌசல்யா, சென்னை—61; 36. டி.ஆர். மஹாதேவன், சென்னை—2; 37. ஆர். பட்டு, பூனே; 38. சுபஸ்ரீ சாரி, குவாலியர்; 39. டி. ராஜேஸ்வரி, திருத்துறைப்பூண்டி; 40. எஸ். ஜமுனா காந்தி, திருப்பூர்; 41. வி. துளசி, தூத்துக்குடி—2; 42. வி. இராஜேந்திரன், குடவாசல்; 43. எஸ். கலாதாரிணி, பம்பாய்—31; 44. சித்ரா பத்மநாபன், நாகர்கோவில்; 45. சுசீலா சடகோபன், சென்னை—102; 46. கே. ராதாகிருஷ்ணன், சென்னை—73; 47. கே. அவனுசியப்பன், சிங்கம்புணரி பேட்டை; 48. சுசீலா ஜம்புநாதன், சென்னை—20; 49. க. விஜயலட்சுமி, திருச்சி—14; 50. வி. கிருஷ்ணசுவாமி, நகரி; 51. ஷாகுல் ஹமீது, சென்னை—43; 52. ஆர். எம். கமலா, திருச்சி—18; 53. ஜி. முத்துக்கிருஷ்ணன், சென்னை—10; 54. ஜி. முத்துலக்ஷ்மி, பாளையங்கோட்டை; 55. கி. ராமகிருஷ்ணன், பெங்களூர்—12; 56. கல்பனா ஜெயபால், விரசோழன்; 57. எஸ். மீனாட்சி தேவி, நாகூர்; 58 எஸ். ராமமூர்த்தி, பாளையங்கோட்டை; 59. ஏ. கணேசன், டோம்பிவில்லி கிழக்கு; 60. என். சுந்தரமூர்த்தி, சிதம்பரம்; 61. ஜி.எஸ். சீனிவாசன், லக்ஷ்மிபுரம், (கோவில்பட்டி); 62. கமலா கிருஷ்ணன், மாஜேனுஜிப்பட்டி; 63. வை.மு. தாசன், மதுரை — 1; 64. எஸ். கௌசல்யா, ஹைதராபாத் — 44; 65. கி. பாரதி, நாமக்கல்; 66. ச. சா. வெங்கடேசன், சென்னை — 90; 67. கே. எஸ். ரகுபதி, அருப்புக்கோட்டை; 68. வி. பாலகிருஷ்ணன், மதுரை—20; 69. என். அலமேலு, மதுரை—16; 70. ஏ. கோபிகிருஷ்ணா, வேலூர் (வ.ஆ.); 71. கே. பத்மா, சென்னை—28; 72. கே.என். லலிதா, சென்னை—23; 73. பி. மரியா ஃபாதிமா, சென்னை—16; 74. கே. ஹேமா, இந்துநகர்; 75. எம்.வி. கண்மணி தேவதாசன், வேலூர்—2 (வ.ஆ.); 76. சரோஜா ரங்கன், சென்னை—20; 77. எஸ். கோலப்பன், விக்ரமசிங்கபுரம்; 78. சுதா ஹரன், டும்கூர்; 79. சந்திரிகா ரவி, வாணியம்பாடி; 80. எஸ். பழனி, திண்டிவனம்; 81. எஸ். லதா, வாரங்கல்; 82. எஸ். முத்துக் கிருஷ்ணன், தஞ்சாவூர்—9; 83. கே. மோகன், சென்னை—33; 84. நா. இராஜேஸ்வரி, சென்னை—34; 85. எஸ். சுகந்தி, திருச்சி—6; 86. எஸ். ஏ. பழனிவேல், சென்னை—77; 87. வெ. இராமதாசன், காலாப்பட்டு; 88. மீனாட்சி வைத்தியநாதன், சென்னை—80; 89. எ.எஸ். ராமகிருஷ்ணன், சென்னை—94; 90. வி.என். ஸ்ரீதரன், கும்முடிப்பூண்டி; 91. வி. சங்கரநாராயணன், சென்னை—59; 92. என். ஜெயா, கோவை—12; 93. மன்னை. மௌனி, மன்னார்குடி; 94. எஸ். மீனாட்சி சுந்தரம், மதுரை—1; 95. மா. கணபதி, சங்கரன்கோவில்; 96. பி.மதுரம் ஸ்ரீராம், தஞ்சாவூர்—9; 97. ஜி. முருகவேல், மதுரை—1; 98. புவனேசுவரி, கல்கத்தா—45; 99. திருமதி எஸ். ராமசாமி, பம்பாய்—83; 100. கி.எஸ். ஹனுமந்தராவ், கோவை—12; 101. எஸ். சுந்தர சீனிவாசன், ஸ்ரீவில்லிபுத்தூர்; 102. வி. ராமசந்திரன், சென்னை—33; 103. பி.ப. சடகோப ராமானுசன், சென்னை—44; 104. பி. ஆர். சம்பத், சென்னை—33; 105. சாந்தா கிருஷ்ணன், சென்னை—18; 106. கி. ரவிச்சந்திரன், அண்ணாமலை நகர்; 107. வா. ஆண்டாள், சின்ன வேடம்பட்டி, (கோவை மா.வ.); 108. சைலா சிவராமன், ஸ்ரீரங்கம்; 109. அசோக ராஜா, கோவை; 110. பி. முனியசாமி, அறந்தாங்கி; 111. என். பாரதி, கோவை—30; 112 உமா வைத்தியநாதன், பாண்டிச்சேரி; 113. க. இராமச்சந்திரன், அவிநாசி; 114. எம். ஜெயலக்ஷ்மி, புதுக்கோட்டை; 115. எஸ். சுப்பிரமணியன், மேலக்கட்டுடன்காடு அஞ்சல்; 116. கா. கனிமொழி, கம்பம்; 117. இதய கீதா, விருதுநகர்; 118. ரமா வரதராஜன், மதுரை—1; 119. ஹரிப்ரியா சாம்பசிவன், சென்னை—28; 120. எஸ். ராமச்சந்திரன், பரோடா; 121. கே.வி. பாலகிருஷ்ணன், பள்ளப்புறம் (பாலக்காடு); 122. விசாலம் சுவாமிநாதன், சென்னை—4; 123. சாய்கிஸ், கோவை; 124. என். குருநாதன், திண்டிவனம்; 125. கௌரி வெங்கட்ரமணி, சென்னை—18; 126. வி.எஸ்.தே. செல்வி, உடையார்பட்டி; 127. சாவித்திரி வடிவேல், பிரான்மலை; 128. பி. துரைராஜ், கிரிநகர் (பூனே); 129. எஸ். சுவாமிநாதன், திருச்சி—17; 130. ஜி. பாலசுப்ரமணியன், அழகாபுரணி; 131. எஸ். ரங்கநாதன், கோவை—19; 132. ஆர். அரிகோபி, குடியாத்தம்.

(மற்ற பெயர்கள் அடுத்த இதழில் இடம் பெறும்.)

வனத்தில் ஒரு வால்மீகி

காலை புலருகின்ற வேளை ஆனபடியால் கல்லூரி ஹாஸ்டல் களை கட்ட ஆரம்பித்திருந்தது.

விடிகாலையே எழுந்து விடும் பழக்கமுடைய விஜயன் அன்றும் வழக்கம் போல் காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கடைசிக் கட்டமாக இறைவழிபாட்டையும் பூர்த்தி செய்து கொண்டு எதேச்சையாக வாசல் பக்கம் திரும்பியபோது, அங்கே அறை வாசலில் தன் தந்தை நிற்பதைப் பார்த்தான். ஊரில் இருந்து வந்திருக்கிறார்.

அது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை....!

நான்கு நாட்களுக்கு முன்பு விஜயனே வீட்டுக்கு விவரமாகக் கடிதம் எழுதியிருந்தான். 'இன்னும் ஒரு வாரத்துக்குள் வருகிற செமஸ்டர் பரீட்சைக்கான ஃபீஸ் கட்டியாக வேண்டும் என்று! எப்போதுமே அவனுக்குப் பணம் ஊரிலிருந்து 'காசுக் கட்டளை'யாக வருவது இல்லை. கையும் மெய்யுமாக அவனுடைய அப்பா வடிவத்தில்தான் வரும். இப்போதும் அப்படித்தான்....!

"தம்பி, உன் கடுதாசி கிடைச்சுது. விவரம் பார்த்தேன். இன்னும் கொஞ்சம் முன் கூட்டியே நீ அந்தக் கடுதாசியை எழுதியிருக்கலாம். ஒரு வாரத்துக்குள்ளே நூத்தைம்பது ரூபாய் வேணும்னு நீ குறிப்பிட்டிருந்ததைப் பார்த்ததும்- கொஞ்சம் தடுமாறிப் போயிட்டேன். நம்ம பக்கம்தான் இப்போ மழையும் இல்லே; தண்ணியும் இல்லே. விளை நிலமெல்லாம் வீணாக் கிடக்கு. என்ன செய்யறதுன்னே எனக்குப் புரியலே....!" என்றார் அப்பா.

"எப்படியோ தம்பி.... ஒரு வழியாப் பணத்தைச் சேர்த்துக் கொண்டு வந்திருக்கேன். காலேஜ் ஆபீஸுக்குப் போய்ப் பணத்தைக் கட்டிவிட்டு வந்து விடுவோமா...!" என்றவர், அந்த நூற்றைம்பது ரூபாய்க்காக விஜயனின் அம்மாவுடைய வளையல் மார்வாடி கடைக்குப் போய்விட்டது என்பதைத் தன் பிள்ளையிடம் விளம்பரப்படுத்திக் கொள்ளவேயில்லை.

தோல் பையை எடுத்துத் திறந்து பார்த்தவருக்குப் 'பகீர்' என்றது....! அதன் அடிப்பாகம் பிளேடால் கீறப்பட்டிருந்தது!

அப்பாவின் நிலையைக் கண்டு விஜயனுக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது. நூற்றைம்பது ரூபாய் சுளையாகத் தொலைந்து போய்விட்டதே என்றுகூட விஜயன் அயரவில்லை. 'எப்படியோ சேர்த்

ரிஜய்மாருதி



துக்கொண்டு வந்திருக்கிறேன்' என்று அவனுடைய அப்பா ஏனோதானோவாகச் சொன்னாலும், அந்த ரூபாய்களைச் சேர்க்க அவர் எத்தனை கஷ்டப்பட்டிருப்பார் என்பதை விஜயன் உணராமல் இல்லை. அப்பாவுடைய அத்தனை சிரமங்களும் இப்போது விழலுக்கு இறைத்த நீராகப் போய்விட்டதே என்பது தான் அவனுடைய வருத்தம்.

இதே மனநிலையில் அப்பாவை இன்னும் கொஞ்சம் நேரம் இருக்கவிட்டால் எங்கே அவர் இதயம் வெடித்துச் செத்துப் போய் விடுவாரோ என்று விஜயன் அஞ்சினான்.

"அப்பா..... இதற்காக ஏன் வருத்தப்படுறீங்க? இப்போ அக்டோபர்லே எழுதப் போற பேப்பர்களை வர்ற மார்ச்லே சேர்த்து எழுதிட்டாப் போச்சு. இதுக்காக நீங்க மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க அப்பா!"

"தம்பி, காலாகாலத்திலே செய்ய வேண்டிய காரியங்களைக் கஷ்டப்பட்டாவது செஞ்சு முடிச்சுடணும். காசை விட்டுட்டோமானா, அதைத் திரும்பப் பிடிச்சுடலாம். ஆனால் காலத்தை விட்டுட்டா அதைத் திரும்பப் பிடிக்கவே முடியாது. நான் இன்னைக்குச் சாயந்தரமே உன் மாமாவைப் போய்ப் பார்த்துப் பணம் வாங்கி வந்துடறேன். நாளைக் காலையிலே எப்படியும் கட்டிடுவோம்...."

அவர் இன்னும் தன் பேச்சைச் சரியாகக் கூட முடிக்கவில்லை.

"அப்பா....!" என்று இரைந்தே விட்டான் விஜயன்.

அவன் காதுகளை அவனாலேயே நம்ப முடியவில்லை. அப்பாவா இப்படிப் பேசுகிறார்? தன் தாயோடு உடன்பிறந்த சகோதரன் சண்முக மாமாவையா அப்பா இப்போது போய்ப் பார்த்துப் பேசிப் பணம் வாங்கி வருவதாகச் சொல்கிறார்...? அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

விஜயனின் தாய் மாமன் சண்முகம் இதே நகரில்தான் இருக்கிறார். என்ஜினியரிங் ஒர்க்ஸ் ஒன்றின் உரிமையாளர். நான்கு குடும்பங்களை ஏக நேரத்தில் பராமரிக்கக் கூடிய அளவுக்கு நல்ல வசதி. ஆனால் விஜயனின் தந்தை, கூழைக் குடித்துக் கொண்டு ஜீவித்திருந்தாலும், கௌரவம் குலையாமல் வாழ வேண்டும் என்ற கொள்கை உடையவராக இருந்ததால் இதுநாள் வரைக்கும் பணத்துக்காகச் சண்முக மாமா வீட்டுப் படியேறிய இல்லை....

அவரா இப்போது அதற்கும் தயார் என்கிறார்...? மனமுடைந்து போனான் விஜயன்.

மறுநாள் காலை பத்து மணிக்கு மேலாக விஜயனும் அவன் தந்தையும் கல்லூரி அலுவலகம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

முன்சொன்னபடி விஜயனின் தந்தை முந்தைய நாள் மாலை வெளியே கிளம்பிச் சென்றவர், மீண்டும் ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தபோது கையில் பணத்தோடு வந்தார். மாமாவிடமிருந்துதான் வாங்கி வந்திருக்க வேண்டும்....!

கவுண்டரை நெருங்கிய விஜயன் அங்கே ஆசனத்தில் அமர்ந்திருந்த எழுத்தரிடம் தன் பெயரையும் கல்லூரிப் பதிவேட்டு எண்ணையும் கூறிப் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும் என்று சொன்னான்.

பேனாவைத் திறந்து பேப்பரில் எழுதுவதற்காகக் குனிந்த எழுத்தர், மேற்கொண்டு எழுதாமல் தயங்கியபடியே விஜயனிடம் மீண்டும் அவனுடைய பெயர், ரோல் நம்பர் முதலியவற்றைத் திரும்பக் கூறும்படி கேட்டார்.

விஜயன் சொன்னான்.

"என்ன தம்பி.... நேற்றுதானே இதே பெயர்.... ரோல் கால் நம்பருக்குப் பணம் கட்டி இருக்கு....!" என்றார் எழுத்தர்.

"சார்.... விஜயன் பெயருக்கு யார் பணம் கட்டியிருக்கிறார்கள் என்று தயவு செய்து கூற முடியுமா?" என்றார் அவன் தந்தை.

"ஒரு நிமிஷம்...." என்றபடியே எழுத்தர் ஏதேதோ பேப்பர்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "பிரகாசம் என்பவர் கட்டியிருக்கிறார் சார். அதுவும் நேற்று மாலை கடைசியா கட்டியிருக்கிறார்!" என்றார்.

பிரகாசம்...., யார் அவர்....?

விஜயனுக்குத் தெரியவில்லை. அவன் தந்தைக்கும் புலப்படவில்லை.

ஆனால் மூன்றும் மனிதருக்கு முன்பாகத் தங்கள் அந்தரங்க விஷயங்களை அம்பலப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று விஜயனின் தந்தை நினைத்தாரோ, என்னவோ....?

"ஓ... பிரகாசம் பணம் கட்டிவிட்டாரா? அவர் பணம் கட்டியிருக்கிறாரோ, இல்லை, மறந்து போயிருப்பாரோங்கிற சந்தேகத்துலேதான் நாங்க இப்போ பணம் கட்ட வந்தது..." என்று சமாளித்தபடியே விஜயனையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் அவன் தந்தை.

"அப்பா....!" என்று இழுத்தான் விஜயன்.

"யார் அந்தப் பிரகாசம்னுதானே நீ இப்போ தெரிஞ்சுக்க விரும்பறே. விஜயா, அது உனக்குத் தேவையில்லாத விஷயம். அவர் யாராக இருந்தா உனக்கு என்ன...?"

"அப்பா, இப்போ என்னோட கவலையெல்லாம் அது அல்ல. இதுவரைக்கும் நீங்க யார் வீட்டுப் படியையும் அனாவசியமா மிதிச்ச இல்லை. அந்த மாமா வீட்டு வாசலுக்கு இப்போ எனக்காக நீங்க போய் வந்த காரியம் ஒரு வழிக்கும் பிரயோஜனம் இல்லாமப் போயிடுச்சே அப்பா. அதுதான் எனக்கு வருத்தமாயிருக்கு....!"

விஜயனின் தந்தை முகத்தில் புன்னகை படர்ந்தது.

"தம்பி.... உன் அப்பாவைப் பத்தி நீ இன்னமும் நிறையத் தெரிஞ்சுக்க வேண்டி இருக்கு. நேற்று உன்கிட்ட நான் ஒரு வேகத்துலே மாமா வீட்டுக்குப் போய் வர்றதாச் சொன்னது உண்மைதான். ஆனால் நான்

அங்கே போகலே. என்னோட கடிகாரத்தை மார்க்கெட்டுல வித்துப் பணமாக்கிட்டுத் தான் வந்தேன். கௌரவத்தை வித்துட்டு வந்து நிக்கலேப்பா....!"

விஜயன் விவரிக்க முடியாத மனநிலையில் சிலையாகிப் போனான்:

'**யா**ர் இந்தப் பிரகாசம்...?'

ஈஸிசேரில் சாய்ந்தபடி இதே சிந்தனையில் இருந்தவரை, போஸ்ட்மேனின் குரல் உலுக்கியது. தபாலை வாங்கி முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தார். அனுப்புநர் என்ற இடத்தில் 'பிரகாசம்' என்றிருந்தது.

நெஞ்சு படபடக்கக் கடிதத்தைப் பிரித்தார்; படித்தார்.

'ஐயா,

என் பெயர் பிரகாசம். என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை எனக்குத் தெரியும். எப்படி என்று ஆச்சரியப்படுகிறீர்களா? மூன்று தினங்களுக்கு முன்பாகச் சென்னை சிட்டி பஸ்ஸில் உங்களிடம் பிக்பாக்கெட் அடித்தவனே நான்தான்.

திருடன் என்றதுமே முகம் சுளித்து விடாதீர்கள்.

நானும் மனிதன்தான். என்னை நம்பி என் மனைவி, இரு குழந்தைகள் இருக்கிறார்கள். எனக்கு அன்றாடம் குறைந்தது பத்து ரூபாய் தேவைப்படுகின்றது. அப்போதுதான் நாங்கள் ஜீவித்தே இருக்கலாம். அந்தப் பத்து ரூபாயை அன்றாடம் நல்ல வழிகளில் அடைந்துவிட நானும் பலமுறைகள் முயற்சி செய்துருக்கேன். ஆனால் இந்தப் பிக்பாக்கெட் வழி ஒன்றுதான் எனக்குக் கடைசியாக அமைந்து போய்விட்ட விதி....!

இதில் ஓர் ஆச்சரியம் — இதுநாள் வரையிலும் என்னுடைய கைங்கர்யத்தில் எனக்குத் தேவையான அந்தப் பத்து ரூபாய்தான் ஏறக்குறைய கிடைத்துக் கொண்டு இருந்தது. ஆனால் இம்முறை உங்களிடம் பிக்பாக்கெட் அடித்தபோது ஒரு நூறு ரூபாய், ஒரு ஐம்பது ரூபாய் இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள்... உங்கள் பையன் உங்களுக்கு எழுதியிருந்த கடிதம், இத்தனையும் இருந்தன. என் தேவைக்கு அதிகப்படியான தொகை என்னுடைய தொழிலிலேயே முதன்முதலாகக் கிடைத்தது.

பணத்தைப் பார்த்தபோது எனக்குச் சந்தோஷம்தான். ஆனால் அந்தக் கடிதத்தைப் படித்தபோது அந்தச் சந்தோஷம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. உங்கள் பையன் படிப்புக்காக நீங்கள் கட்டப் போகின்ற பணத்தை நான் எடுத்து என் பிள்ளை குட்டிகளுக்குப் பதினைந்து நாட்கள் சோறு போட்டால், ஓர் இளைஞனின் எதிர்காலத்தையே அழித்தவனாகி விடுவேன் என்று புரிந்தது. இப்படி ஒவ்வொரு முறை திருடும்போதும் ஒவ்வொருத்தர் வாழ்க்கையை நாசமடிக்கிறேனோ? என்று எனக்குள்ளே கேள்வி எழுந்தது.

இதுநாள் வரையிலும் எனக்குப் புலப்படாது இருந்த ஓர் உண்மையை நான் உங்கள் மூலம் அறிந்தேன். அதனால்தான் கடிதத்தில் கண்டபடி நானே கல்லூரிக்குப் போய் உங்கள் பையன் பெயருக்கு நூற்றைம்பது ரூபாயைக் கட்டிவிட்டு பாக்கி இருபது ரூபாயை மட்டுமே வைத்துக்கொண்டேன்.

ஐயா.... என்னைப் பற்றி நீங்கள் எப்படி நினைத்தாலும் சரி, உங்களிடம் ஒன்று சொல்கிறேன். இனியொருமுறை எனக்கு அன்றாடம் தேவைப்படும் அந்தப் பத்து ரூபாயை நல்ல வழிகளில் அடைய நான் முயற்சி செய்கிறேன். ஆனால் மீண்டும் நான் திருடனாக மாட்டேன் என்பதற்கு இது உத்தரவாதம் அல்ல.

கடிதம் முடிவடைந்துவிட்டது.

விஜயனின் தந்தை முகத்தில் யாரோ விளக்கேற்றி வைத்தது போன்ற ஒரு பிரகாசம்....! பிரகாசத்தைப் பற்றி அவர் புரிந்து கொண்டுவிட்டார் அல்லவா...? முகம் தெரியாத அந்தப் பேர்வழி மீது — வனத்தில் இருக்கும் வால்மீகி மீது — இனம் தெரியாத ஒரு மதிப்பு அவருடைய இதயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

அடுத்த இதழ்

இராமநாதபுரம் மாவட்டத்தில்
கல்வி—I

* "பள்ளிக்கூடம் நானறியேன்..
பாதையிலும் நடந்தறியேன்..."
— கவர் ஸ்டோரி

* வரம் கேட்டு நிற்கும் கோயில்கள்
— சிறப்புக் கட்டுரை







சங்கர் குரு

ஆக்ஷன் ஹீரோ என்று யார்தான் பெயர் சூட்டினார்களோ. அர்ஜுன் நிஜமாகவே சுறுசுறுப்பு திலகம்தான். (முக பாவம் — விதிவிலக்கு) அந்தர் பல்டி, சிலம்பு வீச்சு, கராத்தே உதை என்று மனிதர் பின்னி எடுத்திருக்கிறார்.

பேபி ஷாலினியை அனாதை என்று சொன்னவுடன் நமக்குப் பரிதாபம் கங்கை ஊற்றாகச் சுரந்து வருகிறதென்றால் அதற்குக் காரணம் ஷாலினியின் 'சிவாஜி' நடிப்பு.

ஒவ்வொரு வில்லச் சகோதரனை நார் நாராகக் கிழிபட்டு ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆவதும், கிண்டல்கார டாக்டர் விசு, அவர்களுக்கு உறுப்பு மாற்றி வைத்து வைத்தியம் செய்வதும் ரசிக்கக் கூடிய காட்சிகள்.

ஒய்.ஜி. மகேந்திரன் எதற்கு? பாவம்!

ஒரு பக்கம் சசிகலா, ஒருபக்கம் சீதா. இரண்டு கதாநாயகிகள் இருந்தும்கூட கிளுகிளுப்புக்குப் பஞ்சம் என்றால் எடுத்துக் கொண்ட கதைதான் காரணம். இருந்தால் என்ன, டூயட்களை வைத்து நிரப்பி விடுகிறார்களே.

வேட்டைக்கார சரத்பாபு, அவர் மனைவி ராஜலக்ஷ்மி அவர்களுடைய குழந்தை ஷாலினி. கதையில் கொஞ்ச நேர உலாவல் தான் என்றாலும் ஆரோக்கியமான உலாவல். அதுசரி, இன்றையத் தேதிக்கு மிருகங்களை வேட்டையாடி ஒரு வேட்டைக்காரன் பிழைப்பு நடத்துகிறான் என்றால் அது அவ்வளவு நன்றாகவா இருக்கிறது?

செந்தாமரையின் சிரிப்பு + நடை = எகத்தாள வில்லன்.

இந்த அர்ஜுன் கிருஷ்ண பகவானா என்ன? சசிகலா மச்சர் பாம்புடன் மல்லுக் கட்டும் நேரத்திலும் வில்லன் அவர் சேலையை உருவும் நேரத்திலும் திடீரென்று எங்கேயிருந்து எப்படி நுழைந்தார்?

பறக்கிற காக்காய்க்கு இறக்கையை எண்ணுகிற அம்மா மனோரமா.

திடுதிப் இன்ஸ்பெக்டர் அர்ஜுனுக்கு சோறு எடுத்துப் போகும் பெண்ணாக சீதா. மனோரமாவின் கிண்டலும், சீதாவின் வெட்கமும் இதம்.

ஸ்டண்ட் ஸீன்கள் எல்லாமே திகட்டுகிற அளவுக்கு இனிப்பு!

சந்திரபோஸ் ஏறக்குறைய எல்லாப் பாடல்களுக்கும் ஜோராக இசை அமைத்திருக்கிறார். பின் ஏன் ஆடிக்கு ஒரு படம் மட்டும் பண்ணுகிறார்?

க்ளைமாக்ஸ் இருக்கிறதே, அட, அட, சரியான ஜவ்வு மிட்டாய்! பட்டாசு வெடிப்பது போல டப், டப் என்று சுடுவதும் ஹீரோ தப்பிப்பதும் அப்புறம் திடீரென்று வேறு இடத்திற்கு மர டார்ஜானைப் பாய்ந்து சரத்பாபு அன் கோவை விடுவிப்பதும் — ஓவர் மசாலா!

இருந்தாலும் க்ளைமாக்ஸ்வரை விறுவிறு என்று கொண்டு சென்றிருப்பதற்காகவாவது டைரக்டர் ராஜாவை (புதுமுகம்?) பாராட்டித்தான் ஆக வேண்டும்.

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)


கோத்ரெஜ்
புதிய
மேகா
ஏ ஓ எஸ்* கொண்ட
நீல டிடர்ஜெண்ட் கட்டி
என்ன அருமையான சலவை!
MEGA
இந்தியாவின் நட்சத்திரம் ரஜனி
இப்போது மேகா மட்டுமே உபயோகிக்கிறார்.
*ஏஓஎஸ், அதிக நுரையையும் அதிக சலவைத் திறனையும் தரும் அற்புதமான மூலப்பொருள்.



திறப்பீர், தெளிப்பீர், இக்காலத் தீஞ்சுவை பரப்பிக் களிப்பீர்.

இதுவரை செய்தறியாத இலகு முறை. எண்ணிக்கோ 1-2-3 ஆச்சு: 1 பேக்கெட் புதிய ஜூஸி ஃப்ளேவர் க்ரிஸ்டல்ஸ் படிகங்களை ஒரு கூஜாவிலோ, பாத்திரத்திலோ போட்டு, 2 கப் சர்க்கரையும், 3 கப் நீரும் சேர்த்துக் கரைத்தால், முழுசாக 1 புட்டி (பாட்டில்) கான்ஸெண்ட்ரேட் கிடைத்திடும்.

இனிமையில் ஒன்றை ஒன்று மிஞ்சும் 8 விதமான பரவச நறுமணச் சுவைகள் உள்ளன.

ஒருக்காலும் சுவைத்திருக்க மாட்டீர்கள் இத்தகைய சுவையின்பம்—உங்களுக்கு, உங்கள் கண்மணிகளுக்கு.



இந்தியாவிலே தயாரிப்போர்: கே.ஜி.எஃப்
கூட்டுத்துணை: ஜெனரல் ஃபுட்ஸ் கார்ப்., யூ.எஸ்.ஏ.

OBM/8663/TAM